# விழியோரப் பார்வையிலே

இனிய முடிவு கொண்ட
இனிமையான நாவல்

அகிலா கோவிந்த்

விழியோரப் பார்வையிலே * அகிலா கோவிந்த்

விழியோரப் பார்வையிலே

அகிலா கோவிந்த்

இனிய முடிவு கொண்ட
இனிமையான நாவல்

CPL

## பதிப்புரை

பிரபல எழுத்தாளர் அகிலா கோவிந்த் அவர்களின் நாவல்களைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த வரிசையில் அகிலா கோவிந்த் அவர்களின் 'விழியோரப் பார்வையிலே' நாவலை வெளியிடுவதில் பெருமகிழ்வு கொள்கிறோம்.

இந்நாவலில் கதாநாயகி தேவி, கதாநாயகன் கிரிதரன் அவர்களின் காதலை மிக மென்மையாக ஆசிரியர் விவரித்துள்ளார்கள்.

அகிலா கோவிந்த் நாவல்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிறப்புச் செய்தி நிச்சயம் இருக்கும். இந்நாவலிலும் கால்கள் வலுவிழந்து நடக்க முடியாமல் இருக்கும் ரஞ்சனிக்கும் கிரிதரனுக்கும் முதலில் ஒருதலைக் காதலை சொல்லி கடைசியில் திருப்புமுனையாக முடித்துள்ளார். இன்னும் இந்நாவலில் பல சிறப்பம்சங்கள் உள்ளது. அதை விவரித்தால் இந்நூல் அளவு வந்து விடும். அந்த அளவு சிறப்பு மிக்கது இந்நாவல்.

- பதிப்பகத்தார்

CONNEMARA PUBLIC LIBRARY
1 8 FEB 2002
CHENNAI

# விழியோரப் பார்வையிலே...

## 1

தேவி தன் அழகான தலையைச் சாய்த்தபடி எவ்வளவு நேரம் அப்படி பிரமை தட்டி உட்கார்ந்திருந்தாள் என அவளுக்கே தெரியவில்லை. சட்டென பக்கத்து ஸீட் பெண்மணி அவள் டிக்கெட் எடுக்கும்போது சொன்னதை கவனித்து, "நீங்கள் இறங்க வேண்டிய ஸ்டாப்" என்றபோது நினைவுக்கு வந்தாள்.

மெல்ல எழுந்து ஹாண்ட் பேக்கை இறுக்கப் பற்றியவாறு பஸ்ஸில் இருந்து இறங்கினாள்.

அவள் வீடு இருக்கும் ரத்னா காலனியை நோக்கி கால்கள் தானாய் நடந்தபோது வழக்கமான குதி நடை இல்லை. தளர்வாகவே நடந்தாள்.

வீட்டை நெருங்க நெருங்க.. வழக்கமாக வரும் உற்சாகம் துள்ளல் இல்லாமல் சோர்வே பெருகியது.

சிறிய கேட்டைத் திறந்து நுழைந்தவள் காலணிகளை கழற்றியபடி முன் ஹாலை வெறித்தாள்.

அவளது பார்வை அந்த பழைய சாய்வு மர நாற்காலியில் வந்து நின்றது.

அவளது பார்வையைப் போலவே வெறிச்சோடி கிடந்த நாற்காலியின் நிலை கண்டு அவள் கண்களில் நீர் திரை விட்டது.

இந்நேரம் அப்பா அந்த மர நாற்காலியில் அமர்ந்தபடி பேப்பர் படித்துக் கொண்டிருப்பார். அவள் நுழையும் அரவம் கேட்டு மூக்குக் கண்ணாடி கண்களை உயர்த்தியபடி பரபரப்பாய் நிமிர்வார்.

"வா - கண்மணி.." என அன்பொழுக கூப்பிட்டு வாஞ்சையாய் அவளைப் பார்ப்பார்.

தேவியும் அந்த பாசத்தில் தனது இருபது வயது நிலைமையை மறந்து சிறு சிறுமி போல் ஓடிச் சென்று அப்பாவின் கால்மாட்டில் உட்கார்ந்து கொள்வாள்.

எழுபது வயது முதுமையில் நடுங்கும் தந்தையின் கரங்கள் அவள் தலையை மெல்ல வருடும்.

அவள் நிமிர்ந்து கண்களை விரித்துப் பார்க்கும்போது கனிவாய் அவர் முகம் மலரும்.

"இன்று அலுவலகத்தில் நடந்ததைச் சொல்லம்மா..." என்பார் அவர்.



அவ்வளவுதான். தேவி மடை திறந்தாற்போல் ஒவ்வொன்றாய் விவரிக்க ஆரம்பித்து விடுவாள். பியூன் முருகேசனில் ஆரம்பித்து ஹெட்கிளார்க், மேனேஜர் வரை நடந்த வம்பு தும்புகளை ஒன்று விடாமல் சொல்வாள்.

தளர்ந்த வயதில் முடியாத நிலைமையிலும் ஆர்வமான முகத்துடன் சுவாரஸ்யம் பொங்க அவள் சொல்வதையே கேட்டுக் கொண்டிருப்பார். தேவியும் தந்தை முகம் மலர ஆர்வமாய் கேட்பதை உணர்ந்து உற்சாகமாய் அலுவலகத்தில் நடந்த ஒவ்வொரு விஷயத்தையும் ஞாபகப் படுத்தி சொல்வாள்.

அவள் பேச்சு சப்தம் கேட்டதும் உள்ளிருந்து தங்கை சுபாவும், கவிதாவும் ஓடி வந்து விடுவர். முறையே ப்ளஸ் ஒன், ப்ளஸ் டூ படிக்கும் அவர்கள் தங்கள் பங்கிற்கு அக்காவைப் போல் அன்றைய ஸ்கூல் கதையைச் சொல்ல ஆரம்பிப்பர்.

அவர்களைப் பார்த்து கடைசி குட்டித் தம்பி பாலு வந்து விடுவான். அவனது ஆறாம் கிளாஸ் பள்ளி அனுபவம் பெரிய கதை போல் நீளும். ஒரே இரைச்சலும் கேலியும் கூத்துமாய் பேசிக் கொண்டிருப்பதை உணர்ந்து சமையற்கட்டிலிருந்து புன்னகை தவழ வரும் சாந்தமான தாயார் அன்னபூரணி அப்பாவின் பக்கம் போய் எல்லாவற்றையும் ரசிக்க ஆரம்பிப்பாள்.

அப்பாவும் விடமாட்டார். எல்லோரும் அன்றைய அனுபவங்களை சொல்லி முடித்ததும் தன் பங்கிற்கு தனது ஆரம்ப கால மிலிட்டரி அனுபவங்களை, ராணுவ ரயில்வே குட்ஷெட்டில் பணியாற்றியதை விவரிக்க ஆரம்பித்து விடுவார்.

பொழுது போவதே தெரியாமல் எல்லோரும் வாய் பிளக்க அதிசயமாய்க் கேட்பர். அப்போதெல்லாம் தேவி தந்தையையே உற்றுப் பார்த்து விழிப்பாள். தந்தைக்குத் தான் எவ்வளவு சிரமங்கள், கஷ்டமான அனுபவங்கள் என அதிசயித்து வியப்பாள்.

ஒருவாறு இரண்டு மணி நேரம் பேச்சும் கூத்துமாய் நேரம் போன பிறகு எல்லோரும் இரவு உணவுக்காக அமருவர்.

அதுவும் அப்படித்தான்.

நடுநாயகமாக தந்தை அமர்ந்திருக்க சுற்றிச் சூழ அவ்வளவு பேரும் கையில் இட்லி தோசைத் தட்டுடன் அம்மாவின் சூடான தோசையை எதிர்பார்த்து காத்திருந்த படி.

அப்பா ஞாபகப்படுத்தி தன் வாழ்க்கையின் சுவாரஸ்யங்கள் ஒவ்வொன்றாய் சொல்ல.. ரசித்துக் கேட்டபடி சாப்பிட ஆரம்பித்தால்.. மணி இரவு ஒன்பதை தொட்டு விடும்.

அன்றாடம் அலுப்பே இல்லாமல் கேலியும் சீண்டலுமாய், சந்தோஷமும் சிரிப்புமாய் நகரும் நிமிடங்கள் அவை மனம் முழுக்க பூரிப்பாய் வாழ்க்கையை பரவசமாக்கிய தருணங்கள் அவை.

இவை எல்லாம் முன்பு.. முன்புதான்..

இன்று...

இதோ.. அப்பா சாய்வு மர நாற்காலியில் அமர்ந்திருக்க வில்லை. பதிலாய் சுவரில் இருக்கும் புகைப் படத்தில் அழகாய் சிரிக்கிறார்.



திடீரென ஏற்பட்ட ஸ்ட்ரோக், யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் வந்த இதயத்தின் வலி அப்பாவின் உயிரையே கொண்டு போய் விட்டது.

சென்ற மாதம் ஒரு சனிக்கிழமை அது நிகழ்ந்தபோது மொத்த குடும்பமும் நொறுங்கிப் போய் விட்டது.

அப்படியே இடிந்து... முடங்கிப் போனாள் அம்மா. பிரிவின் துயரம் தாங்காமல் துடித்துப் போயினர்.

அன்புச் செல்வங்கள்.

வேதனை, துயரம், இழப்பு, வருத்தம்.. என என்னென்ன வார்த்தைகள் உண்டோ அவ்வளவையும் ஒரு சேர அனுபவித்து துன்பக் கடலில் மூழ்கினர்.

ஆனாலும்.. என்ன செய்ய..? என்ன நேர்ந்தாலும் தினம் தினம் உலகம் விடிகிறதே? வாழ்க்கையின் கடமைகள் சுமையாய் துரத்துகிறதே?

முதலில் சுதாரித்து நிமிர்ந்தவள் தேவிதான்!

அப்பாவின் ஒய்யாரக் குரல் அவள் உள்ளுக்குள் ஒலிக்க ஆரம்பித்தது.

''எழுந்திரு கண்மணி, கவலைப்பட்டது போதும். அப்பா எங்கும் போகவில்லை. உன்னுடன் தான் இருக்கிறேன். இயங்கிக் கொண்டிருக்கிறேன். நீயே இப்படி தலை கவிழ்ந்து கொண்டால் எப்படி? எழுந்திரு... எல்லோருக்கும் தைரியம் சொல். அப்பா ஸ்தானத்தில் இருந்து எல்லோரையும் நல்ல நிலைக்கு கொண்டு வருவது உன் பொறுப்பு...''

அப்பா உள்ளுக்குள் முழங்கியதும் புது தைரியம் கொண்டவளாய் சோகத்திலிருந்து மீண்டு நடமாட ஆரம்பித்தாள் தேவி.

அம்மாவைத் தேற்றினாள். தம்பி தங்கைகளை அரவணைத்து வேதனையைக் குறைத்தாள்.

இதோ.. அப்படியும் இப்படியுமாக ஒன்றரை மாதம் ஓடி விட்டது. வழக்கம்போல் அலுவலகம் சென்று திரும்பிய வள் பழைய நினைவுகள் தாக்க வீட்டினுள் நுழைந்தாள்.

வீட்டு வாசலில்... அவள் வருகையை எதிர்பார்த்து வீட்டு உரிமையாளர் உட்கார்ந்திருப்பது கண்டு திடுக் கிட்டாள் தேவி.




வீட்டு ஓனர் தன் வரவுக்காக காத்து முன்புற மர பெஞ் சில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் தேவிக்கு பகீ ரென்றுதான் இருந்தது.

தடித்த மூக்கு கண்ணாடியும் பருத்த சரீரமும் கொண்ட ஐம்பது வயது கணேசமூர்த்தி அவள் வீட்டுக்கும் அடுத்து இருக்கும் இரண்டு பெரிய வீடுகளுக்கும் உரிமையாளர். கடை வீதியில் கொள் முதல், விற்பனை, பைனான்ஸ் என பலவித தொழில்கள் செய்யும் வியாபாரி, பண விஷயத் தில் சரியான கறார் பேர்வழி.

அப்பா அவருக்கு பயந்தே மாதம் பிறந்த முதல் தேதியே வாடகைப் பணத்தை எடுத்துக் கொண்டு அவரது கடைக்கு ஓடிவிடுவார். பெரிய கும்பிடு போட்டு அவரது



"வாடகைப் பணம் கொடுத்து விட்டேன்.." என தேவி ஆரம்பிப்பதற்குள் கணேசமூர்த்தி படபடவென தலையை ஆட்டினார்.

"அது... அது... வந்து விட்டது. நான் வந்தது வேறு விஷயம்மா..." என்றார் அவர்.

"வேறு விஷயமா?"

"அதாவது..." என்று இழுத்த கணேசமூர்த்தி எப்படிச் சொல்வது என்பது போல் தயக்கம் காட்டினார்.

அவர் எதற்காகவோ இப்படி பீடிகை போடுவது தேவிக்குப் புரிந்தது. அவரே சொல்லட்டும் என்பது போல் அவரையே உற்றுப் பார்த்தாள்.

"அது... வேறு ஒன்றுமில்லை... விலைவாசியெல் லாம் உயர்ந்து விட்டது. பொருட்களின் விலை எல்லாம் முன்பு மாதிரி இல்லை.. அதனால்... அதனால்..."

அவர் மறுபடியும் இழுக்க தேவிக்கு உள்ளூர எரிச்சல் தான் வந்தது. எதையோ விவகாரமாய் சொல்லத் தீர் மானித்து வீடு தேடி வந்தாயிற்று. இதில் போலித்தனமாய் தயக்கம் வேறா!

"எதுவானாலும் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்.." என்றாள் தேவி.

"அதும்மா... எல்லாம் உயர்ந்து விட்டபடியால் வீட்டு வாடகை கொஞ்சம் உயர்த்த வேண்டி இருக்கிறது..."

மெல்ல பழத்தில் ஊசியேற்றுவது போல் விஷயத்தை ஏற்றினார் கணேசமூர்த்தி. அதைக் கேட்ட தேவி உள்ளபடி அதிர்ந்து தான் போனாள்.

இதே கணேசமூர்த்திதான் மூன்று மாதங்களுக்கு முன் வீட்டுக்கு வந்து அப்பாவிடம் மல்லுக் கட்டாத குறையாய் அடித்துப் பேசி ஆயிரம் ரூபாய் வாடகையாய் இருந்ததை ஆயிரத்து ஐநூறாய் ஆக்கி உயர்த்தி விட்டுச் சென்றிருந்தார்.

மூன்று மாதங்களுக்குள் மறுபடியும் வாடகையை உயர்த்த வேண்டுமா? என்ன நியாயம் இது!

சினம் தோன்றியவளாய் நிமிர்ந்து பார்த்தவள், ''ஸார், நீங்கள் மூணு மாதத்திற்கு முன்புதான் அப்பாவிடம் பேசி வாடகையை உயர்த்தி விட்டுச் சென்றீர்கள். மறந்து விட்டீர்களா?'' எனவும் கடகடவென சிரித்தார் கணேசமூர்த்தி.

''நீ கேட்பது நியாயம்தான் அம்மா. மூன்று மாதங்களுக்கு முன் வாடகை கூட்டினது வாஸ்தவம்தான். ஆனால் பாரம்மா.. விலைவாசி செலவினங்கள் எல்லாம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே இருக்கிறது. அதனால்.. எனக்கு வேறு வழியில்லை! வாடகையை கூட்ட வேண்டிய சூழ்நிலை... ஏற்பட்டு விட்டது. அதிகம் ஒன்றுமில்லை. கூடுதலாய் ஒரு ஐநூறு ரூபாய். அதைச் சேர்த்து மொத்தமாய் இரண்டாயிரம் ரூபாயை வாடகையாய் கொடுத்து விடு!''

அவர் அதிராமல் சொல்லி முடிக்க அப்படியே அதிர்ந்து தான் போனாள் அவள்.

''என்ன.. கூட ஐநூறு ரூபாயா? இரண்டாயிரம் ரூபாயா? என்ன ஸார் இப்படிக் கேட்கிறீர்கள்?''

தேவி துணிச்சலாய் கேட்க கணேசமூர்த்தி பெரிதாய் தலையசைத்தார்.



''இதில் ஆச்சரியப்பட என்னம்மா இருக்கிறது? என் இடம், அதாவது நீ குடியிருக்கும் வீடு நகரின் சென்டரான இடத்தில் மக்கள் பார்வையில் படும்படி இருக்கிறது. உன் தம்பி, தங்கைகளுக்கும் பள்ளி, கல்லூரிகளுக்கு போக வும் தோதாக இருக்கிறது. மேலும் இதனால் உனக்கு எவ்விதத் தொல்லையோ, நேரம் விரைந்து விடும் இடைஞ்சலோ ஏற்பட்டு விடாது. அதை புரிந்து யோசித்துப் பார். நான் கேட்பது நியாயமான வாடகை உயர்வு.. என்று உனக்குப் புரியும்.''

அவர் சொல்லிவிட்டு நிறுத்த தேவி ஒன்றும் புரியாதவளாய் விழிக்கத்தான் செய்தாள்.

இப்படிக் கொஞ்சமும் புரிந்து கொள்ளாமல் பேசபவரிடம் எப்படி விளக்குவது? எதைச் சொல்லி புரிய வைப்பது?

அபாண்டமாய், அநியாயமாய் மூன்றே மாதத்தில் இப்படி வாடகையைக் கூட்டுகிறார்!

எதற்காக இப்படிச் செய்கிறார்? என்ன காரணமாய் இருக்கும்?

அவள் யோசிக்க அடுத்துச் சொல்லிய அவரது வார்த்தைகள் அவளுக்கு எல்லாவற்றையும் புரிய வைத்தது.

''நீ.. யோசிப்பது சரிதான் அம்மா. இந்த வாடகை உயர்வு இப்போது இருக்கும் பொருளாதார சூழ்நிலையில் உனது குடும்பத்திற்கு சரிப்பட்டு வராதுதான். கஷ்டமான விஷயம்தான். மேலும் ஒரு மாதம் கூடுதலாக ஐநூறு ரூபாய் என்றால் நீ கூட புரட்டி விடலாம். ஆனால் மாதம் மாதம் முதல் தேதி தவறாமல் இரண்டாயிரம் ரூபாயை

வாடகையாய் கொடுக்க வேண்டும் என்றால் உன்னால் முடியாதுதான். அதனால்... அதனால்..."

இம்முறை தயங்கிய அவரை கோபமாகவே முறைத்தாள் தேவி.

"சொல்லுங்கள்..."

"பேசாமல் வீட்டைக் காலி செய்து விட்டு குறைந்த வாடகையில் வேறு எங்காவது சென்று விடுகிறீர்களா? உங்களுக்கும் தோதுவாய் இருக்கும்? எனக்கும் பிரச்சினையில்லாமல் வாடகைப் பணம் கிடைக்கும்..."

கணேசமூர்த்தி சொல்லி முடித்துவிட்டு அவளையே உற்றுப் பார்த்தார். தேவி எவ்வித அசைவும் இல்லாமல் அப்படியே திற்பதைப் பார்த்து மீண்டும் தொடர்ந்தார்.

"அம்மா.. தேவி நான் எதற்கு இதைச் சொல்லுகிறேன் என்றால்.. இனி உன் குடும்பம் உன் ஒருத்தி சம்பாத்தியத்தை நம்பித்தான் இருக்கிறது. நீ.. வாங்கும் சொற்ப சம்பளத்தில் வீட்டுச் செலவுகள் போக மாதம் மாதம் வாடகைப் பணம் ஒழுங்காய் கொடுப்பது எல்லாம் கஷ்டமான காரியம். அதனால் நீ பேசாமல் வீட்டைக் காலி செய்துவிட்டு குறைந்த வாடகையில் 'வீடு பார்த்து செல்வது நல்லதுதானே அம்மா?"

ஏதோ அக்கறையாய் தனக்கு பெரும் உபகாரம் சொல்வது போல் கணேசமூர்த்தி பேசி முடித்தார்.

அவர் இவ்வளவு நேரம் இழுத்து தயங்கித் தயங்கி பேசியதன் அர்த்தம் கடைசியில் அவர் சொன்ன வார்த்தைகள் மூலம் தேவிக்கு முழுதுமாய் புரிந்து விட்டது.



அதாவது, "உன் ஒருவர் சம்பளத்தில் இனி நீ வாடகை மாதந்தவறாமல் கொடுப்பது முடியாத காரியம். அதனால் பேசாமல் காலி பண்ணி விட்டுப் போ." என்கிறார்.

அதற்கு வேறு எதுவும் சாக்கு போக்கு சொல்லி விடக் கூடாது என்பதற்காக வாடகை கூட்டுவதாய் வேறு பயம் காட்டி விரட்டப் பார்க்கிறார்.

பத்து வருடம் மாதந்தவறாமல் முதல் தேதி வாடகை கொடுத்து நல்ல பெயர் எடுத்த அப்பாவிற்கு இவர் காட்டும் நன்றி இதுதானா? வீட்டுத் தலைவர் ஒருவர் உயிரோடு இல்லையென்றால்... அவர் குடும்பம் எப்படியெல்லாம் தவிக்கும் என்பதையெல்லாம் புரிந்து கொள்ளாமல்... எரிகிற வீட்டில் எடுத்துச் செல்வது போல் இப்படி ஈவு இரக்கமில்லாமல் நடந்து கொள்கிறார்களே...! சே! என்ன மனிதர்கள் இவர்கள்?

ஒரு கணம் கணேசமூர்த்தி பேசியதற்கு.. இப்படிப்பட்ட இரக்கமற்ற மனிதர்களின் வீட்டில் வசிப்பதே பாவம்... உடனே காலி செய்து விட்டு வேறு வீடு சென்று விட வேண்டும்.. என்ற எண்ணம்தான் அவளுள் வீராப்பாய் எழுந்தது.

ஆனால் அவளுக்கு இந்த வீட்டை அவ்வளவு எளிதில் விட்டுப் போக மனமில்லை. அவள்.. அப்பா, அம்மா, குடும்பமாய் சந்தோஷமாய் வாழ்ந்த வீடு. அவளின் உயிருக்குயிரான தந்தை கடைசிவரை நடமாடிய வீடு. வீட்டின் எந்தப் பக்கம் திரும்பினாலும் அப்பாவின் முகமும் உருவமும் தான் அவளுக்கு பனிச்சிடும்.

முன்புற முகப்புச் சுவரில் கொடி கட்டி மணிப்பிளாண்ட் செடியை படர விட்டது. முதல் பின்புற தென்னை

மரங்களுக்கு தினம் நீர் ஊற்றி பாதுகாத்தது அப்பாவின் செயல்தான். அவரது கைவண்ணம் தான். இன்று அப்பா இல்லாவிட்டாலும் அப்பா புழங்கிய இடங்கள், அப்பா எப்போதும் ஈஸி சேரில் உட்கார்ந்தபடி புன்னகைத்துக் கொண்டிருக்கும் நடு ஹால்.. அதைத் தாண்டிய டி.வி. ரூம்... இதெல்லாம் மறக்க முடியாதது.

அங்கெல்லாம் இன்றும் உட்கார்ந்திருக்கும்போது அப்பாவும் தங்களுடன் அமர்ந்திருப்பது போலவே எல்லோருக்கும் இருக்கும்.

அந்த நினைவுகள், அப்பாவைப் பற்றிய இனிய உணர்வுகள் எல்லாம் அவளுக்கு வேண்டும். தினம் தினம் நினைத்துப் பார்த்து மகிழவோ அல்லது பிரிவை நினைத்து வேதனைப்படவோ.. அந்த அப்பாவின் நினைவுகள் வேண்டும். அதை விட்டு விட்டு வேறு எங்கோ போய் குடியிருப்பது அவளால் கொஞ்சமும் ஜீரணிக்க முடியாது. கனவிலும் அதை நினைத்துப் பார்க்க முடியாது.

அப்படியானால்... இப்போது... என்ன செய்ய? தொடர்ந்து குடியிருக்க வேண்டுமென்றால்... கூடுதலான வாடகைச் சுமையை.. அந்த ஐநூறு ரூபாயை கொடுத்தாக வேண்டும்?

தேவி யோசித்தாள்.

வேறு வழியில்லை. கணேசமூர்த்தி இதைத் தவிர வேறு எதற்கும் ஒத்துக் கொள்ள மாட்டார். அப்பாவிற்காக இதை அவள் செய்துதான் ஆக வேண்டும். இந்த ஐநூறு ரூபாயை பள்ளிச் சிறுவர்களுக்கு டியூசன் சொல்லிக் கொடுத்துக்கூட சம்பாதித்து விடலாம்.



முடிவெடுத்தவளாய் நிமிர்ந்தாள் தேவி.

''கணேசமூர்த்தி ஸார், நீங்கள் சொன்ன இரண்டாயிரம் ரூபாய் வாடகைக்கு ஒத்துக் கொள்கிறேன். அடுத்த மாதம் முதல் உங்களுக்கு தந்து விடுகிறேன். மேலும் வாடகை விஷயத்தில் நீங்கள் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். நான் சம்பளம் வாங்குகிறேனோ இல்லையோ ஒவ்வொரு மாதமும் முதல் தேதி வாடகைப் பணம் உங்களைத் தேடி வந்துவிடும். அப்படி வராமல் போனால் நீங்கள் நடவடிக்கை எடுத்து வீட்டை காலி பண்ணச் சொல்லுங்கள். உடனே காலி பண்ணி விடுகிறேன் சரிதானா?''

அவள் இப்படிப் பேசுவாள் என கணேசமூர்த்தி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை என்பது அவரது முகத்திலே தெரிந்தது.

என்ன பேசுவதென்று தெரியாமல் ஓரிரு நிமிடம் குனிந்து நிமிர்ந்து யோசித்தபடி விழிக்கத்தான் செய்தார்.

தேவிக்கு சினம்தான் எகிறியது. இவ்வளவு சொல்லியும் இன்னமும் சம்மதிக்க மனம் வரவில்லையே! நெஞ்சுப் பகுதியில் இதயத்திற்குப் பதில் பெரிய பாறை தான் இருக்கிறதோ?

''ஸார்... இது எனக்காக இல்லை. பத்து வருடங்களாக மாதந் தவறாமல் முதல் தேதி வாடகை கொடுத்த என் அப்பாவிற்காக இந்த உதவியைக் கூட நீங்கள் செய்யக் கூடாதா?''

தேவி இப்படிக் கேட்டது அவருக்கு நன்கு உரைத்திருக்க வேண்டும்.

''சரி... சரி... சரிம்மா...'' என பலமாய் தலையாட்டினார்.

"நீ சொன்னால் சரிதான். நான் சம்மதிக்கிறேன். நீ மாதந் தவறாமல் இரண்டாயிரம் ரூபாயைகொடுத்து விடு. அது போதும்..." என்றபடி பெருமூச்சை விட்டு எழுந்தார்.

தேவி ஒரு பெரிய கும்பிடு ஒன்றைப் போட்டு அவரை வழி அனுப்பி வைத்தாள்.

ஆனால் மறுவாரம் கோமளவல்லி அத்தை உருவில் வேறு ஒரு தலைவலி வரப் போவதை அப்போது அவள் அறியவில்லை.

## 3

கோமளவல்லி அத்தை அப்பாவின் உடன் பிறந்த சகோதரிதான். அப்பாவிற்கு அவளையும் சேர்த்து உடன் பிறந்தவர்கள் நான்கு பேர். இரண்டு அண்ணன்மார்கள். இரண்டு தங்கைகள். கோமளவல்லி முதல் தங்கை. அவளுக்கு கோமளவல்லி அத்தை என்ற பெயருக்குப் பதில் 'வாயாடி அத்தை' என்றே பெயர் நிலைத்து விட்டது.

அதற்கேற்றாற் போல்' எப்பவும் சளசளவென வாய் சும்மா இருக்காமல் யாரையாவது வசை பாடிக் கொண்டே இருக்கும். அதனாலே அப்பாவின் உடன் பிறந்தவர்கள் எல்லோரும் அவளை ஒரு வாயாடியாகக் கருதி ஏறக் குறைய ஒதுக்கியே வைத்திருந்தனர்.



ஆனால் அப்பாதான் அவரது மென்மையான அன்பு குணத்தால் எப்போதும் கோமளவல்லியை கோபித்த தில்லை. அவள் அவ்வப்போது மற்ற உடன் பிறப்பு களைப் பத்தி இல்லாததும் பொல்லாததுமாய் வசை பாடும் போதும், சிண்டு முடித்து விடுவது போல் வீண் வம்பு களை இழுத்து வந்த போதும் அதை பெரிது படுத்தாமல் பொறுத்துக் கொள்வார்.

கோமளவல்லிக்கும் கல்யாணமாகி ஒரு அப்பாவி மனிதன் கணவராய் வந்து மாட்டினான். ஒரு குழந்தையும் பிறந்தது. ஆனால் அதற்கு மேல் கோமளவல்லிக்கும் பொறுமையில்லை. கணவருக்கும் சகிப்புத் தன்மை இல்லை. ஒரு நல்ல நாளாய்ப் பார்த்து கோமளவல்லி யிடம் சொல்லாமல் கொள்ளாமல் கம்பி நீட்டினான் அவள் புருஷன்.

எங்கோ வடநாட்டில் வேலை ஒன்றைத் தேடிக் கொண்டு ஓடிப்போய் விட்டதாய் சொன்னார்கள். கோமளவல்லியும் புருஷன் தன்னை விட்டு ஓடிப் போய் விட்டதற்காக ரொம்பவும் அலட்டிக் கொள்ளவில்லை. இப்படிப்பட்ட அம்மாஞ்சி இருந்தாலும் ஒன்று தான். ஓடிப் போனாலும் ஒன்று தான், என விட்டு விட்டாள்.

ஆனால் அவளுக்கு தலைவலி மகன் உருவிலே உருவாகியது. மகன் ஆரம்பம் முதலே அவளுக்கு கீழ்ப் படியாமல் எதிர்த்துப் பேசியே வளர்ந்தவன் கடைசியில் அடங்காப் பிடாரியாய் வேலை வெட்டி இல்லாத தெரு ரவுடியாகவே முழுதாய் உருவாகி விட்டான்.

மேலும் கோமளவல்லி உலகத்திலேயே பயந்து பதட் டப்படுவது அவன் ஒருவனுக்குத் தான் சதா.. ''பணம்

கொடு... பணம் கொடு...'' என அவள் நச்சரிப்பை தாங்க முடியாமல் திண்டாடத்தான் செய்வாள்.

கோமளவல்லி தன் பிழைப்புக்கென்று அப்பளம், வடாம், வத்தல் போட்டு விற்பதில் இருந்து மொத்த வியாபாரிகளிடம் கடன் கேட்டு சுங்கிடிச் சேலைகள் வாங்கி அக்கம் பக்கத்து வீடுகளில் விற்பது. வீடு தேடி அலைபவர்களுக்கு வீடு பிடித்துக் கொடுத்து புரோக்கரேஜ் பார்ப்பது. தெரிந்தவர்களிடம் சீட்டு பிடித்து அதன் மூலம் பணம் சம்பாதிப்பது என சகலவிதமான தொழில்களை கைவசம் வைத்திருந்தாள்.

ஆயிற்று. அப்படிப்பட்ட கோமளவல்லி அத்தைதான் திடுதிப்பென்று இன்று வீட்டுக்கு வந்து இறங்கியிருந்தாள். அலுவலகம் முடிந்து வந்த தேவி நடுஹாலில் உட்கார்ந்து பெரும் குறட்டை விட்டுத் தூங்கும் அவளைக் கண்டு திடுக்கிடத்தான் செய்தாள்.

அப்பாவின் இறந்த சேதிக் கேட்டு வந்தவள் பெயருக்கு ஒரு ஒப்பாரி வைத்து விட்டு, தனக்கு சில அவசர வேலைகள் இருப்பதாய் சொல்லி அன்று இரவே நடையைக் கட்டியவள் இன்று இப்படி இரண்டு மாதம் கழித்து எதற்காக வரவேண்டும்? என்ன காரணமாக இருக்கும்?

யோசித்தபடி புரியாமல் தவித்த தேவிக்கு சமையல் கட்டில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அம்மா கோமளவல்லி வந்திருக்கும் காரணத்தை விளக்கியதும் பெரும் அதிர்ச்சியாகத் தான் இருந்தது.

''தேவி, அவள் வாய் கூசாமல் சொல்கிறாள். அப்பாவிடம் அவள் பத்தாயிரம் ரூபாய் சீட்டுப் பணத்தை



கொடுத்து வைத்திருந்தாளாம். அதை வாங்கிகிட்டு போகத்தான் வந்திருக்கிறாளாம்...''

''என்னது.. பத்தாயிரம் ரூபாயா? என்னம்மா.. உண்மையா அது? அப்பா உன்னிடம் இது பற்றி சொல்லியிருக்கிறாரா?''

அம்மா பலமாய் மறுத்தாள்.

''இல்லவே...' இல்லை... தேவி...! இந்த கோமளவல்லி யாவது.. ரூபாயைக் கொடுக்கிறதாவது! மேலும் அப்பா.. நமக்குத் தெரியாமல் எந்த விஷயத்தையும் மறைக்கவும் மாட்டார். சொல்லாமல் விடவும் மாட்டார். இந்த கோமளவல்லி சொல்வது பச்சைப் பொய். அது என்னவோ சொல்வார்களே.. எரிகிற வீட்டில் கிடைப்பதை எடுத்துக் கொண்டு ஓடுவது போல்... அதைப் போல் இவள் யோசித்து... நம்மிடம் கபடமாய் பணம் பறிக்க இப்படி ஒரு பிளானுடன் வந்திருக்கிறாள்...''

அம்மா சொல்லச் சொல்ல தேவிக்கு எல்லாமே புரிந்தது. அத்தையின் குணம் அப்படித்தான். கபட நாடகம்... ஆடுவது.. ஏதாவது வில்லத்தனமாய் செய்வது எல்லாம் அவள் வாடிக்கைதான். அதனாலே அவளின் மற்ற சொந்த பந்தங்கள் எல்லாம் அவள் குணத்தையறிந்து விரட்டியடிக்க, அப்பா மட்டும் பெருந்தன்மையாய் என்ன இருந்தாலும் தன்னுடைய உடன் பிறப்பு கோமளவல்லி என்று பாசம் காட்டி அரவணைத்துக் கொண்டார். அப்படி அப்பா காட்டிய பாசத்திற்கு பெருந்தன்மைக்குத்தான் இப்படி நன்றி காட்ட பொய்ப் பழியுடன் அத்தை வந்திருக்கிறாளோ?

யோசித்துப் பார்த்த தேவி ஒரு கணம் அத்தையை நினைத்து பயப்படவே செய்தாள்.

கோமளவல்லி சாதாரண மனுஷி இல்லை. ராங்கிக்காரி. தன் திட்டம் பலிக்க என்ன வேண்டுமானாலும் செய்வாள். எத்தனை பழியை வேண்டுமானாலும் சுமத்துவாள். தேவைப்பட்டால்.. ஊரைக் கூட்டி பெரும் ரகளையே செய்து விடுவாள். இப்படி பொய்ப் பித்தலாட்டம் பண்ண வேண்டுமென்றே வந்திருக்கும் அவளை எப்படிச் சமாளிப்பது?

என்று சிந்தித்த தேவி அதே கவலையுடன் அம்மாவைப் பார்த்தாள். அம்மாவும் அதே பயப்பார்வையுடன் மிரட்சியடைந்தவளாய் விழிக்கத்தான் செய்தாள்.

''இப்போது என்னம்மா செய்ய...?'' என்றாள் தேவி குரல் கம்ம.

''நீ எதற்கும் பேசிப் பார்...'' என்றாள் அம்மா.

தேவியும் அதுவும் சரியென அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

அரை மணி நேரம் கழித்து புரண்டு புரண்டு படுத்து சாவகாசமாய் விழித்தாள் கோமளவல்லி.

எழுந்தவள் தன் தலை மாட்டுப் பக்கம் தேவி உட்கார்ந்திருப்பதைக் கண்டு சுறுசுறுப்படைந்தாள்.

தேவி, ''வாருங்கள் அத்தை...'' என்றாள் சம்பிரதாயமாக.

கோமளவல்லி எழுந்து கண்களை இடுக்கியவாறு மூக்குக் கண்ணாடியை அவசரமாய் மாட்டினாள்.

''யாரு தேவியா...?'' என்றவள், ''பாரு.. போற மனுஷன் சொல்லிட்டுப் போகாம அவன் பாட்டுக்கு போயிட்டான். இன்னிக்கு நான் லபோ திபோன்னு அடிச்சிக்கிட்டு



அலையுறேன். யாரு கிட்டப் போய் பேச? என்ன நியாயத்தைக் கேட்க?'' அத்தை பாட்டுக்குப் புலம்ப ஆரம்பித்து விட தேவிக்கு எரிச்சலாய் இருந்தது.

கொஞ்ச நேரம் அவள் நன்கு புலம்பட்டும் என்று விட்டவள் ஒரு கட்டத்தில் பொறுமையிழந்து,

''அத்தை, என்ன விஷயம் சொல்லுங்கள்?'' என்றாள்.

அவள் கேட்டதுதான் தாமதம் அத்தை ஸ்விட்ச் போட்டாற் போல் தன் புலம்பலை நிறுத்தினாள்.

''தேவி, உன் அப்பாவிடம் பத்தாயிரம் ரூபாய் சீட்டுப் பணத்தை கொடுத்து பத்திரமாக வைக்கச் சொல்லியிருந்தேன்... அதை வாங்கிகிட்டுப் போகத்தான் வந்தேன்...'' என்றாள் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தவளாய்.

கோமளவல்லி ஏற்றி இறக்கிச் சொன்ன விதம், அவள் அபிநயம் காட்டியது எல்லாமே அவள் சொல்வது பொய்யென பறை சாற்றியது.

ஆனால் அவள் ஒரேயடியாய் சாதித்து எப்படியாவது பணத்தைக் கறந்து விட வேண்டும் என்பதில் குறியாயிருந்தாள்.

''அத்தை, அப்பா ஏதாவது சீட்டு எழுதி உங்களிடம் கொடுத்திருக்கிறாரா?'' என்றாள் தேவி.

அவள் கேட்டதற்கு உடம்பே அதிரும்படி ஆயிரம் நொடிப்பு நொடித்தாள் கோமளவல்லி.

''நான் கூட கேட்டேன். என்னப்பா சொந்த பந்தம் உடன் பிறப்பு. என்றாலும் பண விஷயத்தில் நாம்

கரெக்ட்டாக இருக்க வேண்டும்.. என்றேன். அதற்கு உன் அப்பா என்ன சொன்னார் தெரியுமா?''

நிறுத்திய கோமளவல்லி ஒரு நிமிடம் இடைவெளி விட்டு விட்டு தொடர்ந்தாள்.

''என்னை நம்ப மாட்டீர்களா? நான் என்ன அப்படி யெல்லாம் செய்யக் கூடியவனா? என எதிர்கேள்வி கேட்டான். நான் அப்படியே வாயடைத்துப் போய் விட்டேன். மறுபேச்சு பேசாமல் அந்த பத்தாயிரம் ரூபாயை அவ னிடம் தூக்கிக் கொடுத்து விட்டேன். இதுதான் கண்ணு நடந்தது...''

நீட்டி இறக்கி சொல்லி முடித்தாள் கோமளவல்லி. இதில், ''ரொம்பவும் யோசிக்காதே கண்ணு. நான் சொல் வது உண்மை கண்ணு...'' என்று செல்லக் கொஞ்சல் வேறு. அவள் பேச்சையும், நடிப்பையும் பார்த்த தேவிக்கு பேசாமல் துடைப்பக் கட்டையை எடுத்து நாலு சாத்து சாத்தலாம் போல இருந்தது.

இருந்தாலும் அடக்கிக் கொண்டு ஒன்றும் சொல் லாமல் அவளையே பார்த்தாள்.

''என்ன யோசிக்கிறாய் கண்ணு?'' என்றாள் கோமள வல்லி தன் தடித்த உடம்புடன் எழுந்து அவள் பக்கம் வந்தபடி.

''அத்தை. நீங்கள் சொல்வது சரி. எனக்குப் புரிகிறது. ஆனால் தற்சமயம் எங்களிடம் அவ்வளவு பணம் இல்லையே! கொஞ்சம் பொறுங்கள். புரட்டித் தருகிறேன். எப்படியாவது உங்கள் கடனை அடைக்கிறேன்...!''

தேவி சொல்லித்தான் பார்த்தாள்.



ஆனால் கோமளவல்லி என்ன சாதாரண ஆளா?

இப்படிச் சொன்னால் விட்டு விடுகிற ரகமா?

அவள் மறுபடியும் குழைந்தவள், ''கண்ணு.. நான் சீட்டுப் பணத்தைத்தான் உன் அப்பாவிடம் கொடுத் திருந்தேன். பணம் போட்ட சீட்டுக்காரர்கள் இப்போது பணத்தை கேட்கிறார்கள். இப்போது நாம் பணத்தை கொடுக்கா விட்டால் போலீஸ் வரை போய் விடுவார்கள். பின் நிறைய சிக்கல்கள் உருவாகி விடும். அதனால் எனக்கு பணம் உடனடியாய் தேவை. புரிந்து கொள் கண்ணு...!''

அத்தை சொல்ல தேவியும் விடவில்லை. மன்றாடித் தான் பார்த்தாள்.

''நீங்கள் சொல்வது சரி அத்தை. அவ்வளவு பணம் எங்களிடம் இப்போது இல்லையே... நாங்கள் எங்கே போவது.. யாரிடம் கேட்பது?''

தேவி கேள்வி எழுப்ப... அவள் பக்கத்தில் வந்த கோமளவல்லி.. பார்வையை தேவியின் கழுத்தில் பதித்தாள்.

அவள் கழுத்தில் அப்பா வாங்கி ஆசையாய்ப் போட் டிருந்த தங்க டாலர் செயின்!

கடவுளே! இவளது குறி இதுதானா? இதன் விலை கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபாய் இருக்குமே!

இதைப் பார்த்துதான் இவ்வளவு டிராமா போட்டு அபகரிக்கத் திட்டமிட்டிருக்கிறாளா?

கடைசியில் தேவி பயந்தபடிதான் நடந்தது.

''கண்ணு, பணத்திற்கு நீ எங்கும் போக வேண்டாம் கண்ணு. உன் கழுத்திலேயே மாலை போல் அழகாய்

தொங்கிக் கொண்டிருக்கிறதே அந்த டாலர் செயின். அதைக் கொடு. அது போதும். கூடக் குறைய இருந்தாலும் நான் அதை பணமாக்கி சீட்டுக்கடனை அடைத்து விடுகிறேன். உனக்கும் பாரம் நீங்கும். உன் அப்பாவின் பெயரும் கம்பீரமாய் கறை படாமல் இருக்கும். என்ன சொல்கிறாய்?''

அவள் பேச்சு முழுவதும் கேட்ட தேவி திடுக்கிடத் தான் செய்தாள்.

அது வெறும் பேச்சு என்று கூட சொல்ல முடியாது.

ஒரு வகையான மிரட்டல் தான்!

நீயாக அந்தச் செயினை கொடுத்தால் நல்லது. இல்லையெனில் உன் தந்தை பணம் தராமல் ஏமாற்றி விட்டார். மோசடி செய்து விட்டார் என அவப் பெயர் உண்டு பண்ணி விடுவேன் என்கிற கடுமையான மிரட்டல்!

வேறு வழியில்லை!

அப்பாவிற்காக... அப்பாவின் நல்ல பெயரை இவள் மாக படுத்தாமல் இருப்பதற்காகவாவது இவளுக்குப் பொய்யான அந்தக் கடனை, அந்த டாலர் செயினை கொடுத்துதான் ஆக வேண்டும்!

கோபமாய் அந்த செயினைக் கழற்றிய தேவி அவளை நோக்கி அதை விட்டெறியத்தான் செய்தாள். ஆனால் அதை ஓடிப்போய் ஆவலாய் பொறுக்கிக் கொண்டாள் கோமளவல்லி.






மகாபாரதத்தில் ஒரு வினோதமான காட்சியமைப்பு உண்டு. த்வைத வனத்தில் பாண்டவர்கள் தங்கி உள்ளனர் என்பதை துரியோதனன் அறிந்தான். அப்போது பாண்டவர்கள் சகலத்தையும் இழந்த வனவாச நிலை.

அதனால் அவர்களை மேலும் நோகடித்து மகிழ விரும்பிய துரியோதனன் சகுனியிடம், ''பாண்டவர்களை கேலி செய்து மகிழ என்ன செய்யலாம்?'' என்று கேட்டான்.

அதற்கு சகுனியும், ''துரியோதனா, இந்த உலகத்திலேயே கொடுமையானது பகைவனுடைய செல்வச் செழிப்பைக் காண்பதுதான். நாம் விலையுயர்ந்த ஆடை அணிகளை அணிந்து கொண்டு நாட்டியப் பெண்களுடன் சென்று அவர்கள் எதிரில் ஆரவாரமாகத் தங்குவோம். அவர்கள் உள்ளம் வெதும்புவதைக் கண்டு மகிழ்ச்சி அடையலாம்'' என்றான்.

உடனே துரியோதனன் அதன் படியே பெரும் ஆரவாரத்துடன் பாண்டவர்கள் தங்கியிருந்த த்வைத வனத்தை அடைந்து அங்குள்ள பொய்கை ஒன்றில் கும்மாளமிட்டு நீராடத் தொடங்கினார்களாம்.

நொந்து போயிருந்த பாண்டவர்களை மேலும் மேலும் எரிச்சல் படுத்த கௌரவர்கள் கையாண்ட வழி.. அது

போல்தான் அப்பாவை இழந்து நொந்து போயிருக்கும் தங்களை நோகடித்து எரிச்சல்படுத்த இவர்கள் எல்லாம் இப்படிச் செய்கிறார்களோ..? என தேவி நினைத்தாள்.

ஒருவாறு அத்தையை அவள் கேட்டதை கொடுத்து பேக்கிங் செய்து அனுப்பிய பிறகுதான் வீட்டில் நிம்மதியே வந்தது எனச் சொல்லலாம்.

அன்று இரவுதான் தேவி உட்கார்ந்து பழைய ஒன் குயர் நோட்டு ஒன்றை எடுத்து வீட்டுச் செலவுகளை எழுதிப் பார்த்தாள். வாடகை, மளிகைச் சாமான், மின்சார கட்டணம், ஸ்கூல் பீஸ், அம்மாவுக்கான மருந்து மாத்திரைகள் என எல்லாச் செலவுகளையும் எழுதிப் பார்த்தாள்.

கூட்டிப் பார்த்து வருமானத்தையும் செலவையும் கணக்கிட்டபோது ஆயிரம் ரூபாய் துண்டு விழுந்தது. அதிகப்படியான செலவாய் அம்மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என்பது தெரிந்தது.

அம்மா, தம்பி, தங்கை என ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி தேவியைச் சூழ்ந்து உட்கார்ந்திருந்தனர். அப்பா இறப்புக்குப் பின் இப்படி அடிக்கடி உட்கார்ந்து பழைய அப்பாவின் ஞாபகங்களைப் பேசுவது வழக்கம்.

இப்போதுதான் முதல் முறையாய் வீட்டுச் செலவு களைப் பற்றி கணக்கிட்டு வருமானத்தைப் பற்றி பேச யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

தேவிகூட தம்பி தங்கைகளுக்கு இவ்விஷயமெல்லாம் தெரிய வேண்டாம் என்றுதான் நினைத்தாள். ஆனால் அம்மாதான் பிடிவாதமாய், "இல்லை.. தேவி அவர்களும் நம் குடும்ப நிலைமை தெரிந்தே வளர்வது நல்லது..."



எனக் கூறவே அதுவே ஒரு வகைக்கு சரிதான் என தேவி விட்டு விட்டாள்.

அப்பா எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார். பார்த்துக் கொள்வார், என இது நாள் வரை பண வரவையோ செலவு செய்வதையோ பற்றி எவ்வித அக்கறையும் இல்லாமல் இருந்தவர்கள்தான் அவர்கள்!

ஆனால் இன்று..?

நிலைமை தலைகீழாகி விட்டது.

வீட்டுப் பொருளாதார நிலைமையை நினைத்து குட்டித் தம்பி கூட கவலை கொள்ள வேண்டியதாயிற்று. என்ன ஒரு கொடுமை! என தேவி நினைத்தாள்.

தங்கை தன் கணக்கிற்கு, "அக்கா என்னுடன் படிக்கும் விஜி, திவ்யா, மீனு நாளையிலிருந்து டியூசன் வருவதாய் சொல்லியிருக்கிறார்கள்..." என்றாள்.

தம்பி வினு, "அக்கா எனக்கு புக் பைண்டிங் நன்கு செய்யத் தெரியும். அது மூலம் நிறைய ஆர்டர் வாங்கி நானும் பணம் சம்பாதித்துத் தருகிறேன்.." என்றபோது கண் கலங்க அவனை அணைத்துக் கொள்ளத்தான் செய்தாள் தேவி.

அம்மா கொஞ்ச நேரம் ஒன்றும் சொல்லாமல் யோசித் தவள் ஞாபகம் வந்தவளாய் நிமிர்ந்தாள். "தேவி, அப்பா பத்தாயிரம் ரூபாய்க்கு பேங்கில் பிக்சட் டெபாசிட் பத்திரம் ஒன்று போட்டு வைத்திருப்பது ஞாபகத்திற்கு வருகிறது..." என்றபடி அம்மா எழுந்தாள்.

பீரோ பக்கம் சென்று அதில் குடைந்து அந்த ரசீதை தேடி எடுத்தாள். தேவி அதை வாங்கிப் பார்த்தாள். அப்பா

பெயரில் பத்தாயிரம் ரூபாய்க்கான டெபாஸிட். நல்ல வேளையாய் - புத்திசாலித்தனமாய் அப்பா தேவியின் பெயரை நாமினியாகக் காட்டியிருந்தார். அதனால் பேங்கில் இருந்து பணம் வாங்குவதில் எவ்வித பிரச்சினையும் இருக்காதுதான்.

டெபாஸிட் தொகை வட்டியையும் சேர்த்து பன்னிரண்டாயிரம் ரூபாயாக கிடைக்கும். மாதம் ஆயிரம் ரூபாய் செலவு பற்றாக்குறை வருகிறது. அந்தப் பணம் மட்டும் கிடைத்து விட்டால் இனி ஒரு வருடத்திற்கு குடும்பத்தை எவ்விதப் பிரச்சினையும் இல்லாமல் ஓட்டி விடலாம்.

நினைத்துப் பார்த்த எல்லோருடைய முகத்திலும் அமைதியும் பெரும் நிம்மதியும் படர்ந்தது. அப்பா தனக்குப் பின் யாரும் தவிக்கக்கூடாது என்றுதான் பாடுபட்டு இப்படியெல்லாம் சேமிப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார் என்பதை பசுமையாய் மனதில் நினைத்தனர்.

அது தவிர அப்பாவின் பென்ஷன் தொகை ஏழாயிரம் இன்னும் ஆறு மாதங்களில் அம்மாவின் பெயருக்கு மாற்றப்பட்டு மாதம் மாதம் அம்மாவுக்கு கிடைக்க ஆரம்பித்து விடும்.

அந்தத் தொகையை அப்படியே சேமிப்பாய் உருவாக்கி தம்பி, தங்கைகளின் எதிர்கால வாழ்விற்கு உபயோகப் படும்படியாக வைத்துக் கொள்ளலாம்.

தம்பி தங்கைகளை தூங்கப் போகச் சொல்லிவிட்டு தாயும் மகளுமாய் யோசித்து ஒவ்வொரு விஷயமாய் பேசி முடிவெடுத்தனர்.



அம்மாவிற்குத்தான் கோர்வையாய் நாலு வார்த்தைகள் பேசுவதற்குள் அப்பாவின் நினைவு எழும்பி தடுமாற வைத்தது. அடிக்கடி கண் கலங்கினாள். அப்படி அம்மா கண் கலங்கும்போது தேவிக்கும் அப்பாவின் நினைவு வந்து கண்களில் நீர் முட்டிற்று.

ஆனாலும் அம்மாவின் முன் அழுதால்.. அம்மா இன்னமும் உடைந்து விடுவாள் என்பதற்காக கண்களைத் துடைத்துக் கொண்டு அம்மாவைத் தேற்றினாள்.

அன்று இரவு படுக்கச் செல்கையில் தேவிக்கு அப்பாவின் நினைவுகள் ரொம்பவும் பீறிட்டுக் கிளம்ப.. தனது படுக்கையின் ஓரமாய் தான் மாட்டி வைத்திருக்கும் சிரித்த முகம். அப்பாவின் சிறிய புகைப் படத்தையே ரொம்ப நேரம் தூங்கப் பிடிக்காமல் வெறித்தாள்.

அப்பாவுடன் பேசியது. சிரித்து மகிழ்ந்தது. அப்பா பாசமாய் அன்பைப் பொழிந்தது எல்லாம் மனதில் ஓடியது. இனி அப்படியொரு தந்தையை தன் வாழ்நாளில் ஏன் இனி எந்த ஜென்மத்திலும் அதே போல், அதே உருவத்தில் தந்தையைப் பார்க்க முடியாது. இனி அவருடன் பேசும் வாய்ப்பெல்லாம் நமக்குக் கிடைக்கவே போவதில்லை. அவரது இனிய குரலை இனி காதுகளில் கேட்கவே முடியாது.. என்ற எண்ணம் எல்லாம் கீற்றுகளாய் எழுந்து அவளது நெஞ்சையே அறுப்பது போல் இருந்தது.

அது போன்று அப்பாவின் பிரிவால் தாங்க முடியாத துயரம் ஏற்படும்போது அதை அப்படியே வார்த்தைகளாய் ஒரு தாளில் வடித்து விடுவது அவளது வழக்கம். இன்றும் தனக்கு எழுந்த பிரிவின் வேதனையை அப்படியே ஒரு தாளை எடுத்து எழுத ஆரம்பித்தாள்.

''என் இனிய தந்தையே..'' என்று ஆரம்பித்து தன் நினைவில் இருந்த சோகங்களை எல்லாம் கொட்டி மனமுருக எழுதினாள்.

அவள் எழுத எழுத கண்கள் குளமாகி நீர் துளிகளாய் சிந்தியது. அந்த மனம் கனக்கும் வேதனையுடனே அன்றைய இரவை ரொம்ப நேரம் கழித்தவள் அப்படியே கவலையோடு தூங்கியும் போனாள்.

தேவிக்கு வெறுப்பான வாழ்க்கை பழகிப் போயிற்று. அப்படியே இரண்டு மாதமும் ஓடிவிட்டது. வழக்கம் போல் அன்றும் அலுவலகம் சென்று திரும்பியவள் பழைய நினைவுகள் தாக்க.. வீட்டினுள் நுழைந்தாள்.

வீட்டில் பழைய குதூகலம் இல்லை. அறையின் ஓரமாய் முடங்கிக் கிடக்கும் அம்மாவும் பாட புத்தகங் களில் லயிக்க முடியாமல் வெறித்தபடி இருக்கும் தம்பி தங்கைகளைக் காண கவலையாய்த் தான் இருந்தது.

இருந்தாலும் மனதை தேற்றிக் கொண்டு வலுக்கட் டாயமாய் முகம் மலர்ந்தாள். வலிய வரவழைத்த புன் னகையுடன் ஒவ்வொருவரிடமும் சென்று ஏதாவது பேசினாள். கொஞ்சம் கொஞ்சமாய் மனநிலையை மாற்றி வேறு விஷயங்களில் ஈடுபட வைத்தாள்.

கடைசியாய் அம்மாவிடம் வந்து ஆதரவாய் கைகளைப் பற்றிக் கொண்டு அலுவலக விஷயங்களை சொல்ல ஆரம்பிக்கவும், அப்பாவின் நண்பரான தணிகாசலம் மாமா நுழையவும் சரியாயிருந்தது.

தணிகாசலம் அப்பாவின் நெருங்கிய நண்பர். அவர்கள் குடும்பத்தின் மீது பெரும் அக்கறை கொண்டிருப்பவர்.



பிரகாசமான முகத்துடன் உள்ளே நுழைந்தவர், ''தேவி, நல்லவேளை நீ வந்து விட்டாயா..? உன்னைத்தான் பார்க்க நினைத்திருந்தேன்...'' என்றார் ஆவலுடன்.

''முதலில் உட்காருங்கள்... மாமா...'' என ஸ்டூல் ஒன்றை எடுத்துப் போட்டாள் தேவி.

தணிகாசலம் மாமா விளக்க ஆரம்பித்தார்.

''தேவி, உனக்கொரு நல்ல வேலையை தேடிக் கொண்டு வந்திருக்கிறேன்...'' என்று ஆரம்பித்தார்.

தேவி புரியாமல் திடுக்கிடத்தான் செய்தாள்.

''வேலையா...? எனக்கா...? நான் வேலை பார்த்துக் கொண்டு தானே இருக்கிறேன் மாமா...''

மாமா தலையசைத்தார்.

''தெரியும் ஆடிட்டர் ஆபீஸ் ஒன்றில் மூவாயிரம் சம்பளத்தில் வேலை பார்க்கிறாய். நான் சொல்ல வருவது வேறு. இதை விட உயர்ந்த வேலை. அதிக சம்பளம்.''

''அதிக சம்பளமா?''

''ஆமாம். பத்தாயிரம் ரூபாய்! எனக்குத் தெரிந்த ரெடிமேட் ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் சொல்லி ஏற்பாடு செய்து விட்டேன். உனக்கு மார்க்கெட்டிங் மேனேஜர் என்ற பதவியில் உத்தியோகம். நாளைக்கே நான் சொன்ன அட்ரஸில் சென்று நீ வேலைக்குச் சேர்ந்து கொள்ள லாம்...''

மாமா அந்த ஏற்றுமதி நிறுவனம் பற்றி விலாவாரியாக விளக்க ஆரம்பித்தார்.

அவர் சென்றதும் தேவி யோசித்துப் பார்த்தாள்.

மாமா சொல்வது சரிதான். குடும்பம் இருக்கும் பொருளாதார நிலையில் அவள் வாங்கும் மூவாயிரம் ரூபாய் போதாதுதான். தம்பி, தங்கைகள் இன்னும் படிக்க வேண்டிய சூழ்நிலையில் அதிகப் பணம் தேவைப்படும். அதற்கு இந்த பத்தாயிரம் ரூபாய் சம்பள வேலை ரொம்பவும் உபயோகமாய் இருக்கும்.

அம்மாவிடமும் இது பற்றி பேசி ஆலோசித்தாள். ஆடிட்டர் ஆபீஸ் வேலையை விட்டு விட்டு மறுநாள் மாமா சொன்ன வேலையில் சேர்ந்து விடுவது என முடிவு செய்தாள்.

தெய்வமாய் நின்று தனக்கு வழி காட்டும் தந்தைக்கும், வேலைக்கு ஏற்பாடு செய்த தணிகாசலம் மாமாவிற்கும் மானசீகமாய் நன்றி சொல்லிவிட்டு மறுநாள் வேலைக்குக் கிளம்பினாள்.

மாமா சொன்ன 'கார்மெண்ட்ஸ் யூனிட்' எனப்படும் ரெடிமேடு ஏற்றுமதி நிறுவனம் நகரின் பிரதான சாலையில் விஸ்தாரமான பரப்பளவில் அமைந்திருந்தது.

பிரும்மாண்டமான மொசைக் பளபளப்பில் அடுக்கு மாடிகளாய் இருந்த கட்டிடத்தை பார்த்து பிரமித்தவாறே அந்த அலுவலகத்தினுள் நுழைந்தாள்.

மாமா ஏற்கனவே சொல்லி வைத்திருந்ததால் எவ்விதப் பிரச்சினையுமில்லாமல் ரிஷப்ஷனில் ஓரிரு நிமிட காத்திருப்பிற்குப் பின் கம்பெனியின் எம்.டி.யும் முதலாளியுமான நபரை சந்திக்க அவளுக்கு அனுமதி கிடைத்தது.

கண்ணாடிக் கதவுகளைத் திறந்து எம்.டி. ரூமில் தேவி பவ்யமாய் நுழைந்ததும் குஷன் சேரில் மிடுக்காய் அலட்சியமாய் அமர்ந்திருந்த அவன் திரும்பினான்.



புருவம் உயர அவள் நீட்டிய பைலை வாங்கி படபடவென புரட்டியவன் அதே வேகத்தில் பைலை அவள் பக்கம் தூக்கிப் போட்டான்.

"அந்த பரிதாபக் கேஸ் நீதானா?"

இறுக்கமான அவனது உதடுகளில் இருந்து அலட்சியமாய் வார்த்தைகள் தெறித்தது.




ஒரு கணம் அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுத் துடித்துதான் போய் விட்டாள் தேவி.

'பரிதாபக் கேஸ்!'

என்ன ஒரு வார்த்தை! அவளது நிலை அவனுக்கு அவ்வளவு ஏளனமாய் போய் விட்டதா?

"ஸார்..." என கோபமாய் நிமிர்ந்தாள்.

"எல்லோரும் வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய இழப்பைத் தான் நான் சந்தித்திருக்கிறேன். நான் ஒன்றும் பரிதாபக் கேஸ் இல்லை..."

துடிப்பாய் மூக்கு நுனி சிவக்கச் சொன்னவளைப் பார்த்து டக்கென ஸீட்டை விட்டு எழுந்து விட்டான்.

கைகளை கட்டியபடி முன்னால் வந்து நின்று கொண்டாள்.

''அடாடா... உனக்குக் கோபம் கூட வருகிறதே!''

அலட்சிய தொனியில் சொல்லிவிட்டு அவளை மேலிருந்து கீழ் வரை பார்வையால் ஊடுருவினான்.

''இந்த சோகத்திலும் உன் அபார அழகு பளிச்சிடத் தான் செய்கிறது'' என்றபோது அவள் மிக எரிச்சலாய் உணர்ந்தாள்.

என்ன ஒரு குரூர ரசனை இவனுக்கு...! என்ற நினைப்புடன் அவளும் அவனை உற்றுப் பார்த்தாள்.

நெடுநெடு உயரம். சுருளான முடிக் கற்றைகள். ஆஜானு பாகுவாய் திடகாத்திரமான உடம்பு. அந்த முரட்டு மீசையும் சிரிக்க மறுக்கும் இறுக்கமான உதடுகளும் அவனது முகத்தின் கடுமையைக் காட்டின.

அதே கடுமையைக் குறைக்காமல் அவளைப் பார்த்தான்.

''எனக்குப் பிடிக்காத விஷயம் என்ன தெரியுமா? 'ரெக்கமண்டேஷன்..!' அதாவது சிபாரிசு. உனக்கு இந்த வேலையை கொடுக்கும்படி என் தந்தை மூலம் எனக்கு நிர்ப்பந்தம்.. காரணம் உன் தந்தையை இழந்த உன் குடும்பச் சூழ்நிலையாம்... நீ... பரிதாபப்பட வேண்டியவளாம்...''

அவன் சொல்லச் சொல்ல அவளுக்குப் புரிந்தது. தணிகாசலம் மாமா இவனது தந்தைக்குத் தெரிந்தவர். அதன் மூலம் தனக்காக அவரிடம் கெஞ்சி இந்த வேலைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். தந்தையின் நிர்ப்பந்தம் மகனான இவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் இந்த 'மார்க்கெட்டிங் மேனேஜர்' வேலைக்கு அவள் தகுதியானவள் தானே? அதற்கான படிப்புகளைப் படித்திருக்கிறாளே!



''நீங்கள் சொன்ன சிபாரிசு இருக்கலாம் சார் ஆனால்... ஆனால்.. நான் எம்.பி.ஏ. படித்தவள். இந்த வேலைக்கான படிப்புத் தகுதி. அனுபவம் எனக்கு இருக்கிறது...''

அவள் வார்த்தைகளை முடிக்கவில்லை. அவன் கர்ஜனைக் குரலால் சிடுசிடுத்தான்.

''அதை தீர்மானிக்க வேண்டியது நான். ஆனால் உன் விஷயத்தில் அது முடியாமல் வேலை கொடுக்க வேண்டிய கட்டாயம்... மேலும்...''

ஒரு நிமிடம் நிறுத்திவிட்டு அவளை உற்றுப் பார்த்தவன், ''அலங்காரப் பொம்மைகளை பதுமைகள் போல் வேலைக்கு வைப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. வேலை பார்க்காமல்... பல்லை இளித்துக் கொண்டு.. மினுக்குக்காரிகளாய் அசைந்து அசைந்து நடந்து கொண்டு... அது.. அது... எனக்கு பிடிக்காத விஷயம்...!''

''நான் ஒன்றும் மினுக்குக்காரி இல்லை...'' அவள் வேகமாய் சொன்னதும் அவன் தலையசைத்தான்.

''இருக்கலாம். ஆனால் உனது அபார அழகு. ஆளை வீழ்த்தும் அந்த வீச்சு...''

அவள் வார்த்தையை முடிப்பதற்குள் படபடத்தாள்.

''அது.. இறைவன்.. உங்களைப் போல் பரிதாபக் கேஸ் மேல் பரிதாபப்பட்டிருக்கலாம். அப்படி வைத்துக் கொள்ளுங்கள்...''

இம்முறை அவன் முகத்தில் முதல் முறையாய் கேலிப் புன்னகை பரவியது.

''ம்ம்.. நன்றாகத்தான் பேசுகிறாய்! உன்னிடம் எச்சரிக்கையாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் ஒன்றைத் தெரிந்து கொள். நான் கண்டிப்பானவன். வேலைகளில் தவறு இல்லாமல் நூறு சதவீத உழைப்பை, உண்மையை எதிர்பார்ப்பேன். உன்னால் முடியுமா?''

''நான் நன்றாக வேலை பார்ப்பவள். உங்களுக்குச் சந்தேகமிருந்தால்...''

அவன் ஒரு நிமிடம் நிறுத்தி விட்டு கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தாள்.

''ம்ம்... சொல்லு...'' என்றான் அவன் கொஞ்சமும் கோபம் குறையாத அதிகாரத்துடன்.

''ஒரு வாரம் தற்காலிகமாக டெம்பரரி போல் வேலை பார்க்கிறேன். என் வேலையைப் பார்த்து விட்டு பணியை நிரந்தரமாக்குங்கள்...''

அவள் சொன்னதும் அவன் உடனே பதில் சொல்லாமல் ஓரிரு நிமிடம் யோசித்து விட்டு தலையசைத்தான்.

''ம்ம்... அதுவும் சரிதான்...''

அதற்குப் பின் அழைப்பு மணியை அழுத்தி மேனேஜரை வரவழைத்தவன் விளக்கம் சொல்லி அவருடன் அனுப்பி வைத்தான்.

தேவி அந்த ரூமை விட்டு வெளியே வந்தாள். அவள் அப்படியே வெளியே வரும் வரை அவளையே சிடுசிடுத்த முகமும் கோபப் பார்வையுமாய் அவன் பார்த்தது அவளை என்னவோ செய்தது.



எவ்வளவு பெரிய பணக்காரனாய் இருந்து என்ன செய்ய? குணம் இல்லையே! பாசமான தந்தையை இழந்து தவிக்கும் அவளை பசிதாபக் கேஸ் என்று கிண்டல் அல்லவா செய்கிறான்..!

மனதில் வெறுப்பு படர முகம் கன்றியவளுக்கு மறு நிமிடமே மனதுள் தோன்றிய தந்தையின் உருவம் சாந்தப்படுத்தியது. "பொறு கண்மணி. எதற்கும் கலங்கக் கூடாது. வாழ்க்கையில் வெவ்வேறு குணாதிசயங்களுடன் வெவ்வேறு மனிதர்கள் இருப்பார்கள். நாம்தான் அவர்களைப் புரிந்து பொறுத்துப் போக வேண்டும்...!''

தந்தை சொல்வது போன்ற பிரமையில் மனதை ஆறுதல் படுத்தியவள் முகத்தை இயல்பாக்கி மேனேஜரைத் தொடர்ந்தாள்.

மேனேஜர் தொழிற்சாலையின் உற்பத்தி பிரிவிற்கு கூட்டிப் போய் துணிகள் தயாராகும் விதங்களைக் காட்டினார்.

ஒரு மணி நேரம் அந்த கார்மெண்ட் யூனிட் முழுவதையும் சுற்றிப் பார்த்தபோது அவளுக்கு ஓரளவு புரிந்தது. நல்ல தரமான துணிகளை தேர்வு செய்து, வித விதமான அழகு டிசைன்களில் சிறுவர் சிறுமியருக்கான ரெடிமேடு உடைகளாய் உற்பத்தி செய்கிறார்கள். உற்பத்தி ஆகும் மொத்தத் துணிகளும் அப்படியே பாக் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன் மூலம் கம்பெனிக்கு லட்சக்கணக்கான ரூபாய் லாபம் வருகிறது.

எல்லாவற்றையும் விளக்கிக் காட்டிய மேனேஜர் அவளை மறுபடியும் எம்.டி. ரூமிற்கு அழைத்துச் சென்று அவன் முன் நிறுத்தினார்.

அவன் இன்னமும் கோபம் குறையாத சிடுசிடுப்புடனே அவளைப் பார்த்தான்.

''என்ன சுற்றிப் பார்த்தாயா? புரிகிறதா?'' என்றான்.

''புரிகிறது...'' என்றபடி அவளும் மொட்டைமாய் தலையாட்ட அவன் முகத்தில் கடுமை கூடியது.

''என்ன புரிகிறது? என்ன தெரிந்து கொண்டாய்? விளக்கமாகச் சொல்...'' என்றான் அதிகாரமாய்.

அவள் பயப்படவில்லை. படபடவென தான் கண்ணால் கண்ட உற்பத்தி நிலைகளை துணிகள் தயாராகுவதை விளக்கமாய் கூறினாள்.

கூறிவிட்டு அவன் முகத்தையே உற்றுப் பார்க்க அவனும் அப்படியே உற்றுப் பார்த்தான். மறு நிமிடம் அவனது இறுக்கமான உதடுகள் கடகடவென அசைந்தது.

''உனக்கு இன்றிலிருந்து இன்னும் இரண்டு நாட்களுக்கு உற்பத்திப் பிரிவில் சூபர்வைஸிங் பணி. தொழிலாளர்கள் உற்பத்தி செய்வதை சூபர்வைஸ் செய்து உற்பத்தி விவர ரிப்போர்ட் ஒன்றை என்னிடம் கொடுக்க வேண்டும் புரிகிறதா?''

அவள் பதில் சொல்லாமல் தலையை பலமாய் ஆட்டினாள்.

அவன் சொல்லிவிட்டு முகம் திரும்பியவன் அவள் நிற்பதைப் பார்த்து மறுபடி சிடுசிடுத்தான்.

''இன்னும் ஏன் நிற்கிறாய்? போ.. போய் வேலையை ஆரம்பி. எனக்கு சரியான ரிப்போர்ட் வேண்டும். உன் வேலையில் நம்பிக்கை வர வேண்டும். ம்ம் கிளம்பு...''

தள்ளாத குறையாய் விரட்ட அவள் ஒரு கணம் தன்னையறியாமல் பயந்துதான் வெளியே ஓடினாள்.



உற்பத்திப் பிரிவில் கிட்டத்தட்ட முந்நூறு தொழிலாளர்கள் துணி உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றி சுற்றி வந்து கண்காணித்து குறிப்பிட்ட நேரத்தில் எவ்வளவு துணி உற்பத்தி ஆகிறது என்று கணக்கிட வேண்டியது தேவியின் சூபர்வைஸிங் பணி.

தேவி சளைக்காமல் கையில் குறிப்பேட்டுடன் பணியில் இறங்கி விட்டாள். காலையில் ஆரம்பித்தவள் மதியம் வரை வெவ்வேறு பிரிவுகளை சுற்றி வந்து கணக்கெடுத்தாள். நின்று நடந்து என பல மணி நேரம் அவள் அலைந்ததால் ஓரிரு நிமிடம் உட்கார்ந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம் என நினைத்து உட்கார இருக்கையை தேடியபோது அலுவலக பணியாள் ஒருவன் ஓடி வந்தான்.

''அம்மா, நீங்கள் உட்காரக் கூடாது. சூபர்வைசிங் பணியில் நடந்தபடி சுழன்று கொண்டே இருக்க வேண்டும். இது முதலாளி உத்தரவு. உங்களை கண் காணிக்கும்படி என்னை முதலாளி பணித்திருக்கிறார்.''

அவன் சொல்ல அவளுக்கு சுரீரென்றது.

என்ன உட்காரக் கூடாதா?

கால் கடுக்க வேலை. அதுதான் அவனது திட்டமா? வேலையில் கடுமை காட்டி அதை கண்காணிக்கவும் ஒரு ஆளை நியமித்திருக்கிறான். சந்தேகமில்லை. சரியான குரூரக்காரன்தான் இவன்!

முத்துப் பற்களை கடித்தபடி சிவந்தவள் மறுகணமே இதையெல்லாம் ரொம்பவும் பொருட்படுத்தக் கூடாது என்றபடி வேலைகளில் ஆழ்ந்தாள்.

மேலும் இரண்டு நாட்கள் சூபர்வைசிங் பணி என்ற பெயரில் அந்த கால் கடுக்கும் வேலை அவள் பார்க்க வேண்டியதாயிற்று.

மூன்றாம் நாள் முடிந்ததும் கையில் ரிப்போர்ட்டுடன் அவனைச் சந்தித்தாள்.

அவள் நீட்டிய ரிப்போர்ட்டை அலட்சியமாய் வாங்கியவன் அதைப் பார்க்காமலே தூர வைத்தான். ஆக, அவளை இம்சிக்கவே அந்தப் பணியை கொடுத்திருப்பான் போலும் என அவள் நினைத்தாள்.

மறுபடி நிமிர்ந்தவன் அதே கடுமையுடன் அவளைப் பார்த்தான். ''இன்று நம் அலுவலக மீட்டிங் ஹாலில் வாடிக்கையாளர்களுக்கான ஒரு சந்திப்பு நடைபெறுகிறது. அந்த மீட்டிங் ஹால் முன் நின்று ஒவ்வொருவராய் இன்முகத்துடன் நீ வரவேற்க வேண்டும். அது தான் உனக்கு இன்றைய பணி...''

அவன் கட்டளையிட்டு அனுப்பி வைத்தபோது அவள் பதில் பேசாமல் தலையாட்டி விட்டு வெளி வந்தாள்.

மேனேஜர் அவள் என்ன செய்ய வேண்டும் என விளக்கிய போதுதான் அவன் சொன்ன பணியின் கடுமை புரிந்தது.

அவள் அந்த ஹாலின் வாசலில் நின்று ஒவ்வொருவர் நுழையும் போதும், ''ஜே.கே. கார்மெண்ட்ஸ் வெல்கம்ஸ் யூ... ஜே.கே.கார்மெண்ட்ஸ் உங்களை அன்புடன் வரவேற்கிறது...'' என கிளிப்பிள்ளை போல் விடாது சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்.

அது ஒரு வேலைதான். ஆனால் எம்.பி.ஏ. படிப்பு படித்தவள் மார்க்கெட்டிங் மேனேஜரான பதவிக்கு தகுதி உடையவள் செய்கின்ற பணி அல்லவே அது?



இருந்தாலும் தேவி முகம் சுளிக்கவில்லை.

மீட்டிங் ஹால் முன் இன்முகமாய் இதழ்கள் விரியும் புன்னகையுடன் நின்றாள்.

வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவராய் நுழைய எல்லோரையும் கை கூப்பினாள்.

கிளிப்பிள்ளையாய், ''ஜே.கே. கார்மெண்ட்ஸ் வெல்கம்ஸ் யூ... உங்களை அன்புடன் வரவேற்கிறது...'' என சொல்ல ஆரம்பித்தாள்.

சொல்ல ஆரம்பித்தவளின் பார்வை ஒரு திசையில் விக்கித்து நின்றது.



# 6

தேவி தற்செயலாய் பார்வையை திருப்பிய போது தான் அதை கவனித்தாள்.

எதிரே.. அந்த மர நிழல் ஓரமாய் கிரிதரன் கை கட்டி நின்று அவள் சொல்வதையே பார்த்தபடி.

இவள் வேலையை ஒழுங்காய் செய்கிறாளா.. என கண்காணிக்கிறானா? இல்லை... இப்படி பேச வைப்பதை தண்டனை போல் எண்ணி ரசிக்கிறானா?

மைவிழிகள் விரிய ஓரிரு நிமிடம் அவனையே பார்த்தவாறு யோசித்தவள் மறுநிமிடமே தலையைத்

திருப்பி வரவேற்பு வேலையைச் செய்ய ஆரம்பித்து விட்டான்.

அவன் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும்..! என கொஞ்சமும் சட்டை செய்யாது தன் பணியைச் செய்தாள்.

கிரிதரனும் பத்துப் பதினைந்து நிமிடங்கள் அவளையே பார்த்து விட்டு அகன்று விட்டான்.

அன்று மாலை வேலை முடிந்து வீடு திரும்பியபோது பேச முடியாத அளவுக்கு தொண்டையே கட்டிக் கொண்டது அவளுக்கு.

''என்ன சிரமமான வேலைகளாம்மா?'' என பதறிக் கேட்ட தாயாரிடம், ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...'' என்று கூறி சமாளித்தாள்.

வீட்டில் தந்தையின் நினைவு ரொம்பவும் பாரமாய் மனதை அழுத்த, யாருக்கும் தெரியாமல் மொட்டை மாடி சென்று தந்தையை நினைத்து உருகினாள். மௌனமாக அழுதாள். தந்தைக்காக வருந்துகையில், கிரிதரனின் கோபமான முகமும் எரிந்து விழும் அவனது சுபாவமும் அவள் நினைவுக்கு வந்து மேலும் வாட்டியது.

மறுநாள் அலுவலகம் சென்றபோது அவளுக்கு அன்றைய பணியாய் புதியதாய் இன்னொரு வேலையை தயாராய் வைத்திருந்தான் கிரிதரன்.

அன்றைய ஸ்டெனோ டைப்பிஸ்ட் வேலை அவளுக்காம். அவன் பக்கத்திலேயே, அவன் முன் நோட் பேடுடன் நின்று அவன் டிக்டெட் செய்யும் கடிதங்களை, சொல்லும் அலுவலக விவரங்களை குறிக்க வேண்டும்.



வழக்கம் போல் கர்ஜனையாய் சொல்லி விட்டு தனது குஷன் சேரில் அலட்சியமாய் சாய்ந்து கொள்ள.. பவ்யமாய் அவன் முன் நின்று குறிப்பெடுக்க ஆரம்பித்தாள் அவள்.

அன்றும் அவள் சிறிதும் உட்கார முடியாத கால் கடுக்கும் வேலை தான். காலை பத்து மணியில் ஆரம்பித்து மாலை ஐந்து வரை அவள் நின்று கொண்டே தான் இருக்க வேண்டியதாயிற்று.

மாலை வேலை முடிந்தபோது லாடம் அடித்துக் கட்டியது போல் இரண்டு கால்களும் தளர்வாய் கனத்தன. அவனோ அவளது நிலை பற்றி கொஞ்சமும் சட்டை செய்யாது சொடுக்கிட்டுக் கூப்பிட்டான்.

''என்ன..?'' என அவள் திரும்பியபோது அவள் எழுதிய குறிப்புகளை பார்த்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்தான்.

''உன் தலையெழுத்துதான் சரியில்லை. கையெழுத்தாவது நன்றாக இருக்க வேண்டாமா?'' என அவன் சீறலாய்க் கேட்டபோது சுரீரென கோபமாய் நிமிர்ந்தாள்.

''என்ன.. என் எழுத்துக்களுக்கு என்ன..?'' என்றபடி கோபமாகவே முறைத்தாள்.

எப்போதும் எழுத்துக்களை ஒரு சாய்த்து குண்டு குண்டாய் எழுதுவது அவள் வழக்கம். மணியாய் எழுதுகிறாயே.. என தோழிகள் அவள் காதுபட சொல்வது உண்டு. அதிலும் குற்றம் கண்டுபிடிக்கிறானா?

அவள் திகைக்க அவன் அசால்ட்டாய் அந்த குறிப்பேட்டை அவள் முன் தூக்கிப் போட்டான்.

''எழுத்துக்கள் என்றால்.. டைப் அடித்தது போல் கம்ப்யூட்டரில் பிரிண்ட் எடுத்தது போல் அச்சாக இருக்க வேண்டும்.

''நான் ஒன்றும் டைப் ரைட்டர் இயந்திரம் அல்ல..'' என்றாள் அவள் அமைதியாய் கோபத்தை அடக்கியபடி.

அவன் தலையை வெட்டினான்.

''அது எனக்குத் தெரியும். ஆனால் அது போல் எழுத நீ பழகிக் கொள்ளலாம். நீ பழக வேண்டும்.''

அவள் புரியாமல் விழிக்க அதற்கும் விளக்கம் கொடுத்தான் அவன்.

அவள் ஒரு ஒன்குயர் நோட்டு ஹாண்ட் ரைட்டிங் நோட்டு ஒன்றை வாங்கி தினம் நாலைந்து பக்கங்கள் எழுதிப் பழக வேண்டுமாம். அப்படிச் செய்தால்தான் அவன் எதிர்பார்க்கிற மாதிரி அவள் கையெழுத்து அமையுமாம்.

வெகு சாதாரணமாய் அறிவுரை போல் சொல்லி விட்டு நாளை முதல் வீட்டில் வைத்து தினம் இதை எழுதிப் பழக வேண்டும். மறுநாள் வேலைக்கு வந்ததும் முதல் வேலையாய் அதை என்னிடம் காட்ட வேண்டும். புரிகிறதா? என அவன் பள்ளிக்கூட வாத்தியார் போல் கட்டளையிட்டு கூறியபோது அவளுக்கு பொட்டிலடித்த மாதிரி புரிந்தது.

சரிதான்! அவளைக் கடித்துக் குதறாத குறையாய் வேலையில் இம்சிக்க வேண்டும் என முடிவு செய்து விட்டான்.

இனி என்னென்ன திட்டம் வைத்திருக்கிறானோ? என்னவெல்லாம் செய்யப் போகிறானோ?



அவன் நினைத்தது போலவே மறுநாள் வேலையை மாற்றினான்.

துணிகளின் பேக்கேஜிங் செக்ஷனுக்கு அவளை அனுப்பி வைத்தான்.

தைக்கப்பட்ட துணிகளை சேர்த்து பண்டல் பண்டல்களாக பாக் பண்ண வேண்டியது அந்த செக்ஷனில் செய்யப்பட வேண்டிய வேலை.

எண்ணற்ற கூலித் தொழிலாளர்கள் அவ்வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருக்க.. அவளையும் அவளது கல்வித் தகுதியைப் பொருட்படுத்தாமல் தொழிலாளி போல் ஒரு நாள் முழுக்க வேலை பார்க்கச் செய்தான்.

வேலை கடுமையாக இருந்தாலும் தொழிலைக் கற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறதே என தேவி முக மலர்ச்சியுடன் அவ்வேலையைச் செய்தாள்.

அப்படி அவள் முகம் மலரச் செய்வதை கவனித்தானோ என்னவோ மறுநாள் அந்த வேலைக்கும் கீழே போய் துப்புரவுத் தொழிலாளர்கள் செய்யும் பணியையும் அவளுக்குக் கொடுத்தான்.

வேஸ்ட்டேஜ் என சொல்லப்படும் கட்டிங் மற்றும் துண்டுத் துணி குப்பைகளை பெருக்கி சுத்தம் செய்ய வேண்டும். முகம் சுளிக்காமல் அந்த வேலையையும் தேவி செய்தாள்.

எதற்காக இப்படிச் சித்ரவதை செய்கிறான் என யோசித்தாள்.

வேலைக்கு சிபாரிசில் வந்தது பிடிக்கவில்லை என்றானே. அதனால் வேலையை விட்டுப் பிடிக்காமல் அவள் ஓடுவதற்கு இப்படியெல்லாம் செய்கிறானோ?

ஒரு கணம் தேவி யோசித்துப் பார்த்தவள் அப்படித் தான் இருக்கக் கூடும் என முடிவுக்கு வந்தாள்.

ஏனெனில் அது மட்டுமல்ல அதற்குப் பின் வந்த இரண்டு நாட்களிலும் அவன் செய்கைகள் அதையே உணர்த்தின.

ஒரு சிறு தவறு செய்தாலும் பெரும் கோபம் கொண்டு வசை பாடினான். மற்ற பணியாட்கள் முன் வேண்டுமென்றே, ''முட்டாள் தனமாக செய்கிறாயே?'' என அவமானப்படும்படி ஏசினான்.

ஒரு நாள் திடீரென, ''டிபன் சாப்பிடப் போகிறேன். கூட வா.'' என அழைத்துப் போனான்.

காரைத் திறந்து அவள் ஏறுகையில், ''இதற்கு முன் இப்படிப்பட்ட காரை பார்த்திருக்கிறாயா? உன் வாழ்நாளில் ஏறியிருக்கிறாயா?'' என தன் உயர்ரக காரைக் காட்டி ஜம்பமடித்தான்.

இதுதான் இப்படியென்றால் ரெஸ்ட்டாரண்டில் ஒருபடி மேலே போய் அவளை எதிரில் உட்கார வைத்துவிட்டு அவன் பாட்டுக்கு அவனுக்கு தேவையான உணவு வகைகளை ஆர்டர் செய்தான். அவளை வேடிக்கை பார்க்க வைத்து விட்டு அவன் மட்டும் ஒரு வெட்டு வெட்டினான்.

ஒரு இங்கிதமாய்க் கூட, ''நீ எதுவும் சாப்பிடுகிறாயா?'' என்று அவன் கேட்பானென்று பார்த்தால் கடைசி வரை அவன் கேட்கவே இல்லை...!

நன்றாக சாப்பிட்டு ஏப்பமிட்டவன், ''ம்ம்.. கிளம்பு...'' என்ற விரட்டலுடனே ரெஸ்ட்டாரண்டை விட்டு வெளியே கூட்டி வந்தான்.



அவளும் ஒரு கணம் திரும்பி அவனை நன்கு உற்றுப் பார்த்தாள்.

667715

அந்த கடுகடு முகமும் சிடுசிடுத்த பார்வையும் அவளை என்னவோ செய்தது.

இப்படி எரிந்து விழும் இஷ்டமில்லாதவனின் முகத்தில் விழித்து தினம் வேலை பார்க்க அவளுக்கும் ஆசையில்லைதான்!

894.8113 AKI

ஆயினும் அவள் குடும்பச் சூழ்நிலை...?

அவள் விரும்புகிறாளோ... இல்லையோ... அவள் இந்த வேலையில் இருந்தாக வேண்டுமே! மாதம் சம்பளப் பணம் பத்தாயிரம் ரூபாய் அவள் குடும்ப பராமரிப்பு செலவுகளுக்கு வேண்டுமே!

வேறு வழியில்லை! இவன் என்ன கிறுக்குத் தனம் செய்தாலும் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து விட வேண்டியதுதான்!

கடைசியில் அந்த முடிவிற்கு வந்தவளாய் மனதை திடமாக்கிக் கொண்டாள் தேவி.

CPL 667715

## 7

அன்று வீடு வந்த தேவிக்கு அம்மா வாசலிலே அவள் வருகையை எதிர்பார்த்து நின்றது போல் இருந்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

...NEMARA PUBLIC LIB...

''என்னம்மா விஷயம்?'' என்றாள் பதட்டமான அம்மாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டு.

''தேவி.. உன் தங்கை.. கவிதா.. கவிதா..'' என்றாள் வார்த்தைகள் வராமல்.

''தங்கை கவிதா அவளுக்கு என்னம்மா?'' என்றாள் தேவியும் பதட்டமாய்.

அம்மா பெருமூச்சு விட்டு ஆசுவாசப்படுத்தியபடி விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தாள்.

தங்கை வழக்கம்போல் பள்ளி முடிந்து கம்ப்யூட்டர் சென்டர் ஒன்றில் மாலை டிப்ளமோ படிப்பு படித்து வருகிறாள். விடலைப் பையன் ஒருவன் அவளையே பின் தொடர்ந்திருக்கிறான்.

முதலில் வெறுமனே விரட்டிக் கொண்டிருந்தவன் கொஞ்சம் முன்னேறி சீண்டல் பேச்சு பேசியிருக்கிறான். இன்று அந்த எல்லையையும் மீறி அவளை வழிமறித்து, ''நான் உன்னை காதலிக்கிறேன். உயிருக்குயிராய் நேசிக்கிறேன். நீயும் என்னைக் காதலி..!'' என டயலாக்கும் அடித்திருக்கிறான். இவள் ஒரேயடியாய் பயந்து வீட்டுக்கு ஓடி வந்து விட்டாள். இனி கம்ப்யூட்டர் சென்டருக்கு மட்டுமல்ல பள்ளிக்கே போக மாட்டேன் என பிடிவாதமாய் சொல்லி விட்டாள்.

அம்மா... படபடத்துச் சொல்ல எல்லாவற்றையும் பொறுமையாய்க் கேட்டாள் தேவி.

''நீங்கள்... ஒன்றும் பதட்டப்படாதீர்கள். எல்லாம் சரியாகிவிடும்...'' என சமாதானப் படுத்தினாள்.

அடுத்து தங்கையிடம் போய் அவள் சொல்வதை முழுசாய்க் கேட்டு அவளையும் ஆறுதல் படுத்தினாள்.



என்ன செய்வது? இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது? என அவள் யோசனை போயிற்று.

ரொம்ப நேரம் யோசித்தவளுக்கு இப்பிரச்சினையில் தான் நேரிடையாய் தலையிடுவதைத் தவிர யாராவது சரி சமமான ஆணை வைத்து விரட்டினால் அந்த விடலைப் பையனை ஓடச் செய்து விடலாம் என்பது புரிந்தது.

அம்மா. பக்கத்து வீட்டு ரமாவதி கணவனிடம் கேட்டுப் பார்ப்போம். அவரை வைத்து அந்த தெருப் பொறுக்கியை இரண்டு மிரட்டு மிரட்டச் செய்வோம் என்றாள்.

ஆனால் தேவி போய் விஷயத்தைச் சொன்னபோது ரமாவதியுடன் அவளது கணவரும் பின் வாங்கினார்.

''ஐயோ..! அந்த விடலைகள் எல்லாம் ரொம்பவும் மோசமானவர்கள். நாம் ஏதாவது சொல்ல ஆரம்பித்தாலே.. கத்தி, கம்பு.. என தூக்கி விடுவார்கள். நீங்கள் பேசாமல் உங்கள் தங்கையை கம்ப்யூட்டர் சென்டருக்கு அனுப்பாமல் இருங்கள்...'' என உபதேசிக்க.. வேறு வழியில்லாமல் சோர்வாய் திரும்பினர் இருவரும்.

''சுத்த.. பயந்தாங்கொள்ளிகள்..!'' என்றாள் தேவி வீட்டுக்கு வந்ததும்.

''இல்லை தேவி. நமக்கு எதற்கு வம்பு தும்பு.. என ஒதுங்கிப் போக நினைக்கிறார்கள். அவர்களை விடு!'' என்றாள் அம்மா.

''இப்போது.. என்ன செய்வது? நானே போய் கேட்டு விடட்டுமா? ரெண்டு வாங்கு வாங்குகிறேன். இல்லையெனில் இருக்கவே இருக்கிறது செருப்பு. ஓடிப்போய் விடுவார்கள்.''

தேவி கேட்டதும் அம்மா பதறத்தான் செய்தாள்.

"வேண்டாம் தேவி. உன்னால் முடியாது. இது போன்ற விடலைகள் லேசில் பயப்படாது. அவர்களை மிரட்ட சரியான ஆள் வேணும்." என சொல்லியபடி யோசித்தவள், "ஆமாம்.. உன் முதலாளி ரொம்பவும் நல்லவர் என்று சொன்னாயே தேவி.. அவரிடம் இதைச் சொல்லலாமா..? அவர் உதவுவாரு..?" என்றாள் அம்மா ஆவலாய்.

தேவிக்கு சுருக்கென்றது அம்மாவுக்கு சிடுமூஞ்சி கிரிதரனைப் பற்றி எதுவும் தெரிய வேண்டாம்.. என அம்மா கேட்கும் போதெல்லாம் 'அவர் முதலாளியா.. நல்லவர் தங்கமானவர்' என்றெல்லாம் சொல்லி வைத்திருந்தாள். அம்மா வீணாய் தான் வேலை பார்க்கும் இடத்தை நினைத்து பயப்படக் கூடாதே.. என்று சொல்லி வைத்தது இப்போது வம்பாய் போயிற்றே!

அதிலும் போயும் போயும் கிரிதரனிடமா உதவி கேட்பது? அந்த கடுகடுத்த பூனையா அவளுக்கு உதவப் போவது..?

யோசித்தவளை அம்மா தொடர்ந்து வற்புறுத்தினாள்.

"ரொம்பவும் யோசிக்காதே கண்மணி. இது ஆம்படையாள் இல்லாத வீடு. வீண் வம்பு தும்புகளில் நாம் மாட்டிக் கொள்ளக் கூடாது. அதனால் கூச்சப்படாமல் உன் முதலாளியிடம் உதவி கேட்டுப் பார். கண்டிப்பாய் செய்வார்..." என்றாள்.

"ஐயோ, இதில் கூச்சமோ, தயக்கமோ எனக்கு இல்லை..." என்று சொன்ன தேவி மறுநாளே அம்மா விருப்பப்படுவது போல் கிரிதரனிடம் உதவி கேட்டுப் பார்க்கத் தீர்மானித்தாள்.



மறுநாள் மதிய உணவருந்தும் நேரத்தில் கிரிதரனைத் தேடிப் போனாள்.

லஞ்ச் பாக்ஸை பிரித்து சாப்பிடத் தயாராகிக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து சீரியஸான பார்வை அவளைப் பார்த்தான்.

"என்ன..?" என்றான்.

"ஸாரர்ர்..." என பயமாய் இழுத்தவள், "ஒரு உதவி வேண்டும்..." என முடித்தாள்.

"ஏதும் பணப் பிரச்சினையா? பணம் வேண்டுமா?" என்றான்.

அவசரமாய் தலையைப் படபடவென மறுத்து ஆட்டியவள், "பணமில்லை ஸார். வேறு வகையான பிரச்சினை..." என்றாள் உதடுகளைக் கடித்தவாறு.

மறுபடியும் அதே பார்வை பார்த்து விட்டு, "என்ன...? சொல்லு...!" என்றான் விட்டேற்றியாய்.

அவன் முன்னால் வெறுமையாய் கிடக்கும் இருக்கைகளில் உட்காரச் சொல்லி பொறுமையாய் தன்னிடம் விஷயத்தைக் கேட்பான் என்று எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றமாகவே இருந்தது.

அதைவிட ஆச்சரியமாய் அவள் என் தங்கை என ஆரம்பித்து விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்ததும் அவன் பாட்டுக்கு டிபன் பாக்ஸ் உணவுகளைத் தட்டில் வைத்துச் சாப்பிட ஆரம்பித்து விட்டான்.

அவன் கேட்கிறானா... இல்லையா என சொல்லிக் கொண்டிருந்த தேவிக்கே இடையில் சந்தேகம் வந்து விட்டது.

அதனாலே படபடவென சொன்னவள் பேச்சை ஓரிரு நிமிடம் நிறுத்தி விட்டு அவனைப் பார்க்க, அவனும் உணவை மென்றவாறே, ''ஏன் நிறுத்தி விட்டாய்...? தொடர்ந்து சொல்லு...'' என்றான்.

என்ன மனிதன் இவன்..? உதவி செய்கிறானோ... இல்லையோ... சொல்வதையாவது கொஞ்சம் அக்கறை காட்டி கேட்க வேண்டாம்? இப்படியா உணவைச் சாப்பிட்டுக் கொண்டு ஏப்பம் விடாத குறையாய் கேட்பது? அவள் என்ன கதையா சொல்லிக் கொண்டு இருக்கிறாள்?

வந்த எரிச்சலை அடக்கிக் கொண்டு பொறுமையாக அவ்வளவையும் சொல்லி முடித்தாள் தேவி.

சொல்லிவிட்டு அவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என அவன் முகத்தை ஆவலாய்ப் பார்க்கத் தான் செய்தாள்.

அவனோ.. நிதானமாய் சாப்பிட்டு முடித்து விட்டு கைகளை கழுவியபடி, ''சரி.. மாலை இது பற்றி பார்ப் போம். போய் வேலையைப் பார்...'' என்றான் அலட்சிய மாய்.

ஆனால் மாலை வேலை முடிந்து கிளம்பும்போது அவனும் தயாராய் காத்திருந்தான் என்று சொல்ல வேண்டும்.

வெளிவந்தவளை கார் கதவுகளைத் திறந்து, ''ம்ம்... ஏறு..'' என்றான்.

அவள் பதில் பேசாமல் ஏறி உட்கார்ந்ததும் அவள் வீட்டின் வழி கேட்டு காரை செலுத்த ஆரம்பித்தான்.



பதினைந்து நிமிடங்களில் இடத்தை அடைந்து விட்டார்கள்.

அவள் வீட்டுப் பக்கம் இருந்த கம்ப்யூட்டர் சென் டரிலே காரை நிறுத்தினான்.

அந்த சென்டரின் ஓரமாய் டீக்கடைப் பக்கம் ஒரு விடலைக் கூட்டம் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

''இவர்களில் ஒருவன்தானே..?'' என்றான்.

மெல்ல தலையசைத்தாள் தேவி.

கிரிதரன் பைக்குள் இருந்த செல்போனை எடுத்து பட்டன்களை அழுக்கினான். யாருடனோ பேசினான். அவன் பேசுவதில் இருந்து அவன் யாரோ போலீஸ் உயர் அதிகாரி ஒருவனுடன் பேசுவதும், டீக்கடை ஓரமாய் விடலைக் கூட்டம் ஒன்று நின்று வம்பு செய்வதையும் சொல்வது தெரிந்தது.

பேசி முடித்த பின் அவளைப் பார்த்தான்.

''இனி.. நீ பயப்பட வேண்டியதில்லை. எனக்குத் தெரிந்த போலீஸ் எஸ்.பி. ஒருவரின் காதில் விஷயத்தை போட்டு விட்டேன். நாளை இந்த விடலை கூட்டத்திற்கு லாடம் கட்டி அப்பறப்படுத்தி விடுவார். உன் தங்கை பயமின்றி செல்லலாம்...''

ஐந்து நிமிடத்தில் அவன் விஷயத்தைப் பேசி சரி பண்ணியது அவளை ரொம்பவும் ஆச்சரியப்படுத்தியது. வார்த்தைகள் வராமல், ''ந..ன்...றி... ந..ன்றி.. ஸார்...'' என்றாள் திணறியபடி.

பதிலுக்கு ஒரு வெறும் பார்வை பார்த்து, ''இறங்கு கிறாயா? எனக்கு வேறு வேலைகள் நிறைய இருக்கிறது.'' என்றான் அவன்.

சிரிக்கக் கூடத் தெரியாத சரியான கல்லுளி மங்கன் தான் இவன்..! என நினைத்தபடி காரை விட்டு இறங்கி கதவுகளைச் சாத்தினாள்.

குனிந்து அவள் புன்னகைத்தபடி கையசைத்ததைக் கூட கவனியாமல் விருட்டென கிளம்பிப் போனான் அவன்.

ஆனால் அவன் சொன்னபடியே... மறுநாள் இருந்து அந்த விடலைகள் காணாமல் போயிருந்தார்கள். போலீஸ் அவர்களை நன்கு கவனித்திருக்க வேண்டும்.

தங்கை ஒரு பிரச்சினையுமில்லாமல் பள்ளிக்கு, கம்ப்யூட்டர் சென்டருக்கு செல்ல ஆரம்பித்து விட்டாள்.

தேவிக்கு உள்ளூர ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது. கிரிதரனை கடுவன் பூனையாய் சிடுசிடுவென தான் இவ்வளவு நாளும் நினைத்திருந்தாள். பரவாயில்லையே... அவளுக்காக வந்து இவ்வளவு தூரம் உதவியிருக்கிறானே..! அவளுக்காக இவ்வளவு இரக்கப்பட்டிருக்கிறானே!

அவன் செய்கை ஒருவிதத்தில் அவளை ரொம்பவும் ஆறுதல் படுத்தவும் செய்திருந்தது. அப்பாவுக்குப் பின் என்ன நடந்தாலும் தட்டிக் கேட்க நமக்கு யாருமே இல்லையே என்றுதானே அம்மா அடிக்கடி சொல்லி புலம்பிக் கொண்டிருந்தாள். இப்போது நமக்கு ஆதரவாய் பேச... எடுத்துச் சொல்ல ஒரு ஆள் இருக்கிறதே!

மனதில் சந்தோஷமாய் உணர்ந்தவள் திரும்பவும் அதற்காக கிரிதரனுக்கு நன்றி தெரிவிக்க விரும்பி அன்று அலுவலக நேரத்தில் அவனைத் தேடிப் போனாள்.



"என்ன..?" என புருவம் உயர நிமிர்ந்தவன், அவள் சொன்னதைக் கேட்டு, "ம்.. ம்.. நன்றி இருக்கட்டும்! வேலை நேரத்தில் இப்படி நன்றி சொல்லி எல்லாம் நேரத்தை விரயமாக்கிக் கொண்டு இருக்காதே.. போய் வேலையைப் பார்..!" என்றான் கடுமையான குரலில் கடுவன் பூனை..!"

"சரியான.. கடுவன் பூனை! கடுவன் பூனை..!"

முணுமுணுத்தபடி அங்கிருந்து அகன்றாள் தேவி.




கடுவன் பூனை உட்கார்ந்திருப்பது போல்தான் அன்றும் எக்ஸிகியூட்டிவ் ஸீட்டில் உட்கார்ந்திருந்தான் கிரிதரன்.

பணியாள் ஒருவன் அவன் ஸீட்டில் போய் அமர்ந்ததும், "உங்களை வேலைக்கு வந்ததும் உடனே வரச் சொன்னார்கள்... எம்.டி. ஸார்..." என்றான்.

கன்னக் கதுப்புகளில் தோன்றிய வியர்வைத் துளிகளை ஒற்றியவாறே கண்ணாடிக் கதவுகளைத் திறந்து பவ்யம் காட்டி உள்ளே நுழைந்தான்.

உள்ளே... கடுவன் பூனையாய் கடுகடுவென உட்கார்ந்திருந்த கிரிதரன் நிமிர்ந்தான்.

"குட்மார்னிங்.. ஸார்..."

"குட்மார்னிங் இருக்கட்டும். ஏன்... லேட்... காரணத்தைச் சொல்லு..." என்றான்.

"ஸார்ர்..." என இழுத்தவள், திரும்பி அவன் ரூமிலிருந்த பெரிய கடிகாரம் ஒன்றைக் காட்டினாள்.

"ஸார்ர்.. பாருங்கள்.. நான் லேட் இல்லை. அலுவலக டைம் சரியாக பத்து.. கரெக்ட்டாகத்தான் வந்திருக்கிறேன்..."

அப்படியே திரும்பி கடிகாரத்தைப் பார்த்தவன் தன் தவறை உணர்ந்தான்.

"சரி.. சரி.. உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்."

"சொல்லுங்கள் ஸார்."

"வரும் பத்தாம் தேதி. அதாவது இன்னும் இரண்டு நாளில் ஒரு உற்பத்தியாளர்கள் மீட்டிங் கொடைக்கானலில் நடக்க இருக்கிறது. அதில் நாம் கலந்து கொள்ளப் போகிறோம்."

அவன் சர்வ சாதாரணமாய்ச் சொல்ல தேவி பெரிதாய் திடுக்கிட்டாள்.

"ஸார்.. என்ன சொல்கிறீர்கள்..? நாமா..?"

அவளது திகைப்பை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் தலையாட்டினான் கிரிதரன்.

"ஆமாம்.. நீயும் என்னுடன் வர வேண்டும். வரப் போகிறாய்.."

"ஸார்... ஸாரி... வெரி ஸாரி.. என்னால் வர முடியாது..."



"உன் ஸாரியை எல்லாம் குப்பையில் கொண்டு போய் போடு.. நீ வரப் போகிறாய்..."

அவன் கொஞ்சமும் சட்டை செய்யாமல் அதிகாரமாய்ப் பேசியது அவளுள் எரிச்சலைக் கிளப்பியது.

"ஸார்ர்..." என்றாள் குரலை உயர்த்தியபடி.

"ம்... சொல்லு..."

"முதலில் ஒரு விஷயத்தை தெளிவாய்ப் புரிந்து கொள்ளுங்கள்..."

"என்ன விஷயம்?"

"நீங்கள் வேலைக்காக காரணம் காட்டி அழைக்கலாம். ஆனால் எனது விருப்பம் இதில் முக்கியம்..."

அவள் சொன்னது அவனைக் கோபப்படுத்தியிருக்க வேண்டும்.

திரும்பி முறைத்தபடி அவளைப் பார்த்தான்.

"நீயும் ஒன்றைத் தெரிந்து கொள். நான் ஒன்றும் ஜாலியாகச் சென்று வர உன்னைக் கொடைக்கானல் கூப்பிடவில்லை. அலுவலக மீட்டிங் காரணமாக உன்னை உதவியாளினி என்ற முறையில் தான் கூப்பிடுகிறேன். வீண் காரணங்களைச் சொல்லி என்னை எரிச்சல் படுத்தாதே...!"

அவன் சொன்னதைக் கேட்டு அவளுக்கும் கோபம் வந்தது.

"அலுவலக மீட்டிங் வேண்டுமானால் அங்கு இருக்கலாம். ஆனால் எனக்கு குடும்பம் என்ற ஒன்று இருக்கிறது.. அப்புறம்..."

"ம்ம்.. சொல்லு."

"நான் தனியே வேறு எவருடனும் ஊருக்குச் செல்வதோ அங்கு தங்குவதோ கிடையாது."

"என்னை.. நீ தாராளமாக நம்பலாம்.."

"நம்புவதற்காக நான் சொல்லவில்லை."

"நான் ஒன்றும் ரோட்டில் போகும் பொறுக்கி இல்லை. உன் முதலாளி. உன்னை ஒன்றும் கடித்துத் தின்றுவிட மாட்டேன்..."

"அந்த பயம் எனக்கில்லை..."

"பின்னே ஏன் தயங்குகிறாய்...?"

"நான் தயங்கவில்லை! யோசிக்கிறேன்."

"நன்கு யோசி. இன்று ஒரு நாள் முழுக்க யோசி. நாளை உன் முடிவைச் சொன்னால் போதும்..."

அவன் செல்லும்படி கையசைக்க, "சரி.. ஸார்.." என்றபடி பெரிய கும்பிடு ஒன்றை போட்டபடி வெளிவந்தாள் அவள்.

வெளியே வந்தவள் ஸீட்டில் அமர்ந்து யோசிக்க ஆரம்பித்தாள்.

கடுகடுவென சிடுமூஞ்சி போல நடந்து கொள்கிறான். இவன் எப்படி.. நல்லவனா கெட்டவனா..? எதுவுமே தெரியாது. இவனை நம்பி இவனுடன் எப்படிச் செல்வது..?

கடைசியில் அவன் சொன்னது வேறு எரிச்சல் படுத்தியது. 'அலுவலக விஷயமாய் நடக்கும் மீட்டிங். இரண்டு நாள் நடக்கும். நீயும் கலந்து கொள்ள வேண்டியது அவசியம். ரொம்பவும் யோசிக்காதே!'

அம்மாவிடம் மாலை வந்து சொன்னபோது நீயே யோசித்து முடிவெடு என்று சொல்லி விட்டாள்.



அவள் கிரிதரனைப் பற்றி விசாரித்த வரையில் கோபக்காரன், சிடுசிடுத்தவன் என்றுதான் சொல்லக் கேட்டிருக்கிறாள். அவளைப் போல் நிறைய பெண் ஊழியர்கள் பணியாற்றியும் எவ்வித சில்மிஷ பிரச்சினையும் அவன் மீது வரவில்லை என்பதையும் தெரிந்து கொண்டாள்.

மறுநாள் அலுவலகம் வந்தவள் அவனிடம் சம்மதத்தை சொல்லிவிட வேண்டும் என அவனது ரூமினுள் முதல் வேலையாய் நுழைந்தாள்.

"என்ன முடிவெடுத்தாயா?" என்றான் கிரிதரன் பைல்களை பார்த்துக் கொண்டு நிமிராமலே.

"நான் வருகிறேன்..." என்றாள் ஒரே வார்த்தையாய் சலனமற்ற குரலில்.

"இதை நேற்றே.. நீ சொல்லியிருக்க வேண்டும்."

"என்ன இருந்தாலும் நான் யோசிக்க வேண்டும் ஸார்..."

கிரிதரன் நிமிர்ந்து புருவங்களை உயர்த்தி தோள்களை அசைத்தான்.

"ம்ஹூம்! என்னுடன் வர கொடுத்து வைத்திருக்க வேண்டும். அந்த பாக்யம் உனக்கு கிடைத்திருக்கிறது..."

பெரும் ஜம்பம் அடித்த அவனைப் பார்த்து அவளுக்கு கோபமும் அவன் தலையில் குட்டு வைக்க வேண்டும் என்ற எண்ணமும் வர, "ஸார்..." என்றாள்.

"சொல்லு..."

"என்ன இருந்தாலும்... நான் கல்யாணமாகாத ஒரு பெண். ஒரு ஆணுடன் தனியே வெளியூருக்குச் செல்வது அவ்வளவு முறையில்லை தானே? யாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். தானே? அதைத்தான் சொல்கிறேன்!" என்றாள்.

அதற்கும், ''அட... அப்படி வருகிறாயா...?'' என ஹாஸ்யத்தை கண்டது போல் கடகடவென சிரித்தவன், ''நான் ஒன்றும் அலைகிற கேஸ் இல்லை தெரிந்து கொள். பெண்கள் என்றாலே எனக்கு வெறுப்புதான்!'' என்றான்.

இவனை விடக்கூடாது. பதிலுக்கு நாமும் எதையாவது சொல்ல வேண்டும் என்று நினைத்தவள், ''எனக்கு ஆண்கள் என்றால் வெறுப்புதான். ஆனாலும் பெரியவர்கள் சொல்வார்களே. பஞ்சையும் நெருப்பையும் ஒருசேர ஒரே இடத்தில் வைக்கக் கூடாது.. என்று..?''

இம்முறையும் அவன் கோபப்படாமல் பட்டென சிரித்தான்.

''நீ.. சொல்வது சரி... நீ வேண்டுமானால் பஞ்சாக இருக்கலாம். ஆனால் நான் கண்டிப்பாக நெருப்பு இல்லை...'' என்றான்.

அதன் பின் அவள் அவனுடன் வாக்கு வாதம் செய்யவில்லை. தன் வீட்டிற்கு விறுவிறுவென திரும்பி விட்டாள்.

இரண்டு நாள் கழித்து கொடைக்கானல் செல்ல ஏற்பாடும் ஆயிற்று.

அவனது காரிலேயே பிரயாணம் ஆரம்பமாயிற்று. டிரைவருக்குப் பக்கமாய் முன் ஸீட்டில் அவன் உட்கார்ந்து கொள்ள பின் ஸீட்டில் அவள் பைல்களுடன் அமர்ந்து கொண்டாள்.

ஐந்து மணி நேர களைப்பான பிரயாணத்திற்குப் பின் கொடைக்கானலை அடைந்தார்கள்.

உயர்ரக ஓட்டல் ஒன்றில் முன்பே தங்குவதற்கு அறைகள் ரிசர்வ் செய்யப்பட்டிருந்தன.

அறைக்குச் சென்றபோதுதான் கிரிதரனுக்கும் அவளுக்கும் தனித்தனி அறைகள் இல்லாமல் ஒரே அறையேபுக் செய்யப்பட்டிருப்பதை உணர்ந்து திடுக்கிட்டாள்.



''ஸார்... என்ன... இது...?'' என்றாள் பதறியவளாய்.

''என்ன?''

''ஒரே ரூமில் நாம் இருவரும் தங்கப் போகிறோமா?''

''அதில்... என்ன? முன்பேதான் சொன்னேனே... நான் நெருப்பு கிடையாது நீ பயப்பட வேண்டாம் என்று...'' கிரிதரன்.

அவன் சொன்னது அவள் எரிச்சலை அதிகப்படுத்தியது. முகம் மாறியவளாய் அவனைப் பார்த்தாள்.

''வேண்டாம் ஸார்... இது சரியில்லை.'' என்றாள்.

அவள் சட்டென முகத்தையும் குரலையும் மாற்றியதை கவனித்தவன், பக்கத்தில் வந்து, ''ரொம்பவும் பதறாதே. உண்மையில் இப்போது சீஸன் டைம் என்பதால் ரூம் இல்லை. அதனால்தான் இந்த ஏற்பாடு. வீணாக எதையாவது நினைத்து கலவரம் கொள்ளாதே. நான் கண்ணியமானவன்...'' என்றான் தெளிவுக்குரலில்.

அவளுக்கு அந்த சூழ்நிலையில் அதற்கு மேல் என்ன செய்வது என்று தெரியவில்லை. கிரிதரன் அவளுக்குத் தெரிந்து ஓரளவு கண்ணியமானவன்தான். வரம்பு மீறி போகிறவன் இல்லைதான்!

ஆனாலும் தனிமையான ஓர் இடத்தில் ஓர் பெண்ணுடன் தனியே இருக்கும் வாய்ப்பு கிடைக்கும் போது எந்த ஆணுக்கும் சபலம் ஏற்படுவது இயற்கை தானே?

அப்படியொரு சமயத்தில் கிரிதரனும் உணர்ச்சிவசப்பட்டு அவளிடம் வரம்பு மீற முயற்சித்தால்..?

இப்படி யோசித்தவள். சட்டென அந்த நினைப்புகளை உதறினாள்.

அப்படி கிரிதரன் முயற்சித்தால்.. அவளது கைகள் ஒன்றும் பூப்பறித்துக் கொண்டிருக்காது. கையில் கிடக்கிற பொருளைத் தூக்கி... அவனை துவம்சம் பண்ணி விடாது..? பின் ஏன் பயப்பட வேண்டும்?

நினைப்புகள் தாக்க... சிலிர்த்தபடி நிமிர்ந்து கொண்டாள் அவள்.

ஆனால் அவள் வியப்பிற்கு மாறாக ரொம்பவும் கண்ணியமாகத்தான் நடந்து கொண்டான் கிரிதரன். காலை எழுந்து. குட்மார்னிங் சொல்வதுடன் சரி. அதற்குப் பின் அவளது முகத்தை பார்ப்பது கூட கிடையாது. மடியில் கொண்டு வந்திருக்கும் லேப் டாப்பை தூக்கி வைத்தபடி அவன் பாட்டுக்கு வேலை பார்க்க ஆரம்பித்து விடுவான்.

தினமும் காலை மூன்று மணி நேரம்தான் உறுப்பினர் மீட்டிங் என்பது நடந்தது. மீதி நேரங்களில் ரூமில்தான் அடைந்து கிடக்க வேண்டியிருந்தது.

அவன் பாட்டுக்கு லேப் டாப்பில் வேலைகளைக் கவனிக்க... தேவி எதையாவது கதை புத்தகங்களை படித்து நேரத்தைப் போக்கினாள்.

மூன்றாம் நாள் வேலை ஒன்றும் இல்லையானதால், "வா... கொடைக்கானலைச் சுற்றிக் காட்டுகிறேன்..." என்றபடி அவளைக் கூட்டிப் போனான்.

பில்லர் ராக், க்ரீன் வேலி, தற்கொலைப் பாறை, மூலிகைப் பூங்கா, சரணாலயம், முருகன் கோவில் என ஒவ்வொன்றாய் அவளுக்குக் காட்டி ரசிக்க வைத்தான்.

அவள் பசுமையான அந்த இயற்கை அழகை விட அவன் கிரிதரன் தன்னிடம் அன்பாய் சிரிக்கச் சிரிக்கப் பேசுவதை ஆச்சரியத்துடன் ரொம்பவும் ரசித்தாள்.



இடங்களைக் காட்டும் போதும் சரி ரெஸ்ட்டாரண்டில் உணவருந்தும் போதும் சரி அவளிடம் மனம் விட்டுப் பேசுவது போல் நிறைய விஷயங்களை சிரிக்கச் சிரிக்க பேசினான். முன்பு அவன் குடும்பத்தோடு கொடைக்கானல் வந்தபோது நடந்தவைகளை எல்லாம் விவரித்தான்.

இவ்வளவு இனிமையாய்... மென்மையானவனா இந்த கிரிதரன்? என அவளே வியக்கும்படி நடந்து கொண்டான் அவன்.

ஒருவாறு நான்கு நாள் கொடைக்கானல் டூர் முடிந்து கிளம்பி ஊர் வந்து சேர்ந்தார்கள்.

மறுநாள் வழக்கம்போல் வேலைக்குச் சென்றவளுக்கு அலுவலகத்தில் பெரும் ஆச்சரியம் காத்திருந்தது.




அன்று தேவியால் நடப்பதை நம்ப முடியவில்லை.

அவன் கிரிதரன் முதன் முறையாய் உதடுகளைப் பிரித்து வரிசையான பற்கள் அழகாய்த் தெரிய ஸ்னேகமாய் சிரித்தான்.

நம்மைப் பார்த்து சிரிக்கிறானே? என அவள் ஒரு கணம் திகைக்க அடுத்து அவன் சொன்ன வார்த்தையை கேட்டதும் நிஜமாகவே தூக்கி வாரிப் போட்டது.

"இவ்வளவு நாள் நடந்தது நாடகம்..." என்றான் அவன் அமைதியாக.

"என்ன நாடகமா?"

அவள் வியக்க அவன் அமைதியாய் தலையாட்டினான்.

"ஆமாம்.. தேவி.." என அவன் ஆரம்பிக்கவும், இவ்வளவு நாள் தன்னிடம் கடுமையாகப் பேசியவன் தனது பெயரை இவ்வளவு உரிமையாய் இனிமையாய் உச்சரிக்கிறானே என அவள் திகைத்தாள்.

"தேவி உனக்கு ஆச்சரியமாய் இருக்கும். ஆனால் உண்மை அதுதான். இவ்வளவு நாள் நடந்தது நாடகம் தான். இந்த மூன்று மாதங்களில் நான் ஈவு இரக்க மில்லாமல் உன்னிடம் கடுமை காட்டியது நடிப்புத் தான்..."

அவள் ஒன்றும் புரியாதவளாய் மை விழிகள் விரிய நிமிர்ந்தாள்.

"என்ன சொல்கிறீர்கள்... நடிப்பா?"

"இன்னும் புரியவில்லையா..? இந்த மூன்று மாதங் களும் உன்னிடம் கடுமை காட்டி நான் அப்படி நடந்து கொண்டது நடிப்பு. நான் அப்படிச் செய்ததற்கு முக்கிய மாய் ஒரு காரணம் இருக்கிறது."

"காரணமா?"

அவள் கேட்க அவன் ஓரிரு நிமிடம் கண்களை மூடியபடி சிந்திப்பது போல் முகத்தை வைத்துக் கொண்டு தலையசைத்தான்.

"அப்படி என்ன காரணம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"



அவள் மெல்லிய குரலில் கேட்க அவன் நீளமாய் மூச்சிழுத்தபடி, "காரணம்.. உன் தந்தைதான்.." என்றான் அமைதியான குரலில்.

"தந்தையா?"

அவள் மறுபடியும் திடுக்கிட அவன் மெல்ல அவள் பக்கம் வந்து கைகளைக் கட்டியவன் அவள் கண்களை ஊடுருவது போல் ஆழமாய்ப் பார்த்தான்.

"தேவி, என்னிடம் வேலை கேட்டு முதன் முதலாய் வந்தாயே... அப்போது.. நீ... என்ன... என்ன மனநிலையில் இருந்தாய் என்பதை யோசித்துப் பார்..."

அவள் புரிந்தது போல் தலையை அசைத்தாள். "தந்தையை இழந்த வேதனையில் இருந்தேன்..." என்றாள்.

அவள் சொல்லவும் அவன் கைகளை நீட்டி உயர்த் தியவன், "அதான்.. அந்த வேதனையான மனநிலையை மாற்றத்தான் அப்படி நடந்து கொண்டேன்..." என்றான்.

அவள் கண்களை மலர்த்தி வியக்க கனிவாய் அவளைப் பார்த்தான் அவன்.

"ஒருவரை இழந்த துயரம், வேதனை எப்படி என்று எனக்குத் தெரியும். நானும் உணர்ந்திருக்கிறேன். எனது பிரியமான தாயார் திடீரென இறந்தபோது நான் அப்படியே துயரத்தில் பரிதவித்து விட்டேன். ஒரு வருடம் ஒன்றிலும் நாட்டமில்லாது பித்துப் பிடித்தாற் போலத்தான் இருந் தேன். பின்தான் மெல்ல மெல்ல என்னால் சகஜ நிலைக்குத் திரும்ப முடிந்தது..." சொல்லியபடி நிறுத் தியவன் அவளை ஆழமாய் ஒரு பார்வை பார்த்து விட்டுத் தொடர்ந்தான்.

''அதே போல்தான் நீயும் திடீரென உன் தந்தையை இழந்து கண்கள் கலங்கிய பரிதவிப்போடு என் முன் வந்து நின்றபோது உன் வேதனையான மனநிலையை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. உன்னை அந்த வேதனையான சூழலில் இருந்து விடுவித்து உன் மனநிலையை மாற்ற முடிவெடுத்தேன். அதனாலே.. உன் மீது கடுமையாய் நடந்து உனக்கு என் மீது கோபம் வரும்படி செய்தேன்...''

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு எல்லாம் புரிந்தது.

வேலையென்ற பெயரில் மூன்று மாதங்களும் அவன் நோகடித்தது வெறும் நடிப்புத் தானா? அவள் வேதனை யான மனநிலையை மாற்றத்தானா?

ஆனாலும்.. இதெல்லாம் உண்மையா? நம்பக் கூடியதா?

அவள் திகைக்க.. அவன் விளக்க ஆரம்பித்தான்.

''நன்றாக யோசித்துப் பார். இந்த மூன்று மாதங்களில் உன் தந்தைக்காக வேதனைப் பட்டதைவிட, கடுமை காட்டிய என் மீது நீ வெகுண்டு கோபம் கொண்ட நிமிடங்கள் அதிகமாக இருந்திருக்குமே?''

அவன் வினவ அவள் ஒரு கணம் யோசித்து பார்த்து அதிர்ந்தாள்.

அவன் சொல்வது உண்மையே! தந்தையை அடிக்கடி நினைத்து மனம் பிழிய உள்ளுக்குள் அழுதவள், இவனிடம் வேலைக்குச் சேர்ந்ததும் இவனது கடுமையை, வேலை வாங்கும் குரூரத்தை நினைத்து அல்லவா தினம் வேதனைப்பட ஆரம்பித்தாள்? தந்தையை இழந்த



வேதனையை விட அந்த வருத்தம் தானே தினம் தினம் அவளை ஆட்கொண்டது?

அப்படியானால்... இவன் அப்படி நடந்தது அப்படி தன் மனநிலையை மாற்றத்தானா? நம் மனநிலையும் அதனால்தான் மாறி இருந்ததா?

''இப்போது புரிகிறதா? தினம் தினம் பிரிவால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த உன்னை.. தினம் தினம் என் மீது கோபப்பட வைத்தேன். வேதனையில் வருந்திய உன் மனநிலையை வெகுண்டு என் மீது ஆத்திரப்படச் செய்தேன். வேதனைப்பட்டு மனம் தளர்வதை விட கோபம் கொண்டு மனச்சீறல் கொள்வது நல்லதுதானே? அதற்காகவே அப்படிச் செய்தேன். நான் நினைத்தபடியே நடந்தது. இதோ மூன்று மாதங்கள். ஓடி விட்டது. நீயும் உன் துயரப் பிரிவில் வேதனையில் இருந்து ஓரளவு விடுபட்டும் விட்டாய். என்ன நான் சொல்வது சரிதானே?''

கிரிதரன் சொன்னதையெல்லாம் முதலில் நம்ப கஷ்டமாய்த்தான் இருந்தது. என்னதான் பிரிவின் துயரை அவன் உணர்ந்திருந்தாலும், அதற்காக ஒரு முதலாளி தன்னிடம் வேலை பார்க்கும் ஊழியருக்காக இப்படி யெல்லாமா நடித்து தன்னை வருத்திக் கொள்வான் என்றெல்லாம் நினைத்தாள்.

ஆனால் அதன் பின் வந்த ஒரு வாரத்தில் அவளுக்கு எல்லாம் புரிந்தது. அவன் சொன்னது, செய்தது எல்லாம் உண்மையே.. என நம்பும்படியாயிற்று.

கிரிதரன் முகத்தில் சாந்தம் தாண்டவமாட அவளிடம் மட்டும் அல்ல எல்லோரிடமும் இனிமையாய் பேசிக் கொண்டிருப்பதை கவனித்தாள்.

வேலை பார்க்கும் ஒன்றிரண்டு பணியாளர்களிடம் விசாரித்தபோது, "அவரா... இரக்க குணம் உள்ள தங்கமான முதலாளியாயிற்றே..?" என்று வானளாவ புகழ ஆரம்பிக்க, 'அடடா... முன்பே இவர்களிடம் கேட்காமல் போய் விட்டோமே..!' என நினைத்தாள்.

அத்தோடு கிரிதரனும், விடவில்லை. அன்று மாலை விடாமல் அவளை வற்புறுத்தி ரெஸ்ட்டாரண்ட் ஒன்றிற்கு அழைத்துச் சென்றான். "உன்னை அன்று பார்க்க வைத்து உணவருந்தியதற்கு தண்டனையாய் பதிலுக்கு நீ தண்டனை கொடு..." என்றான்.

அவள் புரியாமல் விழித்தாள்.

"அதாவது உனக்கு மட்டும்தான் உணவு வகைகளை ஆர்டர் செய்திருக்கிறேன். நீ சாப்பிட வேண்டும். நான் தண்டனை போல் பசியாய் உன்னை, நீ சாப்பிடுவதை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்..." என்றான்.

"அதெல்லாம் வேண்டாம். பின் எனக்குத்தான் வயிற்றில் வலிக்கும்..." என்றாள் அவள் சிரிப்புடன்.

அதற்கும் அவன் விடவில்லை.

"ஓ... அப்படி பயப்படுகிறாயா? அப்படியானால் நான் திரும்பி உட்கார்ந்து கொள்கிறேன்..." என்றபடி அவனும் இருக்கையைத் திருப்பிப் போடப் போனான்.

"ஐயோ.. அதெல்லாம் வேண்டாம் சார்..." என அவள் பதற்றம் காட்டவே.. இயல்பான சிரிப்புடன் திரும்பினான். தனக்கும் உணவு வகைகளை ஆர்டர் செய்தான்.

உணவை அருந்தும்போது அவளுக்கு திடும்மென தந்தையின் நினைவு வந்தது.



தந்தையுடன்தான் இது போன்ற ஹோட்டல்களுக்கு சென்றிருக்கிறாள். தம்பி தங்கைகள் என ஒரு பட்டாளமாய் போய் ஹோட்டல் அயிட்டங்களை ஒரு பிடி பிடிப்பது வழக்கம். தந்தையும் கொஞ்சமும் செலவாகிறதே என முகம் கோணாமல், "ம்ம்... அடுத்து என்ன? சீக்கிரம் ஆர்டர் கொடுங்கள்..." என உற்சாகப்படுத்தி சிரிப்பார்.

தந்தையின் சாந்தமான முகமும் அமைதி தவழும் அந்த சிரிப்பும் மீண்டும் மீண்டும் அவள் நினைவுக்கு வந்தபோது அவளையறியாமல் கண்கள் கலங்கிற்று.

அந்த நினைவில் விழிகளில் திரையிட்ட நீரை துடைக்கக் கூட மறந்தவளாய் கற்சிலை போல் அவள் இருக்க.. கிரிதரன் கவனித்து விட்டான்.

அவசரமாய் கர்ச்சீப்பை எடுத்து அவள் கைகளில் அழுத்தினான். அவளும் வேகமாய் நீர்த்துளிகளை துடைத்தாள்.

"என்ன.. தந்தையின் நினைவா..?" என்று அவன் கேட்டபோது... எப்படி கண்டு பிடித்தான் என்ற ஆச்சரியமே மேலோங்கியது. கண்கள் பனிக்க தலையசைத்தாள்.

மீண்டும் அவள் கைகளை அழுத்தியவன் மெல்லிய குரலில், "வருத்தப்படாதே. தந்தையின் நினைவுகள் எல்லாம் மறக்க முடியாத மனதில் நீங்காத பசுமையான விஷயங்கள் தான். அவற்றை நினைத்து தந்தை நம்மை வழி நடத்துவது போல் தைரியம் கொள்ள வேண்டும்" எனச் சொன்னபோது ரொம்பவும் ஆறுதலாய் உணர்ந்தாள்.

அந்த ஆறுதலே அவளை தைரியப்படுத்துவது போல் கண்களைத் துடைத்தபடி நிமிர்ந்து கொண்டாள். இயல்பான முகத்துடன் அவனிடம் பேச ஆரம்பித்தாள்.

இம்முறை அவள் விடாமல் அக்கறையாய் அவளது குடும்பம் பற்றி, தம்பி தங்கைகள் பற்றியெல்லாம் விசாரித்தான்.

அவன் அன்று காட்டிய பரிவும் அன்பான பேச்சும் அது நாள் வரை அவன் மீது அவள் வைத்திருந்த குரூரமான முரட்டு பிம்பத்தை மாற்றியது.

அன்று இரவு வெகு நேரம் தூங்காமல் யோசித்தவள், இந்த மூன்று மாதங்களும் அவன் சொல்லியது போல் தந்தையை நினைத்து உருக்கமாய் வேதனைப்பட்டதை விட, அவனை நினைத்து ஆத்திரமாய் கோபப்பட்டது அதிகமே.. என மருகினாள்.

தனக்காக, தனது வேதனையை மறப்பதற்காக இவ்வளவு தூரம் நடித்திருக்கிறானே.. என நெகிழ்ந்தவள், தன்னையறியாமல், அவன் மீது தனக்கு ஒருவித ஈடுபாடு தோன்றுவதை உணர்ந்து திடுக்கிடவும் செய்தாள்.

## 10

கிரிதரன் அவளுக்கு கம்பெனியின் மார்க்கெட்டிங் மேனேஜர் பதவியை அளித்ததோடு தனது செகரட்டரி



யாய் உதவியாளினி போல் தனது வேலைகளுக்கு கூடவே வைத்துக் கொண்டான்.

"இதற்கு.. உனக்கு கூடுதல் சம்பளம் உண்டு..." என்ற போது அவள் பிடிவாதமாய் மறுத்து விட்டாள்.

தேவிக்கும் கிரிதரனின் இனிமையான சுபாவம் கண்டு அவனுடன் பேசுவது, பழகுவது, மீட்டிங்குகளுக்கு உடன் செல்வது எல்லாமே எளிதாய் இருந்தது.

பெரும்பாலான நேரங்களில் அவன் தன் முதலாளி போன்ற உணர்வே இல்லாமல், அவளுக்குத் தோன்றிய கருத்துக்களை எல்லாம் பட்பட்டென்று அப்படியே சொல்லி விடுவாள்.

அவனும் அதை முழுசாய் உள் வாங்கிக் கொள்வான். அவள் சொன்ன விஷயங்களில் அவனுக்கு ஏதும் மாற்றுக் கருத்து இருந்தால் சிறிது நேரம் கழித்து அவள் மனங் கோணாமல் மறுதலித்து தன் கருத்தை விளக்குவான்.

அப்படி அவன் பேசுகையில் துணிகள் உற்பத்தியைப் பற்றிய அவனது அபார அறிவும் அனுபவமும் பளிச்சிடும். இந்தச் சிறிய வயதில் இப்படி ஒரு பெரும் தொழில் சாம்ராஜ்யத்தை உருவாக்கி இருக்கும் அவனது திறமையைக் கண்டு அதிசயித்து வியப்பாள்.

அவளுக்கு என்னவோ கிரிதரனிடம் பழகுகையில் வருடக் கணக்காய் அவன் தெரிந்தவன் போல் அவனுடன் பழகியதைப் போல் அடிக்கடி உணர்ந்தாள்.

ஒருநாள் தனக்குத் தோன்றிய இந்த விஷயத்தைச் சிரித்தபடி அவனிடம் கூற அவன் உதடுகளின் இறுக்கம் தளர ஆச்சரியப்பட்டான்.

''எனக்கும் அப்படித்தான் அடிக்கடி தோனுகிறது தேவி. அதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என நினைக்கிறாய்?'' என்றான்.

அவள் விழிகள் விரிய தலையைச் சிலுப்பினாள்.

''எனக்குப் புரியவில்லை...''

''என்ன புரியவில்லையா..? இது.. கூடவா?'' என்றபடி அவளைக் குட்டுவது போல் கைகளைக் கொண்டு வந்தவன் அப்படியே அவளது அழகான தலையைப் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டினான்.

''நாம் இருவரும் ஒரே அலைவரிசையில் சிந்திக்கிறோம்..'' என்று அதற்கு அர்த்தம் என விளக்கமும் கொடுத்தான்.

ஆனால் அவன் சொன்னது போலவே நிறைய விஷயங்களில் அப்படி நடப்பதை தேவியும் உணர்ந்தாள்.

சில நேரங்களில் வேலைப்பளு காரணமாக தாமதமானாலும் சரி தன் வேலைகள் முழுவதையும் முடித்து விட்டுக் கிளம்புவதையே வாடிக்கையாய் வைத்திருந்தாள்.

அதுவும் சரக்குகள் ரெடியாகி ஏற்றுமதிக்காக லாரிகளில் லோடிங் ஆகும் முக்கியமான வேலைகளில் கிரிதரன் இல்லாவிட்டாலும் அவன் சார்பில் முன் நின்று அனைத்தையும் கவனிப்பாள்.

தினம் அனுப்ப வேண்டிய ஈ.மெயில்கள், பேங்க் மூலம் கிரிதானுக்கு வந்திருக்கும் அறிவிப்புகள் என எல்லாவற்றையும் எவ்வளவு நேரமானாலும் சோம்பல் இல்லாமல் சேகரித்து பட்டியலிடுவாள்.



கோப்புகளை தனித் தனி பைலாய் தயார் செய்ததும் கையெழுத்திற்காக அவன் மேஜையில் கொண்டு போய் வைப்பாள்.

கிரிதானும் அதற்காகவே காத்திருந்தவன் போல் விறுவிறுவென பைல் குறிப்புகளைப் பார்த்து ஓ.கே. செய்வான். சிலவற்றுக்கு அடிக்கோடிட்டு விளக்கம் கொடுத்து அவளுக்கு புரிய வைப்பான்.

ஆக தினமும் அப்படி வேலை முடிந்து கிளம்ப இருவருக்கும் இரவு ஏழு மணியைத் தொட்டு விடும். நேரமாகி விட்டதால் அவள் மறுத்தும் அவனே தன் காரில் அவளை வீடு வரைக்கும் வந்து விட்டுச் செல்வான்.

சில சமயம், ''பசிக்கிறது. லைட்டாக ஒரு டிபனை வாயில் போட்டுக் கொள்வோம்...'' என ஏதாவது ஒரு ரெஸ்ட்டாரண்ட் பக்கம் நிறுத்துவான்.

அவளும் மறுப்பேதும் சொல்லாமல் தலையசைப்பாள். அலுவலகத்திலும் சரி, வெளியிலும் சரி அவர்களது பேச்சு துணி உற்பத்தியைப் பற்றி, ரெடிமேடு துணிகளில் செய்ய வேண்டிய புதுப்புது டிசைன்கள் பற்றியே இருக்கும்.

அதனாலே தேவி வீடு வந்த பிறகும் ஓய்வெடுக்க விரும்பாமல் இரவு பல மணி நேரம் கொட்டக் கொட்ட விழிப்பாள்.

ஒரு ஒன்குயர் நோட் புக் ஒன்றை எடுத்து பென்சிலால் வெவ்வேறு ரெடிமேடு டிசைன்களை உருவாக்கிப் பார்ப்பாள். நீண்ட ஆழமான சிந்திப்பிற்குப் பின் அவளது டிசைன் உருப்பெற்று அழகான வடிவம் பெறும்.

மறுநாள் முதல் வேலையாய் தான் உருவாக்கிய டிசைனை அவனிடம் காட்டி கருத்துக்களைக் கேட்பாள்.

அவனும் அவளது கடுமையான உழைப்பையும், திறமையையும் பார்த்து அதிசயித்துப் பாராட்டுவான். அவன் தன்னை நிஜமாகவே பாராட்டுகிறான் என்பதை அவள் உணரும்போது நிஜமாகவே அவளுக்கு மெய் சிலிர்க்கும்.

படபடக்கும் மை விழிக் கண்களை விரித்து அவ னையே ஊடுருவும் பார்வை பார்ப்பாள்.

அந்த பாராட்டுக்காகவே திரும்பவும் கண் விழித்து யோசிப்பாள். சிந்தித்துச் சிந்தித்து புதுப்புது டிசைன்களை உருவாக்குவாள். டிசைன்களை உருவாக்குவதோடு மட்டு மில்லாமல் வண்ணங்களை அமைப்பதிலும் கவனம் செலுத்துவாள்.

துணிகளின் வண்ணம் பளீரென முகத்திலடித்தாற் போல் அமையாமல் மென்மையாய் அமையும்படி டிசைனிங் செய்து பார்த்தாள். மேலும் துணிகளின் முகப்பில் வண்ணங்களோடு சிறு சிறு பூக்கள், விளையாட்டு பொம்மை உருவங்கள், இயற்கை காட்சிகள் வரும்படி ஓவியக் கலைஞர்கள் உதவியுடன் துணிகளை உருவாக்கினாள்.

அப்படி புதுவித ஐடியாவுடன் அவள் உருவாக்கிய ரெடிமேடு ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்ட வெளிநாடு களில் பெரும் வரவேற்பைப் பெற்று புதுப்புது ஆர்டர் களை குவித்தன.

அப்படி வடிவமைப்பு பிடித்துப் போன வெளிநாட்டு கம்பெனி ஒன்று பெரும் வாய்ப்பாக ஒரு கோடி ரூபாய்க் கான துணி ஏற்றுமதி ஆர்டரை ஜே.கே.கார்மெண்ட்ஸுக்கு வழங்கியது.



அன்று கிரிதரன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பெரும் சந்தோஷம் கொண்டவனாய் தேவியை அழைத்து கையிலிருந்த ஆர்டரைக் காட்டியவன் அந்த சந்தோஷத்தில் அப்படியே அவளைத் தோளோடு இறுக அணைத்துக் கொண்டான்.

தேவியும் தனது முயற்சி இப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிற ஆச்சரியத்தில் மகிழ்ந்தவளாய் திக்கு முக்காடித்தான் போனாள்.

அவளுக்கு அந்த ஆச்சரியத்தை விட கிரிதரன் சட்டென அவளைப் பிடித்து தோளோடு அணைத்தது இனம் புரியா அதிர்ச்சியலை ஒன்றை உடம்பில் உரு வாக்கியிருந்தது. திடீரென ஏற்பட்ட அந்த புதிய ஸ்பரிசத்தில் மின்னல் வெட்டியது போல் உணர்ந்தவள், கூடவே, அவனது அந்த அணைப்பிற்கு தன் உடம்பு எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் வளைந்து போவது கண்டு திடுக்கிடவும் செய்தாள்.

அந்த இதமான தோள் அணைப்பில் அவனுடன் நெருக்கமாய் தான் இருப்பதை உணர்ந்தபோது முகம் சிவந்து தலை கவிழ்ந்தாள். மெல்ல விழிகளை விரித்து நிமிர்ந்தவள் அவனையே உற்றுப் பார்த்தாள்.

அவனோ எவ்வித சங்கோஜமும் இல்லாமல் அவள் தோள்களை இறுகப் பற்றி அணைத்தபடி முகத்தில் சந்தோஷம் பொங்க அவளையே பார்த்து பாராட்டிக் கொண்டிருந்தான்.

அவளோ அவன் என்ன சொல்கிறான்.. எப்படி.. பாராட்டுகிறான்.. என்பதையெல்லாம் உணரவில்லை. அவள் காதில் விழவும் இல்லை. அவனது பாந்த நெஞ்சப்

பகுதியில் தோளோடு அழுந்திருந்த அவளது நிலை தான்... ஒரு வித மயக்கத்தில் கண்கள் சொருக அவளை சொக்க வைத்துக் கொண்டிருந்தது.

அப்படியொரு மயக்கப் பிடியில் அவள் தவிப்பதை உணர்ந்தானோ என்னவோ ஓரிரு நிமிட அணைப்பிற்குப் பின் அவளை விடுவித்து விட்டான்.

அவன் கிரிதரன் விடுவித்து விலகி இருந்தாலும் சில நிமிடங்களுக்கு அவளால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. நினைப்பு விழித்திருந்தாலும் மூளை எதிலோ மயங்கிக் கிடந்தது.

அந்த இதமான அணைப்பும் அவன் நெஞ்சில் சட்டென பொதிந்த இனிய ஸ்பரிசமும் மீள முடியாத மயக்கத்தை அவளுள் ஏற்படுத்தியிருந்தது.

அவள் விடுபட நினைத்தாலும் விடுபட முடியாத அளவுக்கு சொக்கிப் போயிருந்த அவள் கண்களில் கிறக்கம் தொனித்தது. அதை கிரிதரன் உணர்ந்தானோ.. இல்லை உற்றுப் பார்க்க நினைத்தானோ.. அப்படியே தனது முகத்தை அவள் முகம் அருகே கொண்டு போனான்.

''என்னை ரொம்பவும் மகிழ்ச்சியடையச் செய்து விட்டாய். பாராட்டுக்கள் தேவி...'' என மெல்லிய இனிமைக் குரலில் சொல்லிவிட்டு மறுபடியும் அவள் தோள்களைச் செல்லமாய் ஒரு தட்டு தட்டிவிட்டு அகன்றான்.

அவன் அப்படிச் சொல்லியபடி அகன்றதும்தான் அவளுக்கு சுரீரென உரைத்தது. கம்பெனிக்கு பெரிய ஆர்டர் கிடைத்த சந்தோஷத்தில் வெற்றிக் களிப்பில் இப்படி தன்னை அணைத்திருக்கிறான் என்பது புரிந்தது.



ஆனால் அவன் இப்படி உரிமையுடன் கொண்டாட அவள் மனைவியோ காதலியோ அல்லவே. மேலும் அவள் என்ன உணர்வுகளற்ற மரப்பாச்சி பொம்மையா? அவளும் உணர்வுகள் உள்ளவள்தானே? திடீரென அந்நியன் ஒருவன் கட்டிப் பிடித்தால் அவளால் அதை எப்படி எடுத்துக் கொள்ள முடியும்? எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

மேலும் தேவி என்றுமே இது போன்ற சூழ்நிலைகளை, உணர்வுகளை நினைத்துப் பார்த்தது இல்லை. தோழிகள், காதல், பாய் பிரண்ட் அது இதுவென பேசும் போதெல் லாம், 'இதெல்லாம் எனக்கு சத்தமாய் பிடிக்காத சமாச் சாரம்..' என ஒதுங்கிக் கொள்வாள்.

வழியிலும் பஸ் ஸ்டாப்பிலும் தன்னை பின் தொடர்ந்து எல்லை மீறப் பார்க்கும் ஆண்களைக் கூட தனது சுட்டெரிக்கும் பார்வையாலே தடுத்து விலகச் செய்து விடுவாள்.

அதனாலே பொது இடங்களில் தன்னை முறைத்து உரித்துப் பார்க்கும் சில ஆண்களின் கழுகுப் பார்வை களை அவள் கண்டு கொள்வதே கிடையாது. தோழிகள் வியந்து, ''நல்ல ஹாண்ட்சம் பர்சனாலிட்டிடி...'' என வர்ணிக்கும் ஆண்கள் கூட அவளைக் கவர்ந்தது இல்லை. ஒரு முறைக்கு மறுமுறை நிமிர்ந்து பார்க்க வைத்த தில்லை.

எல்லாவற்றுக்கும் மேலான காரணமாய் சிறு வயது முதல் தந்தையின் கட்டுப்பாட்டில் ஒழுக்கமாய் அவள் வளர்ந்த சூழ்நிலை, யாருக்கும் சிரமம் கொடுக்காது தானே முயன்று படித்து தன் காலில் நிற்கும் நிலையை அடைய வேண்டும் என ஒரு வெறியோடு படித்தது. அதே

வேகத்தில் வேலையை தேடிக் கொண்டது எல்லாம் அவளுக்கு இது போன்ற விஷயங்களைப் பற்றி சிந்திக்க விடாமல் மரத்துப் போகச் செய்திருந்தது.

ஆனால் அப்படி மரத்துப் போய் அவள் சிந்திக்காமல் விட்ட உணர்வுகளை எல்லாம் ஒரு இனிமையான அணைப்பின் மூலம் கிரிதரன் தட்டி எழுப்பியிருந்தான் என்று தான் சொல்ல வேண்டும்.

'முதன் முறையாய் அப்படி அவள் அனுபவித்த ஸ்பரிசம் ஒரு ஆண் மகனின் நெருக்கம் அவளுள் நிறைய எண்ணக் கீற்றுகளை கிளப்பியிருந்தது. தனக்கேற்ற துணை இவன்தானா? தனக்காக வரப் போகும் ராஜ குமாரன் இவன்தானா? என குபீர் சந்தோஷங்களை ஏற்படுத்தி அவளை திக்கு முக்காட வைத்திருந்தது.

அவள்தான் அப்படிக் கிறங்கி இருந்தாளோ என்னவோ அவனுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

மறுநாள் அலுவலகம் வந்தவன் வழக்கம்போல் அவளிடம் பேசினான். வேலைகளைச் சொல்லியபடி நடமாடினான். அப்படி ஒரு 'அணைப்பு' விஷயம் நடந்த தாய் கொஞ்சமும் அவனுக்கு நினைவில் இல்லாதது போலவே இருந்தது.

ஆனால் அவள் அதே நினைவில்தான் இருந்தாள். அவனைப் பார்க்கும் போதெல்லாம் சட்டென தன்னை தோளோடு இழுத்துப் பிடித்து தனது பரந்த நெஞ்சில் அவளை சாய்த்து அணைத்த அந்த இனிய உணர்வு தான் ஏற்பட்டது.

அப்படி அடிக்கடி அந்த உணர்வு ஏற்படுவதினாலே அதுவரை நேருக்கு நேராய் அவனது விழிகளைச்



சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தவள், அப்படித் தொடர முடியாமல் குனிந்தாள். அந்தக் காந்த விழிகள் அப்படியே தன்னை வசீகரித்து ஊடுருவது போல் மயங்கினாள்.

யதேச்சையாக அவன் அவளைத் தொட்டாலும், விரைந்து நடக்கும் பொருட்டு விரல்களோடு விரல் களைப் பிணைத்தாலும் அவள் உடம்பு முழுவதும் ஒருவித அதிர்வுடன் தவழ ஆரம்பிப்பதை உணர்ந்து திடுக்கிடத்தான் செய்தாள்.

மேலும் அந்த வாரம் முழுவதும் கிரிதரன் பேக்கிங் கூடத்திற்காக புது மெஷின் ஒன்றை வாங்கியிருந்ததால் அதை செயல்படுத்துவதிலேயே தீவிரமாய் இருந்தான். அவனுக்கு அவளிடம் பேசுவதற்குக் கூட சந்தர்ப்பங்கள் நிறைய அமையவில்லை.

ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு இன்ஸ் பெக்ஷன் ஸ்பாட்டிற்குச் சென்று விடுவான். அதன் பின் அலுவலகம் திரும்பாமல் தொலைபேசி மூலமாகவே தேவையான விளக்கங்கள், குறிப்புகள் கொடுத்து வராமல் இருந்து விடுவான்.

இப்படித் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் கிரிதரன் அலுவலகம் வராமல் இருந்துவிட அவனைப் பார்க்க முடியாமல் அவளுக்குத்தான் என்னவோ போல் இருந்தது.

என்னதான் அவள் சமாளித்து வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாலும் ஒவ்வொரு முறை காரின் ஹார்ன் ஒலி கேட்கும் போதும் அது கிரிதரனின் கார்தானா? என ஆவலாய் நிமிர்ந்து பார்க்க அவள் தவறவில்லை.

என்னதான் ஆயிற்று? எதற்காக இந்த வீணான தவிப்பு என்றெல்லாம் தனக்குத் தானே கேள்விகள் எழுப்பி

விடை காண முடியாமல் குழம்பத்தான் செய்தாள் அவள்.

அதனாலே மறுநாள் கிரிதரன் அலுவலகம் நுழைந்ததுமே அவளைக் காணாததைக் கண்டது போல் தத் விழிகள் விரிய கண் இமைக்காது பார்த்தாள்.

அதுவரை எத்தனையோ முறை பார்த்த கிரிதரன் தான் என்றாலும் இப்போது புதியதாய் பார்ப்பது போல்தான் பார்த்தாள். அந்த நெடுநெடு உயரமும், ஆஜானுபாகுவான திடகாத்திர தேகமும், சிவந்த நெற்றியில் கருள் முடிக் கற்றைகள் புரள சடார் சடாரென அவன் முகத்தை வெட்டிப் பேசும் அழகும், அந்த சிறை பிடிக்கும் காந்த விழிகளும் அவளை ரொம்பவும் வசீகரிக்கத்தான் செய்தன.

அப்படித் தன்னை மறந்து அவள் பார்த்துக் கொண்டிருக்க... தலையில் லேசாய் யாரோ தட்டினார்கள். பார்த்தால் சிரித்தபடி கிரிதரன்.

"என்னாயிற்று.. உனக்கு...? நான் பாட்டுக்கு கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீ என்னடாவென்றால் வெறித்த பார்வை பார்க்கிறாய்.. என்ன நிகழ்ந்தது உனக்கு?"

நினைவுக்கு வந்து முகம் சிவந்தவள் அவசரமாய் உதட்டைக் கடித்தாள்.

"ஒன்றுமில்லை... சார்..." என்றாள் அவசரமாக.

"ஒன்றுமில்லையா..? ஒன்றுமில்லை. என்று உன் உதடுகள் தான் சொல்கிறது. கண்கள் ஏதோ விஷயமிருப்பது போல படபடக்கிறதே?"



"அட... இதை வேறு கவனிக்கிறானா..?' என அவன் தன் கண்களை உற்றுப் பார்ப்பதை கவனித்தவள் படபடத்த விழிகளை மேலும் அசைத்தாள். காது மடல்கள் அதிர தலையை அசைத்து நிஜமாகவே ஒன்றுமில்லை..." என்றாள்.

கிரிதரனும் ஓரிரு நிமிடம் அவளை ஆழமாய் உற்றுப் பார்த்துவிட்டு விஷயத்திற்கு வந்தான்.

"தேவி, அந்த பெரிய ஏற்றுமதி ஆர்டருக்காக நிறைய துணிகளை டெக்ஸ்டைல் யூனிட்டிலிருந்து வாங்க வேண்டும். அதற்கான ஈ-மெயில்களை நாளையே தயார் செய்து அனுப்ப வேண்டும். செய்து விடுவாயா?"

"செய்கிறேன்... சார்..." என்றாள் தேவி அவசரமாய் ஞாபகப்படுத்தும் குறிப்பேடுகளில் அதை குறித்தவாறு.

அதன் பின் கிரிதரன் இம்முறை பெரிய ஆர்டருக்காக உற்பத்தியில் செய்ய வேண்டிய மாறுதல்களை விளக்கினான். தொழிலில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை அவளுக்குப் புரிய வைத்தான்.

ஒரு மணி நேரம் தொழில் பற்றி விரிவாய் பேசி விளக்கி விட்டு அவளை உற்றுப் பார்த்தவன், "அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம். உன்னிடம் ரொம்ப நாளாகச் சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தேன்..." என்றான் பீடிகையாய்.

"என்ன விஷயம் சார்?" என்றாள் அவள் ஆவலாய்.

"இன்று உன்னை என் வீட்டிற்கு அழைத்துச் சென்று முக்கியமான நபர் ஒருவரை உனக்கு காட்டப் போகிறேன்..."

"அப்படியா? யாரை சார்?"

அவள் சாதாரணமாய் கேட்க அமைதியாய் அவளையே பார்த்தபடி, "என்னுடைய மனைவியை..." என்றான் அவன்.




தேவிக்கு அவன் சொன்னதைக் கேட்டு ஒன்றும் ஓடவில்லை. ஒரு கணம் தன் காதுள் செவிடாகி விட்டதோ.. என்று கூட நினைத்தாள்.

"என்ன சொன்னீர்கள்?" என்றாள் திரும்பவும்.

அவன் நிதானமாய் அழுத்தத் திருத்தமாய் உச்சரித்துக் காட்டினான். "என் மனைவியை உனக்கு அறிமுகப்படுத்திக் காட்டுகிறேன். இன்று மாலை என் வீட்டிற்கு வா...!"

ஆயிரம் வோல்ட்டில் மின்சாரம் தாக்கியது போல் தேவிக்கு உடம்பே அதிர்ந்தது.

"மனைவியா? அப்படியானால் உங்களுக்கு திருமணம் ஆகி விட்டதா?"

அவள் அறியாச் சிறுமி போல் திக்கித் திணறி கேட்க அவன் அமைதியாய் கைகளைக் கட்டிக் கொண்டான். "இது போன்ற கேள்விகளை மாலையில் என் மனைவியிடமே நீ கேள். அவள்தான் சரியாகப் பதில் சொல்வாள்..."



சொல்லியபடி சிரிப்புடன் அவன் அகன்று விட்டான். ஆனால் அவள்?

கப்பல் கவிழ்ந்தது. இடி விழுந்தது போலத்தான் ஆகி விட்டாள். திக் பிரமை பிடித்தாற் போல் உட்கார்ந்த இடத்திலேயே பல மணி நேரங்களுக்கு கற் சிலையாகத் தான் இருந்தாள்.

பணியாள் கொடுத்த பைல்களை எரிச்சலாய்ப் பார்த்தாள். அருவையாய் புரட்டினாள். எந்த வேலையும் ஓடவில்லை. எதிலும் நாட்டமில்லை.

மாலை கிரிதரன் அவளை காரில் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்ற போதும் இயந்திரம் போல் தான் டக் டக்கென காரில் ஏறி உட்கார்ந்தாள்.

காரைச் செலுத்தியபோது அவள் எதுவும் பேசாமல் நேர் பார்வை பார்த்துக் கொண்டிருப்பதை கவனித்தவன், "அழகான ஷோ கேஸ் பொம்மை போல இருக்கிறாய் நீ..!" என்றான்.

மற்ற நேரமென்றால் ரசித்திருப்பாள். ஆனால் இப்போது அவள் இருக்கும் மனநிலையில் எரிச்சலே வந்தது.

"நான் ஒன்றும் பொம்மை இல்லை..." என்றாள் கோபமாய்.

அவன் சிரித்தான்.

"சரி.. பொம்மையை விட்டு விடுவோம். நான் சொன்ன அழகு அது.. உன்னிடம் இருக்கிறதுதானே?"

அவள் கோபமும் கூடியது.

"இது.. இது.. நீங்கள் என்னிடம் சொல்ல வேண்டிய வார்த்தைகள் இல்லை. வீட்டில் இருக்கிறார்களே.. உங்கள்

மனைவி அவர்களிடம் போய் சொல்லுங்கள். அவர்கள் சந்தோஷப்படுவார்கள்.!''

அழுத்தந்திருத்தமாய் கிளிப்பிள்ளை போல் அவள் பேசியதைக் கண்டு அவனுக்கு ஆச்சரியம்தான் அதிகமாகியது.

அவளை ஆழமாய் அர்த்தமான பார்வை பார்த்துக் கொண்டே "கண்டிப்பாய் சொல்கிறேன். நீ சொல்லச் சொன்னாய் என்று வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்கிறேன்...'' என்றதும் முகத்தை பழிப்பு காட்டுவது போல் வெட்டிக் கொண்டாள் அவள்.

அதன் பின் இருவரும் ஒன்றும் பேசவில்லை.

கிரிதரனின் பங்களா ஊருக்கு ஒதுக்குப்புறமாய் உள்ள லயன்ஸ் காலனியில் விஸ்தாரமான பரப்பளவில் அமைந்திருந்தது.

சுற்றிச் சூழ அடர்த்தியான மரங்கள் இருக்க.. நடுவே மார்பிள் பளபளப்பில் பங்களா பளிச்சிட்டது. வழி நெடுக விதவிதமான பூஞ்செடிகள், பச்சைப் பசேல் புல்வெளிகள், அழகான கூண்டுகளில் இனிமையாய் கீச்சிடும் வண்ணப் பறவைகள் என அந்த இடமே பார்ப்பதற்கு ரம்மியமாய் மனதைக் கவரும்படி இருந்தது.

கண்களில் இவையெல்லாம் பட்ட போதும் லயிப்பில்லாதவள் போல் தான் இறங்கி அவனுடன் நடந்தாள். பெரிய தேக்கு மரக் கதவுகளைத் தாண்டிய ஹாலின் முன்புறம் நெருங்கும் போது அவளுள் படபடப்பு கூடியது.

கிரிதரனின் மனைவியை சந்திக்கப் போகிறோம்? அவள் எப்படி இருப்பாள்? இவன் எல்லாவற்றையும் ரசித்து காட்டியிருப்பதைப் பார்த்தால் அவளும் நல்ல



அழகுள்ளவளாய் அழகியாய்த்தான் இருக்க வேண்டும் என நினைத்தாள்.

அந்த நினைப்பிலே ஓரிரு நிமிடம் நகராமல் அவள் நின்று விட முன்னால் சென்ற கிரிதரன் திரும்பி, ''என்ன அங்கே நின்று விட்டாய்? வா.. உள்ளே...'' என்றபடி கூட்டிச் சென்றான்.

உட்புறமாய் பெரிய பெரிய ஹால்களை கடந்த போதும் பணியாளர்களே தென்பட்டனர். தவிர அவன் மனைவியைக் காணவில்லை. அந்த தவிப்பில் சுவர்களிலும் கல்யாண போட்டோ அது இதுவென புகைப் படங்கள் தென்படுகிறதா என பார்த்தாள். அங்கும் இயற்கைக் காட்சிகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

கிரிதரன் அவளை படிகள் வழியாக மாடிக்கு அழைத்துச் சென்றான். அங்கும் நீளமும் அகலமுமாய் பெரிய அறைகள் தென்பட... அவன் மனைவி அங்குதான் இருக்கக் கூடும் என முடிவுக்கு வந்தாள் தேவி.

அவள் நினைத்தது போலவே நடுநாயகமாக இருந்த அறையினுள் நுழையப் போன கிரிதரன், "இதுதான் எனது மனைவியின் அறை...'' என சொல்லியபடியே உள்ளே நுழைந்தான்.

நுழைந்தவன், ''ரஞ்சனி... டியர்...'' என அழைத்த படியே செல்ல அந்த ஹாலின் புத்தக அலமாரிக்குப் பக்கத்தில் இருந்து அந்தப் பெண்... மெல்ல திரும்பினாள்.

பார்த்த தேவி அதிர்ந்தே விட்டாள்.

அந்தப் பெண்ணிற்கு கால்கள் வலுவிழந்து நடக்க முடியாத நிலையில் வீல் சேரில் உட்கார்ந்தபடி!

இவளா இவன் மனைவி?

அவள் திகைக்க... அவள் வியப்பை போக்கும் வண்ணம் மீண்டும் "ரஞ்சனி டியர்.." என அழைத்துக் கொண்டே புன்னகையுடன் கிரிதரன் அவள் பக்கம் சென்று கொண்டிருந்தான்.

தேவி அவளை உற்றுப் பார்த்தாள்.

இருபது- இருபத்திரண்டு வயது மதிக்கத்தக்க உருவத்தில்.. சுமாரான அழகோடு மாநிறத்தில் அந்தப் பெண்.. ரஞ்சனி இருந்தாள். கிரிதரனைப் பார்த்ததும் அவள் முகம் மலர்ந்தது. அவளும் புன்னகைத்தாள்.

"ஹாய்.. கிரி.." என்று அவள் உற்சாகமாய் கைகளை உயர்த்தியபோது, கிரிதரை எப்போதும் இப்படி செல்லமாய்த்தான் இவள் கூப்பிடுவாளோ என்ற எண்ணம் தேவையில்லாமல் தேவிக்கு எழுந்தது.

கிரிதரன் உயர்த்திய அவளது கைகளைப் பிடித்து குலுக்கியபடி அவள் பக்கம் இருந்த இருக்கை ஒன்றில் டக்கென அமர்ந்து கொள்ள.. ரஞ்சனியின் பார்வை தேவியை நோக்கிச் சென்றது.

"கிரி.. டியர், யார் இது? இவ்வளவு அழகாய், அழகு ராணி போல் இருக்கிறார்கள்?"

ரஞ்சனி கேட்க கிரிதரன் பெரிதாய் சிரித்தபடி, "நீ சொல்வது ரொம்பச் சரி. நானும் இதைத்தான் அவளிடம் சொன்னேன்.." என்றான். தேவிக்கு அவள் அழகு, அழகு ராணி என்று வர்ணித்ததை விட 'கிரி டியர்' என கிரிதரனை உரிமையாய் கூப்பிட்டு பேசுவதே பெரிதாய் புத்தியில் உரைத்தது.



"இவள் தேவி நம் அலுவலகத்தின் திறமையான பெண். புத்திசாலி.. இன்னும்..."

கிரிதரன் அறிமுகப்படுத்த.. புன்னகையுடன் பெரிதாய் கை கூப்பினாள் தேவி.

பதிலுக்கு நமஸ்கரித்து விட்டு தேவியின் கைகளைப் பிடித்து தனது இன்னொரு புறமாய் உட்கார வைத்துக் கொண்டு படபடவெனப் பேச ஆரம்பித்து விட்டாள் ரஞ்சனி.

அவள் படிப்பு பற்றி, குடும்பம் பற்றி ஒவ்வொன்றாய் அக்கறையாய் கேட்டாள். அவளது வெகுளித் தனமான பேச்சும் இயல்பாகப் பேசும் சுபாவமும் தேவியை ரொம்பக் கவர்ந்தது.

"நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்.." என்று அவர்களை விட்டு விட்டு கிரிதரனும் அகன்று விட்டான். ரஞ்சனி கொஞ்ச நேரம் பேசியவள், "வாருங்கள்.. உங்களுக்கு வீட்டைச் சுற்றி காண்பிக்கிறேன்..." என கிளம்பி விட்டாள்.

தேவியும் அவளது வீல்சேரைப் பிடித்து உரிமையுடன் தள்ள ஆரம்பிக்க ரஞ்சனி வழி காட்டினாள். ஒவ்வொரு அறையாய் காட்டி விளக்கினாள். தேவிக்கு அவள் சொல்வது எதுவும் காதில் உரைக்கவில்லை. தனக்கு ஒரு குறை இருந்தும் அதை கொஞ்சமும் பொருட்படுத்தாது சகஜமாய் வாழ்க்கையை எதிர் கொள்ளும் அவளது சுபாவம் ஆச்சரியப்படுத்தியது. துள்ளலும் உற்சாகமுமாய் சுவாரஸ்யம் பொங்க அவள் பேசும் பேச்சு ரொம்பவும் கவர்ந்தது.

ரஞ்சனிக்கும் புன்னகை முகமாய் இருக்கும் தேவியைப் பிடித்துப் போய் விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

அவள் கைகளைப் பிடித்தவள் விடாது கோர்த்துக் கொண்டுதான் வந்தாள். ஒரு வழியாய் எல்லா அறைகளையும் சுற்றிப் பார்த்து விட்டு முன்புற விஸ்தாரமான தோட்டப் பகுதிக்கு வந்தனர்.

தோட்டப் பகுதியில் அழகான புல்வெளிகளுக்கு மத்தியில் ஒய்யாரமான இரண்டு நாற்காலிகள் கிடந்தன.

''இதுதான் எங்கள் இடம்...'' என்றாள் ரஞ்சனி அவைகளைக் காட்டியபடி.

''உங்கள் இடமா?''

''நானும் கிரி டியரும் மாலையில் இங்கு உட்கார்ந்துதான் மணிக் கணக்கில் பேசுவோம். நாங்கள் பேசாத விஷயமே கிடையாது...''

ரஞ்சனி சொல்லியதை விட நொடிக்கொரு தரம் 'கிரி டியர்.. கிரி டியர்..' என சொன்னதுதான் அவளுக்கு எரிச்சலை அதிகப்படுத்தியது. கணவன் என்றால் டியர், அன்பே, லவ்லி, டார்லிங்.. என எப்படி வேண்டுமானாலும் அழைத்து கொஞ்சட்டும். அதற்காக மற்றவர்கள் முன் சொல்ல வேண்டுமா? என நினைத்தாள்.

அதைவிட ரஞ்சனி இப்படிச் சொல்வதால் நமக்கு ஏன் எரிச்சல் அதிகமாகிறது எனவும் நினைத்தாள்.

அதற்குள் ரஞ்சனி வீல் சேரின் சக்கரங்களை சுற்றியபடி அந்த மர நாற்காலி பக்கம் போனவள் மெல்ல கம்பிகளைப் பிடித்து எழுந்து தவழ்ந்தபடியே வீல் சேரில் இருந்து மர நாற்காலிக்கு மாறிக் கொண்டாள். உதவப் போன தேவியையும், ''என்னால் முடியும்.. நானே உட்கார்ந்து கொள்கிறேன்...'' என தடுத்து விட்டாள்.



தேவிக்கு அந்த நிலையிலும் மனம் தளராத அவளது தன்னம்பிக்கையை நினைத்து ஆச்சரியமே ஏற்பட்டது. எந்தவொரு மன பாதிப்பும் இல்லாமல், ஒரு விஷயத்தை, அதுவும் ஹாஸ்யம் பொங்க, சிரிக்கச் சிரிக்க எப்படி இவளால் பேச முடிகிறது? என நினைத்தாள்.

அவள் அப்படி சிந்தித்தபடியே கண்கள் வெறிக்க அவளையே பார்த்துக் கொண்டிருப்பதை கவனித்த ரஞ்சனி, அவள் தோள்களைத் தட்டினாள்.

''யார் அந்த ராஜகுமாரன்?'' என்றாள்.

''ராஜகுமாரனா?''

''பின் அடிக்கடி கண்கள் கிறங்க... உங்கள் நினைப்பு எங்கோ போய் விடுகிறதே.. அதனால்தான் கேட்கிறேன். மனதில் யாரோ சிம்மாசனமிட்டு உட்கார்ந்து அடிக்கடி தொந்தரவு செய்வது போல் தெரிகிறது?''

'விட்டால்.. அது யார்... என்று கூட இவள் கண்டு பிடித்து விடுவாள்... போல...' என ஒரு கணம் பயந்து போன தேவி அவசரமாய் மறுத்தாள்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.. வீட்டை.. பங்களாவின் அழகைப் பார்த்து பிரமித்துக் கொண்டிருந்தேன்..'' என சமாளித்தாள்.

ஆனால் ரஞ்சனி விடவில்லை. அடுத்த கேள்வியாய் அவள் எதிர்பாராத ஒன்றைத்தான் கேட்டாள்.

''தேவி, நம் கிரிதரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்றாள்.

'கிரிதரா? அதுவும் 'நம்' கிரிதர் என்கிறார்களா?' என ஒரு கணம் கொதித்துப் போன தேவி, ''எனக்கென்ன

தெரியும்? உங்கள் கணவரைப் பற்றி நீங்கள் தான் நினைக்க வேண்டும். நான் நினைக்க என்ன இருக்கிறது?'' என்றாள் கோபமாய்.

அவள் சொன்னதும் ரஞ்சனியின் முகத்தில் பலத்த ஆச்சரியம்! ''என்ன சொன்னீர்கள்... கிரிதர்.. என் கணவரா?''

அவளை திகைப்பாக்கியபடி பெரிதாய் சிரிக்க ஆரம்பித்தாள் ரஞ்சனி.




கிரிதர் என்... கணவரா? என்றபடி ரஞ்சனி சிரிக்க ஆரம்பிக்க... புரியாமல் விழித்த தேவி, ஏன் இப்படிச் சிரிக்கிறாள்..? என்றபடி சட்டென அவள் கழுத்தைப் பார்த்தாள்.

அவள் திகைப்பு பன்மடங்காகியது.

கழுத்தில் தாலி இல்லை..! பாசி மணிகளால் கோர்த்த செயின் ஒன்றுதான் இருந்தது.

''நீ.. நீங்.. நீங்கள்.. கிரிதரனின் மனைவி தானே?''

திக்கித் திணறி நேரிடையாகவே கேட்டாள்.

''அப்படி யார் சொன்னார்கள்?'' எதிர் கேள்வி கேட்டாள் ரஞ்சனி.



''கிரிதரன்தான் சொன்னார்..'' என்றபடி தேவி சுற்றும் முற்றும் பார்த்து அவன் பார்வையில் படுகிறானா என தேடினாள்.

அவள் நினைப்பை புரிந்த ரஞ்சனி, ''அவர் வீட்டின் உள் ரூமில் உள்ளே அலுவலக அறையில் இருக்கிறார். நீங்கள் சொல்லுங்கள். கிரிதரன் வேறு.. என்ன.. என்ன.. சொன்னார்?'' என்றாள்.

தேவி கைகளை விரித்தாள். ''இது ஒன்றுதான்! வீட்டிற்கு வா.. மனைவியை அறிமுகப்படுத்துகிறேன் என்றார். கூட்டி வந்து உங்களை அறிமுகப்படுத்தினார். அவ்வளவுதான்!''

ரஞ்சனி ஒரு கணம் பேசாது நீளமாய் மூச்சிழுத்தபடி அவளையே பார்க்க.. தேவிக்கு படபடப்பு கூடியது.

''சொல்லுங்கள்.. கிரிதரன் உங்கள் கணவர்தானே?'' என்றாள்.

தலையை வேகமாய் மறுத்து ஆட்டினாள் ரஞ்சனி.

''கிரிதரன் என் கணவர் இல்லை. எங்களுக்குள் கல்யாண பந்தம் எதுவும் இல்லை. ஆனால்...''

ரஞ்சனி நிறுத்திவிட்டு உற்றுப் பார்க்க தேவி கண்களை மேலும் விரித்தபடி ஆவலானாள்.

''கிரிதரன் என்னை கட்டிக் கொள்ள விரும்பினார். நான்தான் மறுத்து விட்டேன்...''

சர்வ சாதாரணமாய் ரஞ்சனி சொல்ல தேவியின் திகைப்பு அதிகமாகியது.

''மறுத்து விட்டீர்களா.. ஏன்?''

''அது.. பெரிய.. கதை..!'' என்றாள் ரஞ்சனி.

''சொல்லுங்கள்.. சொல்லுங்கள்..'' என தேவி பரபரத்தாள்.

ரஞ்சனி கதை போலவே சொல்ல ஆரம்பித்தாள்.

''கிரிதர் வேறு யாருமல்ல. என் சொந்த அத்தை பையன்தான். சிறு வயது முதலே இருவரும் ஒரே ஊரில் அடுத்தடுத்த வீட்டிலே வளர்ந்தோம். அப்படி சிறு வயது முதலே கிரிதருடன் பழகியதால் எனக்கு புதியதாய் எவ்வித ஈர்ப்பும் ஏற்படவில்லை. அதனாலே கிரிதர் பெரியவனாய் ஆனதும், என்னைக் கட்டிக் கொள்கிறாயா? என உரிமையாய்க் கேட்டான். நானும் உரிமையாய் 'நோ..' எனக் கூறி மறுத்து விட்டேன்...''

''என்னை மறுத்து விட்டீர்களா?''

தேவி அலறாத குறையாய் கேட்க ரஞ்சனி வாய் விட்டுச் சிரித்தாள்.

''ஆமாம்.. வேறு என்ன சொல்ல? கிரி டியரை எனக்கு ரொம்பப் பிடிக்கும்தான். ஆனால் ஒரு நண்பனைப் போல் தான் காதலனாய் அல்ல...''

அதற்கும் ரஞ்சனி விளக்கம் கொடுக்க தேவி மறுபடியும் கிரி டியர் என அவள் உச்சரிப்பதைக் கண்டவள், ''ஆனால் நொடிக்கொரு தரம் டியர்.. டியர்.. என கொஞ்ச மட்டும் செய்கிறீர்களே?'' என கேட்டும் விட்டாள்.

ரஞ்சனி அதற்கு தோள்களை குலுக்கினாள்.

''ஹூம்...! அதில் தப்பொன்றும் இல்லையே.. என் செல்ல நாய்க்குட்டி ஜிம்மியைக் கூட ஜிம்மி டியர் என்றுதான் கூப்பிடுவேன்...''



''அப்படியானால்... நாய்க்குட்டியும் கிரிதரும் ஒன்றா...?''

வெகுண்டு முகம் சிவக்க.. தன்னையறியாமல் தான் தேவி அப்படிக் கேட்டாள் என்று சொல்ல வேண்டும்.

அதை உற்றுக் கவனித்த ரஞ்சனி மறுபடியும் சிரிக்க ஆரம்பித்து சீரியலாய் நிறுத்தினாள்.

''ஆமாம்.. கிரிதரை நாய்க்குட்டியுடன் ஒப்பிட்டால் உனக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது?''

சட்டென தன் தவறை உணர்ந்து உதட்டை அழுந்தக் கடித்த தேவி சமாளிக்கவும் செய்தாள்.

''அவர்.. அவர்... என்.. பாஸ்... முதலாளி அல்லவா?''

''ஓ.. முதலாளி.. விசுவாசமா? இருக்கட்டும் இருக்கட்டும்...''

தேவிக்கு சட்டென அது ஞாபகம் வந்தது.

''அப்புறம் இன்னொன்று...''

''ம்... சொல்லு...''

''கிரிதர் என்னிடம் உங்களை யார் என்று சொன்னார் தெரியுமா?''

''யார் என்று சொன்னார்?''

''வீட்டில் என் மனைவி இருக்கிறாள். அறிமுகப் படுத்துகிறேன்... எனத்தான் கூட்டி வந்தார்...''

ரஞ்சனி கடகடவெனச் சிரித்தாள்.

''தாலி கட்டாமல் யாராவது கணவனாக ஆக முடியுமா?''

''அது.. எனக்குப் புரிகிறது. பிறகு.. ஏன் கிரிதரன் அப்படிச் சொல்ல வேண்டும்?''

"அது... வேறு ஒன்றுமில்லை. கிரிதர் என் மேல் ஆசைப்பட்டார். கல்யாண அப்ளிகேஷனும் கொடுத்தார். நான் தான் ரிஜெக்ட் பண்ணி விட்டேன்."

கைகளைத் தட்டாத குறையாய் ரஞ்சனி சிரிக்க தேவிக்கு எரிச்சலே வந்தது. கம்பீரமும், ஆளுமையும் கொண்ட கிரிதர் கிடைக்க இவள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு திமிராய் பிதற்று கிறாளே? என நினைத்தாள்.

"சரி.. நீங்கள் சொல்வது இருக்கட்டும். உண்மையில் உங்களுக்கு கிரிதர் மீது ஆசையில்லையா? அவரைக் கட்டிக் கொள்ள விருப்பமில்லையா?"

தெள்ளத் தெளிவாய் தேவி கேட்டு விட நினைக்க அவளும் திட்டவட்டமாகவே பதில் கூறினாள்.

"இல்லை... இல்லவே.. இல்லை..!"

தேவி ஒரு நிம்மதியை அடைந்தவள் போல் பெரு மூச்சுவிட ரஞ்சனி அவளையே உற்றுப் பார்த்தாள்.

"தேவி, உனக்கொரு விஷயம் தெரியுமா?"

"சொல்லுங்கள்..."

"நான் 'நோ' சொல்லி விட்டதும் கிரிதர் என்னை விட்டு விட்டார். இப்போது இன்னொருவரை, இன்னொரு அழகான பெண்ணை விரும்பத் தொடங்கியிருக்கிறார்."

தேவிக்கு சுருக்கென்றது.

"இன்னொருவரா..?"

"ஆமாம்.. அது.. யார் தெரியுமா?"

"யார்?"



தேவி மைவிழிகள் விரிய ரஞ்சனியையே உற்றுப் பார்க்க.. ரஞ்சனியும் அழுத்தமாய் உச்சரித்தாள்.

"அது.. நீ.. நீ.. நீதான்..!"

தேவிக்கு தூக்கி வாரிப் போட்டது. இருக்கையின் நுனிக்கே நம்ப முடியாதவளாய் வந்து விட்டாள்.

"என்ன.. நானா?"

"நீயே.. தான்..."

தேவி தலையை மறுப்பாய் அசைத்தாள்.

"ம்ம்.. சும்மாவாக.. எதையோ உளறுகிறீர்கள். நான் நம்ப மாட்டேன்!"

"நீ நம்பித்தான் ஆக வேண்டும். ஏனெனில் இந்த விஷயத்தை என்னிடம் சொன்னதே கிரிதர்தான்...!"

"என்ன கிரிதர் சொன்னாரா?"

"ஆமாம் தெளிவாக எனக்கு நன்கு புரியும்படி சொன் னார். நான் ஒரு அழகான பெண்ணை விரும்ப ஆரம்பித் திருக்கிறேன். அவள் என் அலுவலகத்தில்தான் வேலை பார்க்கிறாள். அவளை உனக்கு அறிமுகப்படுத்த இன்று நம் வீட்டிற்குக் கூட்டி வருகிறேன் என்றார். அதன்படியே உன்னையும் கூட்டி வந்திருக்கிறார். இப்போது புரி கிறதா?" தேவியால் இன்னமும் நம்ப முடியவில்லை.

"கிரிதர் நீங்கள் சொல்கிற மாதிரி.. இப்படி.. இப்படியா சொன்னார்?"

"இப்படியேதான் சொன்னார்..."

அழுத்தந்திருத்தமாய் உறுதியான குரலில் சொன்னாள் ரஞ்சனி.

# 13

அன்று வீட்டிற்கு வந்த தேவிக்கு எல்லாம் அதிசயமாகத்தான் இருந்தது. புரண்டு புரண்டு பார்த்தும் தூக்கம் வந்தபாடில்லை. ரஞ்சனி சொன்ன எதையும் நம்ப முடியவில்லை.

அதற்குப் பின் சிறிது நேரம் ரஞ்சனியுடன் பேசி விட்டு விடைபெற்று, தப்பித்தோம், பிழைத்தோம் என அங்கிருந்து ஓடி வந்து விட்டாள். எங்கே அப்படி கிளம்பும் தருவாயில் பங்களாவில் உள்ளே சென்றிருக்கும் கிரிதரன் திரும்பி விடுவானோ.. என்ற பயம் அவளுக்கு!

அப்படித் திரும்பி விட்டால் அந்த கிரிதரன் முகத்தில் எப்படி விழிப்பது? இந்த ரஞ்சனி வேறு கிண்டல் செய்வது போல் ஏடா கூடமாய் ஏதாவது சொல்லி தொலைத்து விடுவாள் என்றெல்லாம் நினைத்துதான் பயம்!

நல்லவேளை.. கிரிதரன் வருவதற்குள் அங்கிருந்து அகன்று விட்டாள்.

கிரிதரன் கூட தன்னை தேடியிருப்பான். தான் கூட்டி வந்தவள் தன்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் போய் விட்டாளே.. என எண்ணியிருப்பான்!



அவன் அப்படி நினைத்தாலும் பரவாயில்லை. பின்.. எதையாவது கூறி சமாளித்துக் கொள்ளலாம். இந்த ரஞ்சனி முன் கிரிதரை பேஸ் செய்து அப்படி தர்மசங்கடம் அடைவதற்கு எது எவ்வளவோ மேல்!

ஆமாம்.. இந்த ரஞ்சனி என்ன சொல்கிறாள்?

கிரிதரன் விரும்புகிறான் என்றுதானே!

அவன் தன்னை விரும்புவதைக் கூறி அதை அவளுக்கு தன்னை அறிமுகப்படுத்த கூட்டி வந்ததாய் அல்லவா ரஞ்சனி சொல்கிறாள்?

கிரிதர் உண்மையில் அப்படிச் சொல்லியிருப்பாரா?

அப்படி ஒரு விருப்பம் இருந்தால் அதை முதலில் தெரிவிக்க வேண்டியது நம்மிடம் தானே? அதை விட்டு விட்டு ரஞ்சனியிடம் போய் ஏன் சொல்ல வேண்டும்?

இந்த ரஞ்சனி உண்மையைச் சொல்கிறாளா? இல்லை கேலியாய் ஒரு பொய்யை பிதற்றுகிறாளா?

எது... உண்மை..? எது பொய்?

ரொம்ப நேரம் கேள்விகள் மனதை அழுத்த குழம்பத் தான் செய்தாள் தேவி.

அவளால் ரஞ்சனி சொன்னதை முழுமையாய் நம்ப முடியவில்லை. எந்த முடிவிற்கும் வர முடியவில்லை.

கடைசியில் தெளிவடைந்தவள் போல் ஒரு சிந்தனையில் மனதை நிறுத்தினாள்.

நாளை அலுவலகத்தில் நேரிடையாகவே கிரிதரிடம் இது பற்றி பேசிவிட வேண்டும், என தைரியமான உறுதியொன்றையும் எடுத்துக் கொண்டாள். அதுவரை வீணான

...NEMARA PUBLIC LIB...

கற்பனைகளுக்கு மனதில் இடம் கொடுக்கக் கூடாது என இறுமாப்புடன் இருந்து கொண்டாள்.

மறுநாள் அலுவலகத்தில் கிரிதரை சந்தித்தபோது அவன் முகத்தை உற்றுக் கவனித்தாள். அதில் எவ்வித சலனமும் இல்லை. எந்தவித பாதிப்பும் இல்லை. அவன் பாட்டுக்கு வேலைகளை மும்முரமாய் கவனித்துக் கொண்டிருந்தான்.

மதிய லஞ்ச் ஹவரில் டிபன் பாக்ஸுடன் அவள் நுழைந்த போதுதான் இருவருக்கும் பேச சந்தர்ப்பம் கிடைத்தது.

''ஆமாம்.. நேற்று.. என்ன சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி வந்து விட்டாய்?'' என ஆரம்பித்தான் கிரிதரன்.

அவன் ஆரம்பித்ததும் அப்போதே பேச்சு வாக்கில் எப்படியும் விஷயத்தை கேட்டு விடுவது என முடிவு செய்து விட்டாள் தேவி.

''அது... அது.. ரொம்பவும் நேரமாகி விட்டது. அதனால் கிளம்பி விட்டேன். வேறு ஒன்றுமில்லை, சார்...'' என்றவள், ''சார்... அப்புறம் இன்னொரு விஷயம் உங்களிடம் கேட்க வேண்டும்...'' என பீடிகையிட்டாள் அவள்.

''என்ன விஷயம்?'' என்றபடி நெற்றியைச் சுருக்கினான் கிரிதரன்.

''ரஞ்சனிதான் சொன்னார்கள். ஆனால் உங்களிடம் கேட்க கொஞ்சம் தயக்கமாக இருக்கிறது...''

''என்னிடம் என்ன தயக்கம்? சும்மாக் கேள்...''

சொன்னபடி அவன் இனிமையாக புன்னகைத்ததும் அவளுக்கு தைரியம் வந்தது.



''சார்..'' என ஆரம்பித்து படபடவென விஷயத்தை கொட்டினாள் தேவி.

அவள் சொல்லச் சொல்ல கிரிதரனின் முகம் மெல்ல மாறி ஆச்சரியம் படர்ந்தது. அப்படியே ஸீட்டை விட்டு எழுந்து விட்டான் அவன்.

''அப்படியா ரஞ்சனி சொன்னாள்? சரியான விளையாட்டுப் பெண்..!'' என்றபடி மோவாயைத் தேய்க்க தேவிக்கு அவன் சொல்வதன் அர்த்தம் சரிவரப் புரியவில்லை.

மேலும் தெளிவு பெற விரும்பியவளாய் அவனை ஆவலாய்ப் பார்த்தவள் மறுபடியும் திணறும் குரலில், ''ரஞ்சனி மேடம் நீங்கள் என்னை விரும்புவதாய் வேறு கூறி...''

அவள் வார்த்தைகளை முடிக்கவில்லை.

''சுத்தப் பேத்தல்...!'' என கத்தினான் கிரிதரன்.

அவன் முகம் மாறியதையும், குரல் உயர்ந்ததையும் கண்டு அதிர்ந்தவள் அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு திடுக்கிட்டு விட்டாள்!

சுத்தப் பேத்தலாம்!

அப்படியானால்... கிரிதரன் அவளை விரும்பவில்லையா? ரஞ்சனி சொன்னது பொய்யா?

கிரிதரன் இறுக்கமான முகத்துடன் அவள் முன்னால் வந்து கைகளைக் கட்டிக் கொண்டு அவளைப் பார்த்தான்.

''ரஞ்சனி உன்னை மட்டுமல்ல... என்னையும் நன்கு ஏமாற்றியிருக்கிறாள். ஏமாற்றப் பார்த்திருக்கிறாள்.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''இரு. முதலில் உனக்குப் புரியும்படி ரஞ்சனி கதையை சொல்கிறேன். அப்போதுதான் நடக்கும் விஷயங்களை உன்னால் புரிந்து கொள்ள முடியும்...''

''சொல்லுங்கள்...'' என்றாள் அவளும் ஆவலாய்.

''தேவி, உன்னிடம் ரஞ்சனி சொன்னது போல், அவள் எனது சொந்த அத்தை பெண். சிறு வயது முதலே அடுத்தடுத்த வீட்டில் வளர்ந்தவர்கள்தான். ஆனால் அவள் உன்னிடம் சொல்லாதது என்ன தெரியுமா?''

''என்ன?''

''அந்தச் சிறு வயது முதலே... எனக்குத்தான் ரஞ்சனி. ரஞ்சனிக்குத்தான் நான்.. என பெரியவர்கள் முடிவு செய்ததுதான்...! அது எங்கள் மனதில் ஆழமாய் பதிந்து விட.... வளர்ந்த நாங்கள் காதலர்கள் போல்தான் எண்ணினோம். அப்படியே ஒருவர் மேல் ஒருவர் தீராத அன்பு செலுத்தினோம்...''

அவன் சாதாரணமாய்ச் சொல்லிக் கொண்டு போக, ''அப்படியா?'' என சின்ன உதறலுடன் உள்ளுக்குள் அதிர்ந்தாள் தேவி.

''எல்லாம் ஒழுங்காய் போய்க் கொண்டிருந்தது. ரஞ்சனி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். நானும் தொழிலில் ஈடுபட்டு நல்ல நிலைக்கு முன்னேறிக் கொண்டிருந்தேன். ரஞ்சனியின் கல்லூரிப் படிப்பு முடிந்ததும் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம் என பெரியவர்கள் மூலம் பேசி முடிவும் எடுத்தாயிற்று. அப்போதுதான் விதி உருவத்தில் அந்த மோசமான விபத்து நடந்தது...''



''விபத்தா?''

''ஆம்.. தன் ஸ்கூட்டியில் காலேஜ் முடிந்து திரும்பிக் கொண்டிருந்த ரஞ்சனி திருப்பம் ஒன்றில் எதிரே அசுர வேகத்தில் வந்த லாரி ஒன்று மீது மோதி விட்டாள். அந்த மோசமான ஆக்ஸிடெண்டில்தான் அவள் கால் எலும்புகள் சிதைந்து அவளுக்கு நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. நாங்கள் அத்தனை பேரும் அதைத் தாங்க முடியாமல் அப்படியே நொறுங்கிப் போனோம்... துள்ளியோடி திரிந்து கொண்டிருந்த எனது ரஞ்சனியின் வாழ்க்கை ஒரே நாளில் வீல் சேரே கதி என இருண்டு விட்டது...''

பெருமூச்சுடன் சொல்லியபடி கிரிதரன் நிறுத்த அவனது சோகத்தை புரிந்தவளாய் கண்கள் தாழ தானும் குனிந்தாள் தேவி.

கிரிதரன் ஒரு சில நிமிடங்கள் பேசாமல் இருந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு தொடர்ந்தான்.

''அதற்குப் பின்தான் ரஞ்சனி அடியோடு மாறி விட்டாள். ஒருவாறு சிரமத்துடன் வீல்சேரில் சென்று கல்லூரிப் படிப்பை முடித்தவள்... அப்படியே இன்னொன்றையும் செய்தாள்.''

''இன்னொன்றா..?''

''ஆமாம்.. என்னைப் பார்ப்பதை என்னுடன் பேசுவதை எல்லாம் தவிர்க்க ஆரம்பித்தாள். முதலில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. பின் போகப் போகத்தான் எனக்கு விஷயம் புரிந்தது.

தேவி கண்களை அகல விரித்துப் பார்க்க கிரிதரன் கூர்மையான பார்வையுடன் தொடர்ந்தான்.

''அதாவது... அதற்குப் பின்.. தனக்கு கால்கள் போய் நடக்க முடியாத நிலையை அடைந்து விட்டதால் இனி.. எனக்கு.. அவள் பொருத்தமில்லை.. கால் முடமாகிப் போன அவளை நான் கட்டிக் கொண்டு வாழ்க்கை முழுவதும் நான் அவதிப்படக்கூடாது என அவள் நினைத்து விட்டாள்...''

''..........''

''அவள் நினைப்பை புரிந்த நான்... பயந்து உடனே பெரியவர்கள் மூலம் திருமணப் பேச்சை எடுத்து, ரஞ்சனியை திருமணம் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தேன். ஆனால்... ஆனால்...''

''என்ன நடந்தது..?'' என்றாள் தேவி மெல்லிய குரலில்.

''ரஞ்சனி ஒரேயடியாய் பிடிவாதமாய் மறுத்து விட்டாள். கல்யாணம் வேண்டாம் எனக் கூறியதோடு மட்டுமில்லாமல் என்னையே பிடிக்கவில்லை. வெறுக்கிறேன். என்றெல்லாம் கூறி எல்லா கல்யாண ஏற்பாடுகளையும் தடுத்து விட்டாள். நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்க மறுத்து விட்டாள். அவள் மனதில் எனக்கு அவள் சரியான ஜோடி இல்லை. கால் முடமாகி விட்ட தனக்கு மனைவியாகிற தகுதி இல்லை. என்கிற எண்ணம் திடமாய், ஆழமாய் பதிந்து போயிற்று...''

''..........''

கிரிதரன் சொல்லிவிட்டு மறுபடியும் நிறுத்தினான். நீளமாய் அலுப்புடன் மூச்சிழுத்தபடி தொடர்ந்தான்.

''ஆனால்.. என்னால் அப்படி ரஞ்சனியை அவள் போன போக்கில் விட மனமில்லை. அவளுக்கு ஒரு



நல்ல வாழ்க்கையை ஏற்படுத்த... அவள் மனதை மாற்ற முயன்றேன். இன்னும் முயன்று கொண்டிருக்கிறேன். அதனாலே.. அவளை வேறு எங்கும் விடாமல் இங்கு கூட்டி வந்து என்னுடனே தங்க வைத்திருக்கிறேன். எப்படியும் அ.பள் மனதை மாற்றிவிட வேண்டும். அவளை என் மனைவியாக்கிக் கொள்ள வேண்டும். என்பதுதான் எனது நோக்கம். ஆசை... ஆனால்.. ஆனால்.. இந்த ரஞ்சனிதான் எதையும் புரிந்து கொள்ள மறுக்கிறாள்... வீணான பிடிவாதம் பிடிக்கிறாள்.. அவளை என்னால் கொஞ்சமும் புரிந்து கொள்ள முடியவில்லை.''

சலிப்புடன் கிரிதரன்.. சொன்னவன் அத்தோடு நில்லாமல், ''இனி நீதான் இவ்விஷயத்தில் உதவ வேண்டும். ரஞ்சனி மனதை மாற்ற வேண்டும்...'' எனவும் சொல்லி முடிக்க திடுக்கிடத்தான் செய்தாள் தேவி.

## 14

''நீ தான் அந்த வேலையைச் செய்ய வேண்டும்'' என்று கிரிதரன் சொன்னதும் தேவிக்கு தூக்கி வாரித்தான் போட்டது.

அவள் விழிகள் விரிய திகைத்து நிற்பதை உணர்ந்த கிரிதரனும் குரலை சற்று தாழ்த்திப் பேசினான்.

"கொஞ்சம் யோசித்துப் பார் தேவி, எதிர்பாராமல் நடந்த ஆக்ஸிடெண்ட் அது. அதனால் கால்களை இழந்ததால் அவள் வாழ்வே முடிந்து விட்டதாய் அர்த்தமா? மேலும் இந்த இக்கட்டான நேரத்தில் என்னைத் தவிர வேறு யாரால் அவளுக்கு உதவ முடியும்? அதை இந்த ரஞ்சனி கொஞ்சமும் புரிந்து கொள்ள மறுக்கிறாள். அதனால் தான் சொல்கிறேன். நீயும் சூழ்நிலையை புரிந்து கொள்ள வேண்டும். எனக்காக ரஞ்சனி மனதை மாற்ற முயற்சிக்க வேண்டும்."

அதை ஒப்புக் கொள்பவளாய் வேகமாய் தலையசைத் தாள் தேவி.

அவளுக்கு இப்போது விஷயம் முழுக்கப் புரிந்தது.

கால் இழந்த நிலையில் தன்னை கிரிதரன் கட்டிக் கொள்ள வேண்டாம் என நினைக்கிறாள். மேலும் தன்னைப் பார்த்ததும். கிரிதரனுடன் சேர்த்து விடுவோம் என்ற நினைப்பில் அவன் விரும்புவது போல் ஏடாகூட மாய் நம்மிடம் சொல்லி நடிப்பு நடித்திருக்கிறாள்!

கிரிதரன் ஒரு கணம் தேவி பேசாமல் சிந்தனையில் இருப்பதைக் கண்டு அவளை உற்றுப் பார்த்தான்.

"என்ன யோசிக்கிறாய் தேவி.. உன்னால் முடியும் தானே?"

"முயன்று பார்க்கிறேன்.. சார்..."

கிரிதரன் நெற்றியைத் தேய்த்தபடி அவள் பக்கம் வந்தவன் மீண்டும் குரல் கம்ம பேசினான்.

"நீயே.. சொல் தேவி.. நான் செய்வதெல்லாம் சரி தானே..? பின் ஏன் இந்த ரஞ்சனி புரிந்து கொள்ள மறுக்கிறாள்..?"



அவனது அழகான கம்பீர முகத்தில் சோகக் கோடுகள் தெரிவது கண்டு ரஞ்சனிக்காக இவ்வளவு வருந்து கிறானே... என நினைத்தவள் அதில் நியாயம் இருப்பதை உணர்ந்து சமாதானமும் கொண்டாள்.

அதற்குப் பின் கிரிதரன் அவளை அடிக்கடி தன் வீட்டிற்கு அனுப்பி ரஞ்சனியுடன் பழகச் சொன்னான். "இனி நீ தான் அவளுக்கு உற்ற தோழி போல் நடந்து கொண்டு அவள் மனதை மாற்ற வேண்டும்..." என்ற பணியையும் கொடுத்தான்.

தேவியும் மாலை வேளைகளில் தினமும் ரஞ்சனியை சந்தித்துப் பேச ஆரம்பித்தாள். தினம் வீட்டிலே அடைந்து கிடக்காமல் அவளைக் கூட்டிக் கொண்டு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், பூங்கா, பொட்டானிக்கல் கார்டன் என வெவ்வேறு இடங்களுக்கு ரஞ்சனியை கூட்டிச் செல்ல ஆரம்பித்தாள்.

பாதி நாட்கள் கடற்கரை பீச்சுக்கு சென்று விடுவார்கள். கடற்கரை மணலில் ரஞ்சனியின் வீல் சேரை தள்ளியபடி தேவி நடக்க, ரஞ்சனியும் அலைகளை இயற்கையை ரசித்தபடி ஏதாவது பழைய கல்லூரி விஷயங்களை கதை போல் சொல்லிக் கொண்டு வருவாள்.

தேவிக்கும் ரஞ்சனியுடன் பழகப் பழக அவளை ரொம்பவும் பிடித்துப் போயிற்று. பாவம் சின்னப் பெண். இப்படி ஒரு விபத்து நடந்து அவளது வாழ்க்கையையே பாழாக்கி விட்டதே.. என வருந்தினாள்.

கிரிதரன் சொல்வதும், அவளை திருமணம் செய்து கொள்ள நினைப்பதும் நியாயமே என அவளுக்குத் தோன்றியது.

அதனாலே.. ரஞ்சனியுடன் பேசும் சமயங்களில் அடிக்கடி கிரிதரன் பற்றிய பேச்சையே எடுப்பாள். அவன் அலுவலகத்தில் நடப்பது, தொழிலில் அசாத்தியமாய் அவன் எடுக்கும் முயற்சிகள் பற்றியெல்லாம் விவரிப்பாள்.

ரஞ்சனியும் அவையெல்லாம் ஆர்வம் பொங்க கேட்கத்தான் செய்வாள். ஆனால் எல்லாவற்றையும் கேட்டு விட்டு கடைசியில் அவள் சொல்வதுதான் அவளை மிக எரிச்சலாக்கும்.

''ம்ஹூம்..! என்ன திறமை இருந்து... என்ன பயன்? இந்த கிரிதர் அத்தானுக்கு சுத்தமாய் மூளை இல்லையென்றுதான் சொல்வேன்.. ஏனென்றால்...''

ரஞ்சனி பீடிகை பிடிக்க, ''சொல்லுங்கள்...'' என்பாள் தேவி.

''உன்னைப் போன்ற அழகான ஒரு பெண்ணை பக்கத்தில் வேலைக்கு வைத்துக் கொண்டு கொஞ்சம் கூட 'ரோமான்ஸ்' செய்யாமல் அத்தான் அலைகிறாரே. அவரெல்லாம்... என்ன ஆண்மகன்..?''

ரஞ்சனி இப்படிச் சொல்வது தேவிக்கு மிகுந்த எரிச்சலைத்தான் ஏற்படுத்தும்.

அதைவிட ரஞ்சனி சில சமயம் ஒரு படி மேலே போய் அவளை விசாரணையும் செய்ய ஆரம்பித்து விடுவாள்.

அப்படித்தான் ஒரு நாள் பீச் மணலில் வழக்கம் போல் காற்று வாங்கும்போது ''தேவி, உன்னிடம் சில கேள்விகள் கேட்பேன். நீ டக் டக்கென்று பதில் சொல்ல வேண்டும்'' என்றாள்.



''கேளுங்கள்...'' என்றாள் தேவி புரியாத பார்வையுடன்.

''கிரிதரன்... பற்றி... நீ என்ன நினைக்கிறாய்?'' என்றாள் அவள் முகத்தையே கூர்ந்து கவனித்தவாறு.

தன் முகம் சட்டென சிவந்து போவதையும் கண்களின் கருவிழிகள் அலை பாய்ந்து தடுமாறுவதையும் அவள் கண்டு பிடித்து விடக் கூடாது என்பதற்காகவே சட்டென குனிந்த தேவி ஒருவாறு சமாளிக்கவும் செய்தாள்.

''அவர்... கிரிதரன்... என்.. பாஸ்.. முதலாளி.. தொழிலில் நல்ல.. திறமைசாலி...''

தேவி நிறுத்த.. ''ம்ம்.. இன்னும் சொல்லு...'' என்றாள் கைகளை உயர்த்தியபடி ரஞ்சனி.

''நல்ல.. குணம் அவருக்கு.. இரக்கப்படுபவர்... பழகுவதற்கு... இனிமையானவர்...''

தேவி அத்தோடு நிறுத்தி விட்டாள்.

''அவ்வளவுதானா...?'' என்றாள் ரஞ்சனி.

''அவ்வளவுதான்...!''

தேவி சொல்லியவாறு தனது உதடுகளை இறுக்கிக் கொள்ள... ரஞ்சனி நேரிடையாகவே கேட்டாள்.

''தேவி.. கிரிதரனை இனிமையானவர்.. என்று நீ சொன்னாய் தானே..?''

''அ.. அ... ஆமாம்...''

''அப்படியானால் அவரை உனக்குப் பிடிக்கும் தானே?''

''ம்ம்... பிடிக்கும்...''

''அவாது அழகு... அந்த கம்பீர பர்ஸனாலிட்டி எல்லாம் உன்னைக் கவர்ந்தது தானே?''

''அ... அது...''

''சும்மாத் தயங்காமல் பதில் சொல்...''

தேவி தன் நிலை தர்ம சங்கடமாய் போய்க் கொண் டிருப்பதை உணர்ந்தாள்.

''வேண்டாம் ரஞ்சனி. இது போன்ற கேள்விகளை என்னிடம் கேட்கக் கூடாது...!'' என்றாள்.

ரஞ்சனி சிரிப்புடன் கைகளைத் தட்டினாள்.

''எனக்குப் புரிந்து விட்டது...'' என்றாள்.

தேவி குழப்பமாய் நிமிர, ''உன் மனதில் இருப்பதை நான் கண்டு பிடித்து விட்டேன். நீ மறைக்க முடியாது...'' என்றாள் அவள்.

தேவி துணுக்குற்றுத்தான் போனாள். அடுத்து ரஞ்சனி சொன்ன வார்த்தைகள் அவளை உள்ளூர தூக்கியடித்தது.

''நான் கண்டு பிடித்து விட்டேன். நீ கிரிதரனை விரும்புகிறாய் தேவி...'' என்றாள் ரஞ்சனி.

தேவி ஒரு கணம் வாயடைத்துதான் போனாள்.

கண்கள் நிலை குத்தி நிற்க... கற்சிலைபோல் அவளையே பார்த்தாள்.

ரஞ்சனி சிரித்தபடி தொடர்ந்தவள், ''பார்.. தேவி இனியும் இவ்விஷயத்தை நீ மறைக்க முடியாது. பார் நான் அப்படி உண்மையைச் சொன்னதும் உன் கன்னங்கள் சூடேறி சிவந்து கொண்டு.. உன் கருவிழிகள் நிலை யில்லாமல் படபடத்துக் கொண்டு... எனக்கு சந்தேகமே



இல்லை.. காதல் கடலில்.. கிரிதரன் மேல் பயங்கர மோகம் கொண்டுதான் சிக்கியிருக்கிறாய்.. என்ன நான் சொல்வது சரிதானே?

ரஞ்சனி தன் முகத்தையே உற்றுப் பார்த்தவாறு பேச தேவியின் நிலை தர்மசங்கடமாய் போயிற்று. அவள் சொல்வதெல்லாம் உண்மையே! கிரிதரன் பற்றி சொன்ன தும் கன்னங்கள் சிவக்க.. விழிகள் படபடத்து போகிறதே! தன் கட்டுப்பாட்டை இழந்து சிந்தனை தடுமாற ஆரம்பிக்கிறதே!

இந்த நிலை நீடிப்பது ஆபத்து என்பதை உணர்ந்தவள் அத்தோடு ரஞ்சனியிடம் பிடிவாதமாய் பேச்சை மாற்றி அவளை வீடு கொண்டு வந்து சேர்த்தாள்.

அவளை பத்திரமாய் விட்டு விட்டு வீட்டிற்குச் சென்று இரவு படுக்கையில் விழுந்தபோதுதான் பெரும் நிம்மதி ஏற்பட்டது. ரஞ்சனியின் மனதை மாற்ற நினைத் தால்.. அவளை நம் மனதை கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்கிறாளே.. எனப் பயந்தாள்.

அதற்கு அடுத்த நாளும் அவள் பயப்படும்படியாகவே இன்னொரு காரியத்தைச் செய்தாள் ரஞ்சனி.

வழக்கம்போல் பீச் வாக்கிங்கிற்கு தேவியோடு கிளம் பியவள் போன் செய்து கிரிதரனையும் அங்கு வரச் சொன்னாள். பதட்டமாகிய தேவியிடம், ''பேச்சுத் துணைக்கு கிரிதரும் இருக்கட்டுமே...'' எனக் கூறிவிட் டாள்.

அவள் சொன்னபடியே கிரிதரனும் வந்து விட்டான். மூவரும் பீச் மணலில் சேர்ந்தபடி பேசிக் கொண்டு

செல்ல.. அப்போதுதான் அந்த கூத்தை நடத்தினாள் ரஞ்சனி.

சற்றுத் தள்ளி மர இருக்கை ஓரமாய் அமர்ந்திருந்த பெண் ஒருத்தியைப் பார்த்து உற்சாகமாய் கைகளை அசைத்து வீசியவள், ''அவள் என் பழைய கல்லூரித் தோழி. இருங்கள் பேசி விட்டு வந்து விடுகிறேன்...'' என இருவரிடமும் சொல்லிவிட்டு அவர்களது பதிலை எதிர் பாராமல் விறுவிறுவென வீல் சேரை தானே சுழற்றியபடி அவள் பக்கம் சென்று விட்டாள்.

போன ரஞ்சனி போனவள்தான்! அவள் பாட்டுக்கு அந்தத் தோழியுடன் மணிக்கணக்காய் பேச ஆரம்பித்து விட்டாள்.

நேரம் ஆக ஆக ரஞ்சனியின் திட்டம் தே விக்கு புரிந்து விட்டது.

தோழியுடன் பேசியபடி கடைக்கண்ணால் அவள் இருவரையும் குறும்பாய் பார்த்துச் சிரித்தது அவளுக்கு எல்லாவற்றையும் புரிய வைத்து விட்டது.

அவள் வேண்டுமென்றே அந்தத் தோழியிடம் விடாது இழுத்துப் பேசிக் கொண்டு... தேவியையும், கிரிதரனையும் தனிமையாய் பேச விடுகிறாளாம்!

அதை உணர்ந்த தேவி எரிச்சலே ஆனாள்.

ஏனெனில் அவள் நினைத்தது போல் கிரிதரன் அவளிடம் பேசிக் கொண்டிருந்தான். ஆனால் எல்லாமே அலுவலகம் பற்றி அலுவலக கணக்கு வழக்குகள் பற்றி. அவளும் அதற்குத்தான் சிரத்தையாய் யோசித்து பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.



ஆனால் அது புரியாமல் ரஞ்சனி இருவரும் மனம் விட்டு ஏதோ சொந்த விஷயங்கள் பேசுவதாய் நினைத்து விட்டாள்.

சரியான மக்கு ரஞ்சனி!

இதில் இன்னொரு விஷயமும் தேவிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

அவள்தான் ரஞ்சனியின் குறும்புப் பார்வையை, குசும்புத் திட்டத்தை உணர்ந்திருந்தாள். கிரிதரனோ அதைப் பற்றிக் கொஞ்சமும் உணராமல் அவன் பாட்டுக்கு அலுவலக விபரங்களை அக்கறையாய் பேசிக் கொண்டிருந்தான்.

இவனை... என்ன... செய்ய..?

அவள் தடுமாறியவளாய் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே கிரிதரன் சற்று நெருங்கி வந்தவன் அவள் கைகளைப் பற்றி மென்மையாக அழுத்திக் கொண்டு, ''சரி தேவி, நம் விஷயம் என்னாயிற்று?'' என்றான்.

சட்டென அவன் பக்கத்தில் வந்ததையும் மெல்லிய குரலில் அவன் கேட்டதையும் கண்டு திடுக்கிடவே செய்தாள் தேவி.

''எ.. என்ன.. என்ன... விஷயம்...?'' என்றாள் வாய் குழறியபடி.

''அதான்... தேவி.. ரஞ்சனி.. விஷயம்.. ரஞ்சனியுடன் பேசிப் பார்த்தாயா?'' என்றதும்தான் அவளுக்கு அவன் என்ன கேட்க வருகிறான் என்பதின் அர்த்தம் புரிந்தது.

சட்டென திரும்பி ரஞ்சனியைப் பார்த்தாள்.

ரஞ்சனி.. கிரிதரன் அப்படி நெருங்கி வந்ததையும், தன் கைகளைப் பிடித்திருப்பதையும் கண்டு மேலும் சிரிப்பு பொங்க தலையை ஆட்டியபடி தூர இருந்தே அவள் கண்களால் ஜாடை செய்வது தெரிந்தது.

இந்த கிரிதரனும் நிலைமை புரியாமல் தேவியின் கைகளை விடாமல் பிடித்துக் கொண்டு, "சொல் தேவி, ரஞ்சனியுடன் பேசிப் பார்த்தாயா? எதுவும் முன்னேற்றம் உண்டா?" என்றான் திரும்பவும்.

அட.. அசடே... முதலில் கையை விடு.. ரஞ்சனி அதோ பார்க்கிறாள்.. பார்த்து வேறு ஏதோ கற்பனை கொள்கிறாள்... என கத்த வேண்டும் போல் அவளுக்கு இருந்தது.

ஆயினும் எதுவும் செய்யாமல் அவள் அப்படியே தன் கரங்களை அவனுக்கு கொடுத்தபடியே இருந்தாள். அப்படி ஒரு தடுமாற்ற நிலை தனக்கு உணருவதை உணர்ந்து அவள் திடுக்கிடவும் செய்தாள்.

## 15

அன்று முழுவதும் தேவி குழப்பமாகவே தவித்துக் கொண்டிருந்தாள். கிரிதரன் அவளிடம் சொல்லி அனுப்பியது என்ன. இங்கு நடந்து கொண்டிருப்பது என்ன?



அதிலும் இந்த ரஞ்சனி அவளை விட ஒரு படி மேல் சென்று தன்னையும் கிரிதரரையும் சேர்த்து வைக்க முயற்சி செய்து விட்டாளே என மனம் ரொம்பவும் பரிதவித்தது.

இந்த கிரிதரன் இதையெல்லாம் கொஞ்சமும் உணராமல் இருக்கிறானே.. அவனுக்கு இது தெரிந்தால் என்னாகும் என்ற பயமும் ஏற்பட்டது.

அதைவிட ரஞ்சனி அப்படி அடிக்கடி சொல்லுவதாலோ இல்லை முன்பே அப்படிப்பட்ட உணர்வுகளை கொண்டிருந்ததாலோ.. இப்போதெல்லாம் கிரிதரனை முன்பு போல் நேருக்கு நேர் பார்த்துப் பேச முடியவில்லை. அவனது காந்தக் கண்களை சந்திக்கும்போது அவளையறியாமல் கன்னங்கள் சிவக்க.. விழிகள் மருகுவதை அவளால் உணர முடிந்தது. கை விரல்களோடு கோர்த்த அவன் பேசியபோது சூழ்நிலையை உணர்ந்தும் கைகளை உதறாமல் இருந்தது. மூளை எச்சரித்தும் உணர்வுகள் கட்டுப்பாடின்றி நடந்து கொண்டதும் அவளை திடுக்கிடத்தான் செய்தது.

போதாக் குறைக்கு அன்று இரவு ரஞ்சனி வேண்டுமென்றே போன் செய்து சீண்டினாள்.

"என்ன... தேவி.. இன்று கடற்கரையில் கிரிதரனுடன் ரொமான்ஸ் ஆரம்பித்து விட்டதா?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை..."

"பின் உன் கை விரல்களைப் பிடித்துக் கொண்டு மெல்லிய குரலில்... கிரிதர் ஏதோ சொல்ல ஆரம்பித்தாரே...?"

"ரஞ்சனி உனக்குத் தெரியாது. நீ நினைப்பது போல் இல்லை. என் கையைப் பிடித்துக் கொண்டு கிரிதரன் என்ன சொன்னார் தெரியுமா?"

''ஐ... லவ் யூ... என்று தானே..?''

''அந்தக் கன்றாவியெல்லாம் கிடையாது...''

''வேறு... என்ன கேட்டார்... முத்தம் கித்தம்... என்று ஏதாவது...''

தேவிக்கு எரிச்சலே அதிகமாகியது.

''ரஞ்சனி.. ப்ளீஸ் உளறலை நிறுத்து! கிரிதர் என்ன நினைக்கிறார். அவரது உண்மையான மனநிலை எது தெரியுமா?''

''தெரியும். எனக்கு நன்றாகத் தெரியும்...''

''என்ன.. சொல்லு?''

''அவர்.. இன்று உன்னிடம் காதலை மனந்திறந்து சொல்லி விட்டார். நாளை... என்ன செய்யப் போகிறார் தெரியுமா?''

''நாளையா...?''

தேவி திடுக்கிட ரஞ்சனி சர்வ சாதாரணமாய் சிரித்தாள.

''பிக்னிக்...'' என்றாள்.

''பிக்னிக்கா...?'' என தேவி அதிர ரஞ்சனி தனது திட்டத்தை விவரிக்க ஆரம்பித்தாள்.

''நாளை நாம் மூவரும்.. பிக்னிக் போகப் போகிறோம். நம் நகரில் இருந்து நாற்பது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் தென்மலை என்னும் மலைப் பிரதேச ஊருக்கு! எல்லாம் கிரிதரிடம் சொல்லி நான்தான் ஏற்பாடு செய்திருக்கிறேன். யாருக்காகத் தெரியுமா?''

''யாருக்காக?''



''உனக்காக! நீயும் கிரிதரும் காதல் செய்வதற்காக.. உங்கள் காதல் வளர்வதற்காக..!''

''ரஞ்சனி... ப்ளீஸ்.. விட்டு விடு..! இந்த விளையாட்டெல்லாம் வேண்டாம்...''

''விளையாட்டா..? நான் சொன்னனே... 'ரொமான்ஸ்.' அதுதான் நடக்கப் போகிறது. இம்முறை கிரிதர் ரொமாண்டிக்காக என்ன செய்யப் போகிறார் தெரியுமா?''

''............''

''உன்னை கட்டி அணைக்கப் போகிறார். உனது பட்டான இதழ்களில் முத்தமிடப் போகிறார்.''

ரஞ்சனி பாட்டுக்கு கதையளக்க... அதற்கு மேலும் எரிச்சலில் தாங்க முடியாதவளாய் டக்கென போனை வைத்து விட்டாள் தேவி.

ரிசீவரை வைத்த பிறகும்.. அவளுள் எழுந்த படபடப்பும் பரபரப்பும் அடங்கவில்லை. கொதிப்பாகவே யோசித்தாள்.

இந்த ரஞ்சனி வரவர ஓராசத்தனமாய் பேசிக் கொண்டிருந்தவள், இப்படி முட்டாள்தனமாய் ஏற்பாடுகளிலும் இறங்கி விட்ட ாள்? இவளை என்ன செய்வது?

இவளை இப்படியே இவளது போக்கில் விட்டால் கடைசியில் கிரிதரன் நம்மையல்லவா தப்பாக நினைத்து விடப் போகிறான். என்ன செய்வது?

கிரிதரனிடம் இவள் பேசுவதை இவள் செய்வதை எல்லாம் சொல்லிவிட வேண்டும்.

அதுதான் சரி. நமக்கும் நிம்மதி!

தேவி முடிவெடுத்து பாரம் நீங்கியவளாய் தூங்க ஆரம்பித்தாள்.

மறுநாள் ரஞ்சனி சொல்லியது போலவே அலுவலகத்திற்குச் சென்ற அவளை கார் அனுப்பி வீட்டிற்கு வரச் செய்து விட்டான் கிரிதரன்.

வீட்டிற்குப் போனால்.. அங்கு ஒரு நாள் பிக்னிக் செல்லத் தயாராய் கிரிதரனும் ரஞ்சனியும்!

திகைத்த தேவியிடம், ''தேவி, ரஞ்சனி ஆசைப்படுகிறாள். நாம் மூவரும் பக்கத்து மலைப்பிரதேச தென்மலைக்கு பிக்னிக் என்று சென்று விட்டு மாலை திரும்பி விடுவோம்..'' என்றான்.

தேவி ரஞ்சனி ஒரு மாதிரியாகத் தன்னை பார்த்துச் சிரித்து கண்களை அசைப்பதை கண்டவள், ''நான் எதற்கு? நீங்கள் இருவரும் செல்லுங்கள்...!'' என்றாள்.

தேவி இப்படிச் சொன்னதும் டக்கென அவள் பக்கம் வந்த கிரிதரன் கிசுகிசுப்பான குரலில், ''என்ன புரியாமல் பேசுகிறாய்..? ரஞ்சனி மனதை மாற்ற இது சரியான சந்தர்ப்பம் புரிந்து கொள்..!'' எனவும் தேவியும் விடாது அதே கிசுகிசுப்புக் குரலில், ''ஐயோ கிரிதரன்.. உங்களுக்குத் தெரியாது.. இது...'' என ஆரம்பிக்கவும் ரஞ்சனி சேரைத் தள்ளியபடி இருவர் பக்கமும் வந்து விட்டாள்.

''என்ன எனக்குத் தெரியாமல் இருவரும் ரகசியம் பேசுவது போல் தெரிகிறது?''

வேண்டுமென்றே கேட்டு ரஞ்சனி சிரிக்க கிரிதரன் பதறத்தான் செய்தான்.

''ரகசியமா..? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை ரஞ்சனி. அலுவலக விபரம் ஒன்றுதான் கேட்டேன்...'' என்று சமாளித்தான்.



''சரி.. கிளம்புங்கள்; நேரமாகிறது.''

வேறு வழியில்லாமல் தேவியும் கிளம்பினாள்.

அப்படிக் கிளம்ப காரில் ஏறும்போதும் ரஞ்சனி சும்மா இருக்கவில்லை.

''கிரிதர், பாருங்கள் தேவி கட்டிருக்கும் இந்த மஞ்சள் பார்டர் மயில் தோகை வண்ணச் சேலை எவ்வளவு அழகாய் இருக்கிறது?'' எனவும் கிரிதரன் குனிந்து காரின் இருக்கைகளை சரி பண்ணிக் கொண்டிருந்தவன், ''ஆமாம்... ஆமாம்...'' என்றான்.

ரஞ்சனி விடவில்லை. ''கிரிதர், அதைவிட தேவியின் அழகைத்தான் கொஞ்சம் பாருங்களேன். அந்த நீளமான கூந்தல் அழகுடன். அழகாய் படபடக்கும் அந்த மைவிழிகள். வில்லான புருவங்களை அழகாய் வளைத்து அவள் பார்க்கும் அந்த ஆளை வீழ்த்தும் பார்வை. அந்த கவர்ந்திழுக்கும் முத்துப் பல் புன்னகை. உடம்பு முழுதும் அழகாய்த் தெரியும் நளினமும் மென்மையும்...'' என அவள் பாட்டுக்கு தேவியை வர்ணித்துக் கொண்டு போனவள் டக்கென நிறுத்தி, ''சொல் கிரிதர், தேவி அழகுதானே. நல்ல அழகிதானே?'' என்றாள்.

அவள் பேசுவது புரியாமல், காரின் ஸ்பார்க் ப்ளக்குகளை துடைத்து சரி பண்ணிக் கொண்டிருந்தவன் அவள் என்ன சொல்கிறாள் என்று கவனியாமலே அதற்கும், ''ஆமாம்.. ஆமாம்..'' என்று சொல்ல தலையில்தான் அடித்துக் கொண்டாள் தேவி.

அவள் ரஞ்சனியோ தேவியின் கைகளை செல்லமாய்க் கிள்ளி, ''பார்.. நீ அழகி என்று அவர் ஒத்துக் கொண்டார். அறிவிப்பு செய்து விட்டார்..'' என்றாள்.

ஒருவாறு சீண்டலும் கேலியுமாகவே கிளம்பினார்கள். ரஞ்சனியும் கிரிதரும் தான் ஏதேதோ சொல்லி சிரித்துப் பேசி வர தேவி பேச்சில் கலந்து கொள்ளாமல் மௌன மாகவே வந்தாள்.

அப்படி அவள் வருவதைப் பார்த்து. "ஏன் உம்மணாம் மூஞ்சி மாதிரி வருகிறாய்? அதான்.. ரொமான்ஸ் உண்டு. இன்று உன்னை கிரிதர் கட்டிப் பிடிக்கப் போகிறார்..." என ரஞ்சனி மெல்லிய குரலில் சீண்டிய போதும் அதே இறுக்கத்தோடுதான் இருந்தாள்.

அரை மணி நேர பிரயாணத்திற்குப் பின் தென் மலையை அடைந்து விட்டார்கள். சிறுசிறு குன்றுகளாய் மலைகள் சூழ இயற்கை வளத்துடன் கண்களுக்கு குளிர்ச்சியாய் இருந்தது தென்மலை.

அந்த இயற்கை அழகை ரசித்தபடி இறங்கினார்கள். தேவி காரின் டிக்கியில் வைத்திருந்த வீல் சேரை விரித்து ரஞ்சனி உட்கார உதவினாள். அவளே சேரைத் தள்ளிக் கொண்டு ரஞ்சனிக்கு பல இடங்களைக் காட்ட ஆரம்பித் தாள்.

சிறுவர் பூங்கா, பொட்டானிக்கல் கார்டன், வண்ணச் செடிகள் நிரம்பிய பூந்தோட்டம், கொம்பு மான்கள் சுற்றித் திரியும் வனப்பகுதி, அழகிய மீன்களுடன் உள்ள அக்குவாரியம் என ஒவ்வொன்றாய்ப் பார்த்து ரசித் தார்கள்.

அப்படியே இரண்டு மணி நேரம் மூவரும் அலைந்து திரிந்து விட்டு மதிய உணவு சாப்பிடுவதற்காக மலை யடிவார பகுதியொன்றைத் தேர்ந்தெடுத்து அமர்ந்தார் கள்.



ஹாட் பாக்ஸில் கொண்டு வந்த சூடான சப்பாத்திகளை கிரிதரன் பரிமாற அவனுக்கு உதவினாள் தேவி. அரை மணிநேரத்தில் சாப்பிட்டு முடித்து விட்டு மறுபடியும் இயற்கையை ரசிக்கக் கிளம்பினார்கள்.

இம்முறை ரஞ்சனி ஞாபகமாய் லெதர் பேக்கில் கொண்டு வந்த கேமிராவை எடுத்துக் கொண்டாள்.

முதலில் கிரிதரை சில போட்டோக்கள் எடுத்தவள், பின் தேவியிடம் கொடுத்து தன்னை எடுக்கச் சொன் னாள். பின் கேமிராவை வாங்கி தானே சில அழகான இயற்கை காட்சிகளை, ரம்மியமான இடங்களை தேர்வு செய்து போட்டோ எடுத்தாள்.

அப்படி எடுத்துக் கொண்டிருந்தவளின் கண்களில் எதிரே சிறிது தூரத்தில் அடர்ந்த மரங்கள் நிறைந்த தோப்பும், மேடான மணல் பகுதிகளும் இருப்பது தெரிந் தது. ரஞ்சனி அதைப் பார்த்து உற்சாகமாய் கைகளைக் காட்டினாள். தேவியை தன் வீல்சேரை தள்ளிக் கொண்டு அங்கு போகும்படி சொல்ல.. தேவியும் அந்தத் தோப்பின் அழகை ரசித்தபடியே கூட்டிச் சென்றாள்.

கிரிதரன் பாறை இடுக்குகளில் வளர்ந்திருந்த விநோத செடிகளை கண்டு அதிசயித்து ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருந்தான்.

இருவரும் தோப்புப் பகுதியை அடைந்ததும் ரஞ்சனி, "ரம்மியமான சூழ்நிலை... போட்டோ எடுக்கிறேன்" என படபடவென பல புகைப்படங்களை எடுத்தாள்.

அப்படி எடுத்தவளுக்கு டக்கெனத்தான் அந்த எண்ணம் பளீச்சிட்டது. நிமிர்ந்து குறும்பாய் தேவியை பார்த்தவளின் மனதில் அந்தத் திட்டம் தயாரானது.

உடனே அதை செயல்படுத்த நினைத்தாள் ரஞ்சனி.

"தேவி.. உன்னை.. போட்டோ எடுக்கவில்லையே... நீயும் கொஞ்சம் போஸ் கொடு. எடுக்கிறேன்..." என்றாள்.

தேவி பிடிவாதமாய் மறுத்தாள்.

"வேண்டாம்.. ரஞ்சனி.. என்னைப் போய் எதற்கு? நீ இயற்கையை படம் எடு."

ஆனால் ரஞ்சனி விடவில்லை.

"எனக்கு உற்ற தோழி போல் இருக்கிறாய். உன்னை எடுக்காமல் இருப்பேனா..?" என தேவியை அவள் நிற்கும் நிலையிலே வெவ்வேறு விதமாக போட்டோ எடுக்க ஆரம்பித்து விட்டாள்.

தேவிதான் கூச்சப்பட்டு விலகி ஓடினாள்.

ரஞ்சனி அப்படி ஓடிய தேவியைக் கூப்பிட்டு பிடிவாதமாய் பெரிய மரக்கிளை ஒன்றின் பக்கம் நிற்க வைத்தாள்.

கீழே அடர்ந்த குருத்து மணல் பரப்பு தெரிய.. அதில் நின்றபடி தேவியை மரக்கிளையை பிடித்துக் கொள்ளச் சொன்னாள். அப்படியே அவள் தலையை ஒரு சாய்த்து எதிரே இருக்கும் மற்றொரு மரத்தை பார்த்துக் கொண்டு இருக்கும்படி சொன்னாள். "அப்படி இருக்கும் போஸில் ஒரு புகைப்படம் எடுக்க வேண்டும். நீ அப்படியே நில் தேவி.." என கெஞ்சவும் செய்தாள்.

தேவி அவள் சொன்னபடியே நின்று எதிர் திசையை பார்த்தாள்.

"தேவி ஒரு நிமிடம் அதே.. போஸில் இரு.. கேமிராவில் பிலிம் முடிந்து விட்டது. பிலிம் மாற்றிக் கொள்கிறேன்.."



என்ற ரஞ்சனி சட்டென கிரிதரன் பக்கம் திரும்பி அவனைப் பக்கத்தில் வருமாறு வேகமாய் கையசைத்தாள்.

கிரிதரன் ரஞ்சனி திடீரென அழைப்பதைக் கண்டு புரியாமல் தான் வேகமாய் ஓடி வந்தான்.

பரபரப்பாய் வந்தவனிடம் தேவியைக் காட்டிய ரஞ்சனி, "கிரிதர்.. தேவி.. அங்கு புதை மணலில் சிக்கி விட்டாள் போல் தெரிகிறது. சீக்கிரம் சென்று காப்பாற்றுங்கள்..." என்றாள் கம்மிய குரலில் அவசரம் காட்டியவளாய்.

ரஞ்சனி பதட்டம் காட்டி சொன்னதும் கிரிதரன் அதற்கு மேல் ஒன்றும் யோசிக்கவில்லை.

படபடவென தேவியை நோக்கி ஓட ஆரம்பித்தான். இரண்டு கைகளால் கிளைகளைப் பற்றியபடி எதிர் திசையைப் பார்த்துக் கொண்டு தேவி நின்றிருந்த நிலை... அவனுக்கு அவள் புதை மணலில் மாட்டிக் கொண்டு தவிப்பது போலவே இருந்தது.

ஆனால்.. ஒன்றும் கத்தாமல்... அப்படியே... இருக்கிறாளே.. ஒரு வேளை அதிர்ச்சியில் பயந்திருப்பாளோ என நினைத்துக் கொண்டு நெருங்கினான்.

தேவியோ... ரஞ்சனி கிரிதரன் கூப்பிட்டுச் சொன்னதையோ தன்னை நோக்கி கிரிதரன் ஓடி வருவதையோ உணராமல் அவள் பாட்டுக்கு கிளையைப் பற்றியபடி, எவ்வளவு நேரமாய் இப்படி நிற்பது? இன்னமும் இந்த ரஞ்சனி போட்டோ எடுக்காமல் இருக்கிறாளே? என எரிச்சலோடு நினைத்துக் கொண்டிருந்தாள்.

பக்கத்தில் சென்ற கிரிதரன் தேவி புதை மணலில் சிக்கியிருக்கிறாள். மரக்கிளைகளை பற்றிக் கொண்டு தவிக்கிறாள் என்றெண்ணியபடி டக்கென அவளை தாவிப் பிடித்து இழுத்தான். தன் கரங்களால் அவளை வளைத்து தன் பக்கம் நெஞ்சோடு அணைத்து அப்படியே இழுத்து வெளிக் கொண்டு வந்தான்.

சட்டென கிரிதரன் வந்து ஒரே தாவலாய் தன்னை இழுத்து நெஞ்சோடு இறுக கட்டிப் பிடித்தது கண்டு திடுக்கிட்டு கதி கலங்கிப் போனாள் தேவி.

தேவியால் ஒரு கணம் நடப்பதை நம்ப முடியவில்லை!

கிரிதரன் அவளை இறுகக் கட்டிப் பிடித்தபடி.

ஆனால்... அவன் பிடித்திருந்த விதம், அணைத்துக் கொண்ட பாங்கு ஆசையாய் செய்த மாதிரி இல்லாமல் ஏதோ கடமையாய் காப்பாற்றுவது போல் செய்வது தெரிய புரியாமல் திகைக்கச் செய்தாள்.

எல்லாவற்றுக்கும் மேலாய் சட்டென ஏற்பட்ட அவன் ஸ்பரிசமும் அந்த இதமான அணைப்பும் அவளை என்னவோ செய்தது. நினைப்பு விழித்திருந்தாலும் மூளை தன் வசமிழந்து எதிலோ மயங்குவதை உணர்ந்தாள். அவன் தன் உடம்பை வளைத்துப் பிடித்திருந்த விதமும், அவனது திடமான கரங்களில் தன் உடம்பு உணர்வுகளின் சிகரமாய் துவழ ஆரம்பித்ததும். தன் கட்டுப்பாட்டை இழந்து புலன்களின் விழிப்பால் அவளும் அப்படியே அவனை இறுக அணைத்துக் கொண்டதும் அவளை திடுக்கிடத்தான் வைத்தது.

அவள் விடுபட நினைத்தாலும் விடுபட முடியாத அளவுக்கு சொக்கிப் போயிருந்த அவள் கண்களில்



கிறக்கம் தொனித்தது. அப்படி கருவிழிகள் மேல் சொருக இறங்கியிருந்த மை விழிகளின் பார்வையில் தூரமாய் கைகளைத் தட்டியபடி ரஞ்சனி சிரித்துக் கொண்டிருப்பது பட்டு உரைத்தது.

சட்டென நடப்பதை சுதாரித்து உணர்வுக்கு வந்தாள் தேவி.

''ஐயோ விடுங்கள்..!'' என்றபடி தனது மலர்க்கரங்களால் அவனது பிடிகளை விலக்கி சுகமான அணைப்பிலிருந்து விடுபட சிரமமாய்த்தான் இருந்தது.

ஆனால் அவன் கட்டிக் கொண்டிருப்பது காதலினால் அல்லவே! இந்த ரஞ்சனி சூதுவாய் செய்த ஏதோ ஒரு விஷமத்தில்தானே?

ஆனால் திடீரென இப்படி அந்நியன் ஒருவன் கட்டிப் பிடித்தால் அவளால் அதை எப்படி எடுத்துக் கொள்ள முடியும்? அவள் என்ன உணர்வுகளற்ற மரப்பாச்சி பொம்மையா? அவளும் உணர்வுகள் உள்ளவள்தானே?

தனக்கு ஒடுகிற மாதிரித்தானே சட்டென ஏற்பட்ட ஸ்பரிசத்தில் கிரிதரனும் தடுமாறக் கூடும் என்ற சிந்தனையில் மெல்ல விழிகளை மலர்த்தி தலையை உயர்த்தி கிரிதரனைப் பார்த்த போது ஓரிரு நிமிடம் அவனும் ஆசையாய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த விதம் அவளைத் தடுமாறச் செய்தது.

ஆனால் ரஞ்சனியின் கைதட்டல், அதீத சிரிப்புச் சத்தம் அவளையும் சுதாரிக்க வைத்து விட்டது. பூக் குவியல் போல் அவளை அணைத்துப் பிடித்திருந்தவன் சட்டென அவளை அணைப்பிலிருந்து விடுவித்தான்.

முதலில் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

பின் ரஞ்சனியின் பெரும் சிரிப்பைக் கண்டுதான் அவள் ஏதோ விளையாடி இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான்.

மேலும் தேவி ஒருவித பதட்டத்துடன் அவனையே பார்த்து, "என்ன... என்ன..?" என்று வினவவும் அவள் நின்ற இடம் சாதாரண குருத்து மணலே புதை மணல் இல்லை என்பதை உணர்ந்திருந்தான்.

ரஞ்சனி இருவரையும் பார்த்து கைகளைத் தட்டியது. அவனுக்கு எல்லாவற்றையும் புரிய வைத்து விட்டது.

இந்த ரஞ்சனி. தேவியை சட்டென நான் போய்க் கட்டியணைக்க... இப்படியொரு பொய் சொல்லி பதட்டத்தை உண்டு பண்ணியிருக்கிறாள். நாமும் அது புரியாது உண்மை என்று நம்பி காப்பாற்றுவதற்காக கட்டிப் பிடித்து விட்டோம் என்பதையும் தெரிந்து கொண்டான்.

அதை அவனுக்கு தெளிவு பட விளக்கும் விதமாக தேவியும், "பாருங்கள்.. எல்லாம் ரஞ்சனி நடத்தும் கூத்து.. நாடகம்..!" எனவும் கிரிதரன் தலையாட்டியபடி, "ஆமாம்.. தேவி, நீ புதைமணலில் சிக்கியிருப்பதாய் பயங்காட்டி விட்டாள். உன்னைக் காப்பாற்ற நானும் இப்படிச் செய்ய வேண்டியதாயிற்று. என்னை.. மன்னித்து விடு..." என்றான் குரல் கம்ம.

அதற்குள் ரஞ்சனி சிரிப்பு அடங்காமல் பக்கத்தில் வந்து. "என்ன... கட்டிப் பிடித்தாயிற்றா..? ரோமியோ ஜூலியட்... லைலா மஜ்னு வரிசையில் கிரிதரன்



தேவியா..?" எனவும் தேவி முகம் சிவந்துதான் போனாள்.

கடைசியில் இந்த ரஞ்சனி நம்மிடம் சவால் விட்டுச் சொன்னது போல் கிரிதரனைக் கட்டிப் பிடிக்க வைத்து விட்டாளே!

என்ன பெண் இவள்! விளையாட்டுப் போல் எவ்வளவு பெரிய காரியத்தைச் செய்து விட்டாள்!

அதற்குள் கிரிதரனும் கோபம் கொண்டவனாய் கடுமையான பார்வையுடன் அவளை முறைத்தான்.

"ரஞ்சனி... என்ன.. இது...? இப்படியா.. செய்வது? உன் விளையாட்டுத் தனத்திற்கு ஒரு அளவு வேண்டாம்?"

கிரிதரன் சீறியதை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் மேலும் சிரித்த ரஞ்சனி, "அட... போங்க.. கிரிதர் டியர், பிக்னிக் என்றால் இப்படி ஏதாவது த்ரில்லிங்காய் நடந்தால்தான் சுவாரஸ்யமாய் இருக்கும். இதையெல்லாம் பெரிசு படுத்தக்கூடாது..." எனவும் அவள் தலையில் கண்டிப்பது போல் ஒரு சின்ன குட்டு வைத்து விட்டு அகன்றான்.

அத்தோடு அந்த விஷயம், அங்கு நடந்தது ஒரு காமெடி போல் இருவரும் விட்டு விட்டார்கள்.

ஆனால் தேவியால் தான் கொஞ்சமும் பொறுக்க முடியவில்லை. ஒருவரைத் தொட்டு கட்டிப் பிடித்தது... எவ்வளவு பெரிய விஷயம். அதை சும்மா விளையாட்டுக்காக.. என சாதாரணமாய் எடுத்துக் கொண்டார்களே.. என குமைந்தாள்.

அதைவிட, ரஞ்சனி அப்படிச் செய்ததை விட, கட்டியணைத்த கிரிதரன் தன்னை அப்படிச் செய்து விட்டு

வெறும் ஒரு மன்னிப்புடன் அகன்று விட்டது. அவளுக்கு எரிச்சலையும் ஏற்படுத்தியது. ஒரு மன்னிப்புக் கேட்டால் போதுமா? எல்லாம் சரியாகி விடுமா? இந்த கிரிதரன் என்னதான் நினைத்து கொண்டிருக்கிறான்? கொதிப் பாய் நினைத்து அன்றிரவு தூக்கம் இழந்து தவித்தாள் தேவி.

## 16

அன்று அலுவலகத்தினுள் நுழைந்து ஸீட்டில் உட் கார்ந்த தேவியை பணியாள், "அம்மா, நீங்கள் வந்ததும் உடனே எம்.டி.ஸார். வரச் சொன்னார்கள்..." என்றான்.

தேவி புரியாதவளாய் எழுந்து எம்.டி ரூமின் கதவுகளை திறந்து உள்ளே சென்றாள்.

உள்ளே.. கப்பலை கவிழ விட்ட சோகத்துடன் கன்னத் தில் கை வைத்தபடி கிரிதரன்.

அவனை ஒரு போதும் அவ்வளவு சோகமாய் பார்த்தது இல்லை என்பதால் ஒரு கணம் பதறத்தான் செய்தாள் தேவி.

"ஸார்.. என்னாயிற்று..? என்னாயிற்று.. ஸார்?" என்றாள் அவசரமாய்.



வேதனையில் இருந்து மீள்வது போல் கண்களை விரித்து தோள்களைக் குலுக்கினான் கிரிதரன்.

"ஒன்றுமில்லை.. தேவி. ரஞ்சனி.. ரஞ்சனி விஷயம் தான்..." என்றான் கிரிதரன் விட்டேற்றியாய்.

தேவிக்கு இன்னமும் புரிந்தபாடில்லை.

"ஏன்.. அவர்களுக்கு.. என்னாயிற்று ஸார்?" என்றாள் மை விழிக் கண்களின் படபடப்போடு.

இம்முறை உதடுகளைப் பிதுக்கி கைகளை விரித்தான் கிரிதரன்.

"அவளுக்கு ஒன்றுமில்லை. வழக்கம்போல் விளையாட் டுத் தனமாய்த்தான் இருக்கிறாள். என்னிடம் கண்ணா மூச்சி தான் ஆடுகிறாள்."

"கண்ணாமூச்சியா?"

"அதான்... தேவி.. திருமணம் பற்றி எப்போது கேட் டாலும் சரியான பதில் சொல்வதில்லை. எல்லாவற் றுக்கும் கேலியாய் கிண்டலாய் ஏதாவது பதில் சொல்லி மாற்றி விடுகிறாள். அவள் அப்படிச் செய்வது என்னுள் பெரும் சந்தேகம் ஒன்றை கிளப்புகிறது..."

"என்ன சந்தேகம் ஸார்?"

"அதாவது தேவி அடித்தளமாய் அவளுக்காக நான் போட்டு வைத்திருக்கும் விஷயத்தையே அவள் தகர்க்கப் போகிறாளோ எனத் தோணுகிறது..."

'அவன் நேரிடையாய் விஷயத்தைச் சொல்லாமல் இப்படி பீடிகை கொடுத்துப் பேசுவது அவளுக்கு எரிச் சலைத் தந்தாலும் அடக்கிக் கொண்டு பொறுமையாய் தலை சாய்த்தபடிதான் கேட்டாள்.

''அது.. என்ன.. அடித்தளம் ஸார்?''

''வேறு.. என்ன? என்னை.. மட்டுமல்ல.. யாரையுமே திருமணம் செய்யாமல் தனக்கு ஏற்பட்ட உடல் குறை பாடுகளுக்காக இப்படி கன்னியாகவே இருந்து விடலாம்.. என அவள் நினைத்து விட்டாளோ.. என்று தான்.. தோணுகிறது...''

''நிச்சயமாய் அப்படி இல்லை... ஸார்...'' என்றாள் தேவி.

கிரிதரன் புருவங்களை உயர்த்தியபடி பார்த்தான்.

''எதை வைத்து அவ்வளவு உறுதியாய்ச் சொல்கிறாய் தேவி?''

''நான் ரஞ்சனியுடன் நன்கு பழகியதன் மூலம் ஒரு விஷயத்தை தெளிவாய் புரிந்து கொண்டேன் ஸார். ரஞ்சனிக்கு கல்யாணத்தில் நல்ல ஈடுபாடு இருக்கிறது. ஆனால் உங்களைத் திருமணம் செய்து கொள்வதில் தான் பெரும் தயக்கம் ஏற்படுகிறது.''

''அப்படியா?''

''உள்ளுக்குள் ரஞ்சனி உங்கள் மீது அதீத அன்பு வைத்திருக்கிறாள்கள். ஆனால் அந்த அன்பு மரியாதையாய் மாறி.. உங்களை விட்டு விலகி நிற்க ரஞ்சனி முயற்சிப்பதாய்த் தெரிகிறது...''

தேவி சொன்னதைக் கேட்டு உற்சாகம் அடைந்தவன் போல் கைகளைத் தட்டினான் கிரிதரன்.

''ரொம்பவும் கரெக்ட் தேவி! நீ சொல்வது சரி. ரஞ்சனி தன்னிடம் உள்ள குறைபாட்டால் என் மீது வைத்த அன்பை மெல்ல மெல்ல மரியாதையாக மாற்றி என்னை



விட்டு விலகி ஓட முயற்சிக்கிறாள். அதை எப்படியாவது தடுக்க வேண்டும்...'' சொன்ன கிரிதரன் ஒரு கணம் யோசித்துவிட்டு, ''அதற்கும் ஒரு வழி இருக்கிறது...'' என்றான்.

''என்ன வழி ஸார்?''

''முதலில் ரஞ்சனிக்கு தெளிவாய் புரிய வைக்க வேண்டும். நான் அவள் மீது பரிதாபப்படவில்லை. பாசம் வைத்திருக்கிறேன். உண்மையான அன்பு வைத்திருக் கிறேன் என்பதை.''

கிரிதரன் ரஞ்சனி பற்றி சரியாக யூகித்து விட்டிருப்பது கண்டு தேவிக்கு சந்தோஷமே ஏற்பட்டது.

அதனாலே கண்கள் விரியும் ஆச்சரியத்துடன், ''நீங் கள் சொல்வது உண்மைதான் ஸார். ரஞ்சனியின் முக் கியப் பிரச்சினையே அதுதான். தன் மேல் பரிதாபப்பட்டு இப்படியொரு முடிவெடுத்து.. நீங்கள் கல்யாணம் பண்ண அவசரப்படுவதாய் நினைக்கிறாள்.''

''இதை உன்னிடம் வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறாளா தேவி?''

''வெளிப்படையாகச் சொல்லவில்லை ஸார். ஆனால் தனது குறைபாட்டிற்காக தன் மீது யாரும் பரிதாபப்பட்டு விடக்கூடாது என்பதில் உறுதியாயிருக்கிறேன்.. என்று என்னிடம் பல முறை சொல்லியிருக்கிறாள்கள் ஸார்.''

தேவி சொன்னதற்கு தோள்களைக் குலுக்கி பெரு மூச்சுடன் அலுத்தான் கிரிதரன்.

கிரிதரன் இப்படி ஒரு நாள் முழுக்க ரஞ்சனியை எப்படி சம்மதிக்க வைக்கலாம் என ஆய்வு செய்ய... மறுநாள்

ரஞ்சனியோ வேறு மாதிரியான கூத்தை ஆரம்பித்திருந்தாள்.

வேலை முடிந்ததும், 'கண்டிப்பாய் வீட்டுக்கு வா.' என போன் செய்திருந்தாள். தேவி என்னவோ ஏதோ என்று நினைத்துதான் வேலை முடிந்ததும் மாலை ரஞ்சனியைத் தேடிச் சென்றாள்.

ரஞ்சனியை பங்களாவில் தேடிய போது பணியாளர்கள் நூலகப் பகுதியில் ரஞ்சனி இருப்பதாய் சொன்னார்கள்.

கிரிதரன் புத்தகப் பிரியன் என்பதால் வீட்டிலேயே அனைத்து புத்தகங்களும் கொண்ட பெரிய நூலகம் ஒன்றை உருவாக்கியிருந்தான். பெரிய ஹால் ஒன்றை தேர்ந்தெடுத்து வரிசையாய் நீளமான ரேக்குகள் வைத்து வரிசையாய் அடுக்கப்பட்ட புத்தகங்கள்.

கதை, கவிதை, விஞ்ஞானம், வரலாறு, பொருளியல், அரசியல் என பலதரப்பட்ட தலைப்புடன் அந்தப் பிரிவு சம்மந்தப்பட்ட எண்ணற்ற புத்தகங்கள் ஒரிருமுறை நேர்த்தியாய் அமைக்கப்பட்ட அந்த நூலகத்தைப் பார்த்து தேவியே வியந்திருக்கிறாள்.

ரஞ்சனி அங்கிருப்பதை உணர்ந்து தேடிச் சென்ற தேவி ரஞ்சனி நூலகத்தில் இருந்த நிலையைக் கண்டு அதிரத்தான் செய்தாள்.

நூலகத்தின் பெரிய மேஜையில் வரிசையாய் ரேக்குகளில் இருந்து புத்தகங்களை தேர்ந்தெடுத்து கீழே வரிசைப்படுத்தி அடுக்கிக் கொண்டிருந்தாள் ரஞ்சனி.

''ரஞ்சனி, என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என தேவி வினவியதும் திரும்பிப் பார்த்து கண்கள் விரியச் சிரித்தாள் அவள்.



''வா.. தேவி.. உன்னைத்தான் தேடிக் கொண்டிருந்தேன்...'' என்றபடி பக்கத்தில் வருமாறு சைகை செய்தாள்.

தேவி பக்கம் நெருங்கியவள் ரஞ்சனி எடுத்து வைத்திருக்கும் புத்தகங்களின் தலைப்புகளைக் கண்டு திடுக்கிடத்தான் செய்தாள்.

அத்தனையும் காதல் புத்தகங்கள்!

காதலை மையமாய் வைத்து புனையப்பட்ட ஷேக்ஸ்பியரின் கதைகள், உலகப் புகழ் பெற்ற காதல் நாடகங்கள், சங்க காலக் காதல் செய்திகள், நவீன காதல் கவிதைகள் என பலதரப்பட்ட காதல் புத்தகங்கள்!

''ஹேய்.. ரஞ்சனி.. என்ன இது..?''

''பார்த்தால் தெரியவில்லை..? காதல்..!'' என்றாள் ரஞ்சனி கண்கள் சிமிட்டியபடி.

''காதல் யாருக்கு?''

''தேவி, முதலில் காதல் என்ன என்பதை முழுமையாய் விரிவாய் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்குப் பின் தான் காதலைப் பற்றி, யார் மீது கொள்வது என்பது பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும்.''

''அதாவது.. எதிலும் தெரிந்த பின் காலை விடு என்று சொல்வார்களே... அது போல.. அப்படித்தானே?''

''கரெக்ட்! அப்படியேதான்..! சரியாகச் சொல்லி விட்டாய் தேவி. முதலில் இந்த புத்தகங்களை வரிசைப் படுத்த எனக்கு உதவி பண்ணு.''

''வரிசைப்படுத்தவா?''

''அதாவது லைலா மஜ்னு, ரோமியோ, ஜூலியட் மாதிரி தோற்ற காதல் கதை புத்தகங்களை எல்லாம் ஒதுக்கி விடு. ஜெயித்த காதல் கதைகள் கொண்ட புத்தகங்களை மட்டும் வரிசைப்படுத்தி எனக்குத் தா.''

''அட... இது வேறா? நல்ல கூத்துதான்!''

தேவி திகைப்பதைப் பார்த்து தனது வீல் சேரை சுற்றியபடி பக்கத்தில் வந்தாள் ரஞ்சனி.

''என்ன விழிக்கிறாய் தேவி?''

தேவி தன் கண்களை நன்கு விரித்து உருட்டியவள், ''அம்மா, ரஞ்சனி மேடம் அவர்களே, எனக்கு இந்தக் காதல் கண்றாவிகளைப் பற்றி மட்டுமல்ல, காதல் புத் தகங்களைப் பற்றியும் ஒன்றும் தெரியாது...'' என்றாள்.

''அதான் தெரியுமே...!'' என்றாள் ரஞ்சனியும் விடாது.

''தெரியுமா?''

''உனக்கு காதல் பற்றித் தெரியாது. அது பற்றி கற்றுக் கொடுக்கத்தானே நான் வந்திருக்கிறேன்...''

''என்னது... எனக்குக் கற்றுக் கொடுக்கவா?''

தேவி கோபமாய் கேட்டதும் சட்டென வார்த்தைகளை மாற்றினாள்.

''என்ன இருந்தாலும் நீயும் வயசுப் பெண். காலா காலத்தில் தெரிந்து கொள்வது நல்லதுதானே!''

''ம்ஹூம்! அதை இந்த ரஞ்சனிப் பாட்டி சொன்னால் சரிதான். ஒத்துக் கொள்ள வேண்டியதுதான்!''

அவள் சொன்னது போலவே தேவியும் பதிலுக்கு அபிநயித்துச் சொல்ல இருவரும் சிரித்தார்கள்.



ரஞ்சனி மேஜை மேல் இருந்து இரண்டு மூன்று புத்தகங்களை எடுத்துப் புரட்டியவள் எதையோ புதியதாய் கண்டு பிடித்தவள் போல் நிமிர்ந்தாள்.

''தேவி, இந்த காதல் சேட்டைக்கு மூல காரணம் யார் தெரியுமா?''

''யாராம்?''

''காமக் கடவுள் என்று சொல்லப்படும் மன்மதனாம்.''

''அப்படியா? நான் பக்கத்து வீட்டு பூனைக்குட்டி என்றல்லவா நினைத்தேன்.''

வேண்டுமென்றே தேவி பழிப்புக் காட்டி சிரிக்க, ''நான் சீரியஸாக சொல்கிறேன் கேளு..'' என்றாள் ரஞ்சனி.

''சரி.. சொல்லு..'' என்றாள் தேவி.

''அதாவது மன்மதன். அவன்தான் காதல் சேட்டையை மனதில் கொண்டு உண்டு செய்யும் மிகப் பெரிய கள்ளன். அவனுக்கு அநங்கன், அங்கசன், மாறன் என வேறு பெயர்களும் உண்டு...''

''அப்படியா?''

''அது மட்டுமல்ல... அந்த மன்மத பாணம்.. அதாவது மன்மத வில் என்று சொல்கிறார்களே அது காமன் அசோகம், குவளை, தாமரை, மாம்பூ, முல்லை என ஐந்து வகைப் பூக்களை கொண்டு ஆனதாம்.''

''அட... அது வேறா?''

''அதை வைத்து... மன்மதன் குறி பார்த்து அம்பை ஒரு கண்டு கண்டினால் என்ன நடக்கும் தெரியுமா?''

''என்ன நடக்கும்?''

"அம்பு தாக்கம் ஆள்.. அந்த நபர் க்ளீன் போல்டு தான். காதல் பித்துப் பிடித்து.. தூக்கமில்லாமல் தவித்து.. ஏங்கத்தான் ஆரம்பித்து விடுவார்கள்."

"ஓஹோ.. அப்புறம்..?"

"அப்புறம்.. என்ன? அந்தப் பொல்லாத காதல் தலைவன் விட்ட அம்பால் அவளுக்கும் வந்து விடும்..."

"சரிதான்... தலையை விரித்துப் போட்டுக் கொண்டு தலைவனுக்காக அவள் ஆட ஆரம்பித்து விடுவாள். அப்படித்தானே?"

"அட... காதலை அப்படிக் கொச்சைப் படுத்தாதே. அப்படிக் காதல் மனதில் வந்து அன்பால் ஒருவருக் கொருவர் பார்க்க முடியாமல் தவிப்பதில் ஒரு ஏக்கம் பிறக்குமே.. அது எப்படி எவ்வளவு சுகமாய் இனிமையாய் இருக்கும் தெரியுமா..?"

"எனக்குத் தெரியாதப்பா... நீயே சொல்லு..!"

"சொல்கிறேன்..! ஒருவரையொருவர் நினைப்பது, பார்த்தும் பார்க்காதது போல் போவது, திருட்டுத் தனமாய் கடைக்கண் விழி பார்வையைப் பார்ப்பது, வேண்டு மென்றே சீண்டலாய் சண்டையிடுவது.. எல்லாமே சுவாரஸ்யமாய் இனிமையாய் இருக்கும்."

"அப்படியா..?"

தேவி கிண்டல் செய்வது போல் கன்னத்தில் கை வைத்து ஆச்சரியமாய்க் கேட்க அதைக் கொஞ்சமும் உணராமல் உற்சாகமாய் சொல்லிக் கொண்டிருந்தாள் ரஞ்சனி.



"அது மட்டுமல்ல.., தேவி.. இந்தக் காதலைப் புரிந்து கொள்ள, காதல் பற்றிய சுவாரஸ்யமான கதை கூட எனக்குத் தெரிந்ந்து உண்டு..."

"கதையா? சொல்லு.. சொல்லு..!"

"அதாவது.. நான் சொல்ல வருவதெல்லாம் நீ தெரிந்த அறிந்த கதைகள்தான்! அந்த பருவ வயதில் மங்கையர் மனதில் சலனம் பட்டு தலைவன் பால் தீராத காதல் கொண்டு அவனுக்காக ஏங்குவதும், பின் அவனை அடைய எத்தகையப் போராட்டங்களையும், இடர்பாடு களையும் சந்திக்க வீரமாய்த் துணிந்து விடுவார்களே. இப்படி சங்க கால காதல்களில் சொல்லப்பட்ட 'லாஜிக்' தான் இன்று வரை நம் நவீன காதல்களுக்கும் பொருந்து கிறது. அதாவது காதல் என்றால் இனிமை இன்னொன்று.. சுகமான போராட்டம்..." ரஞ்சனி சொல்லிவிட்டு பேச்சை நிறுத்தினாள். தேவியையே உற்றுப் பார்த்தாள்.

"இப்போது புரிகிறதா?" என்றாள்.

"புரிகிறது" என்றாள் தேவி.

"என்ன புரிகிறது?"

"இந்தக் காதல் படாத படுத்தும் மோசமான நோய். நமக்கெல்லாம் தேவையில்லாதது. நமக்குத் தேவை வேறொன்றுதான். நேரிடையான விஷயமொன்றுதான்."

"அட.. இது.. என்ன.. புதுசாய் பீலா விட ஆரம்பித்து விட்டாய்?"

"பீலா..வெல்லாம் அல்ல. உண்மை நடைமுறையில் நடக்கக் கூடிய சாத்தியம்..."

"அது.. என்ன தாயே? நீயே சொல்லி விடு!"

ரஞ்சனி முகம் நொடித்துக் கேட்க சிரிப்பு பொங்க அவளைப் பார்த்தாள் தேவி.

"வேறென்ன..? இந்தக் காதல் கண்றாவியெல்லாம் இல்லாமல் நேரிடையாய் கல்யாணம்! அப்படிப்பட்ட கல்யாணம் ஒன்று, உனக்கும் கிரிதரனுக்கும் நடந்தால் அது எவ்வளவு நன்றாக கண்கொள்ளாக் காட்சியாய் இருக்கும் தெரியுமா?"

சொல்லியபடி தேவி ரஞ்சனியையே உற்றுப் பார்க்க.. கிரிதரன் பெயர் சொன்னதுமே ரஞ்சனியின் முகம் கறுக்க ஆரம்பித்தது கண்டு அவள் திடுக்கிடத்தான் செய்தாள்.

## 17

ரஞ்சனியால் ஒரு போதும் சும்மா இருக்க முடிய வில்லை. நாளுக்கு நாள் எதையாவது யோசித்துக் கொண் டிருந்தாள். மூளையைக் கசக்கி கசக்கி திட்டம் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

அப்படித்தான் அன்று புதியதாய் வெளிவந்திருக்கும் திரைப்படம் ஒன்றிற்கு செல்ல வேண்டும் என்று அடம் பிடித்தாள் கிரிதரனிடம். கிரிதரனும் ஒப்புக் கொண்டு தேவியை துணைக்கு அனுப்பி சினிமா பார்க்க ஏற்பாடு களைச் செய்தான்.



சினிமாவுக்கு கிளம்பும் நேரத்தில், "நீயும் வா கிரிதர். இது காதல் படம். உன்னுடன் பார்த்தால்தான் நன்றாக இருக்கும்" என அவனை இழுத்தாள்.

கிரிதர் வருவதை அறிந்ததும் தேவி பின் வாங்கினாள்.

"அப்படியானால்.. நீங்கள் இருவரும் போய் விட்டு வாருங்கள். நான் பிறகு பார்த்துக் கொள்கிறேன்.." என்றாள்.

அதற்கும் ரஞ்சனி விடவில்லை.

"அட... வா.. தேவி, கால் முடமாகி இருக்கும் நான் எப்படி தியேட்டருக்குள் நுழைந்து சீட்டில் போய் உட்கார முடியும்? நீ உதவி பண்ணினால் தானே நடக்கும்?"

இப்படி தன் ஊனத்தைச் சொல்லி கேட்கும் போது தேவியால் கொஞ்சமும் மறுக்க முடியவில்லை.

வேறு வழியில்லாமல் அவளும் அவர்களுடன் சினிமா வுக்குக் கிளம்பினாள்.

புதுப்படம் என்றாலும் கிரிதரன் ரிஸர்வ் செய்து விட்ட படியால் எளிதில் செல்ல முடிந்தது. இருட்டில் மெல்ல மெல்லச் சென்று தங்கள் இருக்கைகளை கண்டு பிடித்து உட்கார்ந்தார்கள்.

உட்கார்ந்து சிறிது நேரத்தில் படம் ஆரம்பித்தது.

படம் ஆரம்பித்ததும் தான் தாமதம், ரஞ்சனி தலையை அப்படியும் இப்படியுமாய் ஆட்டியபடி, "ஐயோ, மறைக் கிறதே..!" என்றாள்.

கிரிதரனும் தேவியும் என்ன? என்று கேட்க தனக்கு முன் சீட்டில் இருந்த வழுக்கைத் தலையை காட்டினாள் அவள்.

''அந்த ஆசாமியின் தலை மறைக்கிறது கிரிதர்..'' என்றவள் அதே வேகத்தில் காது மடல்களை ஆட்டிக் கொண்டு, ''வேறு வழியில்லை கிரிதர். நெட்டையான நீ இங்கு உட்கார். நான் உன் ஸீட்டில் உட்கார்ந்து கொள் கிறேன்..'' என்று மாறச் சொன்னாள்.

கிரிதரனும் வேறு வழி தோன்றாதவனாய் எழுந்து மாறி உட்கார்ந்தான். அவளையும் ஸீட் மாறி உட்காரச் செய்தான்.

இப்போது கிரிதருக்கு ஒருபுறம் ரஞ்சனி இருந்தாலும் வலப்புறமாய் தேவி!

தேவிக்கு அப்போதுதான் புரிந்தது. இந்த ரஞ்சனி வேண்டுமென்று கிரிதரன் தன் பக்கத்தில் உட்கார்ந் திருக்கும்படி பிளான் செய்திருக்கிறாள் என்று!

திரும்பி மெல்ல அவளைப் பார்க்க... அவள் குறும்பாய் ஒருவித சைகை செய்து கொண்டிருந்தாள்.

தேவிக்கு அவள் என்ன சொல்கிறாள் என்று புரிய வில்லை.

அவள் பாட்டுக்குத் திரும்பி படத்தைப் பார்க்க ஆரம் பித்தாள்.

ரஞ்சனி சொன்னது போல் அது ஓர் காதல் திரைப் படம்!

அதுவும் எப்படிப்பட்ட காதல்?

கதாநாயகனும் கதாநாயகியும் உள்ளூர ஒருவரை யொருவர் விரும்புகிறார்கள். காதலிக்கிறார்கள். ஆனால் சூழ்நிலை அவர்களது காதலை சொல்ல விடாமல் தடுக் கிறது. வேறு வழி தெரியாமல் தங்களது தீவிரமான



காதலை உள்ளுக்குள்ளே மனதில் பூட்டிக் கொண்டு ஒருவர் மற்றவரை நினைத்து உருகுகிறார்கள்.

இப்படித் திரைப்படத்தின் கதை போக.. படத்தைப் பார்த்த தேவி நெளியத்தான் செய்தாள்.

அவளுக்குப் பக்கத்தில் வெகு அருகில் கிரிதரன் அவனது கைகள் கூட லேசாக அவள் மீது பட்டு உராய்ந்து கொண்டுதான் இருப்பது போல் இருந்தது.

கிரிதரன் முகத்தில் எவ்வித சலனமும் இல்லாவிட் டாலும் அந்த உராய்வு கிரிதரனின் ஸ்பரிசம் தேவியை ரொம்பவும் அவஸ்தைப்படுத்தியது.

என்ன இது வம்பு? என ஒதுங்க நினைத்து மறுபுறம் சாயப் போனாள்.

மறுபுறமோ ஒரு தடித்த பெண்மணி சேரை அடைத்த வாறு உட்கார்ந்து கொண்டு தேவியை ஒருபுறமாய் தள்ளியபடியே உட்கார்ந்திருந்தாள்.

வேறு வழியில்லாதவளாய் இரண்டு மூன்று முறை கிரிதரனைப் பார்த்தவள் அவன் அப்படியே படத்தில் லயித்து விட்டதை உணர்ந்தாள்.

ஆனால்.. ரஞ்சனி?

அவள்தான் குறும்புச் சிரிப்புடன் தேவியையும் கிரி தரனையும் மாறி மாறிப் பார்த்தவள் ஒருவரையொருவர் இடித்தபடி உட்கார்ந்த நிலையை ரொம்பவும் ரசித்துப் பார்த்தாள்.

அது போதாதென இன்னொரு காரியத்தையும் கொஞ்ச நேரத்தில் செய்தாள்.

திரைப்படத்தில் நகைச்சுவைக் காட்சி ஒன்று வர அதற்கு வேண்டுமென்றே பெரிய ஹாஸ்யம் ஏற்பட்டது போல் குலுங்கிக் குலுங்கி சிரிக்க ஆரம்பித்தாள். அப்படி சிரிக்கும் சாக்கில் கிரிதரனின் தோள்களை வேகமாய்த் தட்டி தேவியின் மீது அவன் தோளோடு தோளாய் மோதும் படி செய்தாள்.

அப்படி ஒரு இடி கொடுத்த போதும் தேவியை தான் உராய்வதையும் இப்படி இடி மன்னன் போல் இடிப் பதையும் கிரிதரன் உணரவில்லை!

ஆனால் தேவி எல்லாவற்றையும் நன்கு கவனித்துக் கொண்டிருந்தாள்.

ஒன்றும் தெரியாத அப்பாவி போல் இந்த ரஞ்சனி உட்கார்ந்து கொண்டு இந்த வரத்து வருகிறாளே.. என நினைத்தாள்.

இதை எப்படி தடுப்பது? எப்படி கிரிதரனுக்கு புரிய வைப்பது என யோசித்தவள் அதற்காக ஒரு வழியையும் கண்டு பிடித்தாள்.

இடைவேளையின் போது ஐஸ்க்ரீம் வாங்கி வருவதாய் கிரிதரன் செல்ல பின்னாலே டக்கென எழுந்து சென்றாள் தேவி.

வெளிவந்த கிரிதரனிடம், ''கிரிதரன் ஸார்.. என்ன நீங்கள்..? வந்த வேலையை மறந்து விட்டு நீங்கள் பாட்டுக்கு படத்தில் லயித்து விட்டீர்கள்?'' என்றாள்.

கிரிதரன் புரியாமல் விழித்தான்.

''வந்த வேலையா? என்ன சொல்கிறாய்?''



''அதான் ஸார்.. நல்ல சந்தர்ப்பம்! ரஞ்சனி உங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாள். நீங்கள் பார்ப்பதோ காதல் படம். புரிகிறதா?'' என்றாள் தன் மை விழிக் கண்களை சிமிட்டியபடி.

அவன் சொல்வதை ரசித்துப் பார்த்துச் சிரித்தவள், ''ஓ.. புரிகிறது! ரஞ்சனியிடம் சில்மிஷம் பண்ணச் சொல் கிறாயா?'' என்றான்.

''சில்மிஷம் அல்ல... காதல்!'' என்றாள் தேவி அழுத் தந்திருத்தமாய்.

''காதலா? எப்படி.. எப்படி.. தேவி?''

''ம்ஹூம்..! என்ன ஸார் நீங்கள்? இதையெல்லாம் நானா வந்து சொல்லிக் கொடுக்க முடியும்? உங்களுக்குப் புரியாதா? லேசாக கைகளைத் தொட்டு விரல்களை கோர்த்து.. மனைவி போல் நெருக்கமாய் தோளோடு அணைத்து...''

தேவி எடுத்துக் கொடுக்க.. புரிந்தவனாய் பலமாய் தலையாட்டினான் கிரிதரன்.

''இனி பார்.. என் காதல் லீலையை...'' என்றபடி இடைவேளை முடிந்து படம் தொடங்கியதும் மெல்ல தன் காதல் சில்மிஷ விளையாட்டை ஆரம்பித்தான்.

மெல்ல.. கைகளைத் தொட்டு, விரல்களோடு கோர்த்து ரஞ்சனியின் தோளை அவன் அணைக்க முயன்ற வினாடி, அவன் திட்டம் புரிந்து சுதாரித்து விட்டாள் ரஞ்சனி. ''படம் போரடிக்கிறது. வீட்டுக்குப் போவோம்?'' என்றாள் அவள்.

# 18

அடுத்து வந்த ஒரு வாரம் ஒரு பிரச்சினையு மில்லாமல் கழிந்தது. தேவியும் கிரிதரனும் அலுவலகத் தில் உற்பத்தியான சரக்குகளின் லோடிங் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்ததால் அதிலே மும்முரமாய் இருந்தனர்.

இதற்கிடையே ஒரு மாறுதலுக்காக ரஞ்சனியையும் தேவி அலுவலகத்திற்கு அழைத்து வந்து தொழிற் கூடத்தில் நடைபெறும் பணிகளைக் காட்டினாள். ரஞ்சனி யும் எல்லாவற்றையும் வியந்து பார்த்துவிட்டு வீட்டிற்குக் கிளம்பியவள் தேவியை தனியே அழைத்தாள்.

புரியாமல் பக்கம் போன தேவி அவள் கேட்ட கேள்வியைக் கண்டு அதிரத்தான் செய்தாள்.

''உங்கள் காதல் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது?'' என்று கேட்டிருந்தாள் ரஞ்சனி.

''காதலா?''

''அதான்.. கிரிதர் அத்தானுடன் ரொமான்ஸ்... அன்று ஏற்பட்ட கட்டிப்பிடிப்புக்குப் பின் கடகடவென்று மன தில் வளர்ந்திருக்குமே...''

''ச்சு... உளறாதே.. ரஞ்சனி.''



''என்ன.. நான் உளறுகிறேனா..? எங்கே.. என் முகம் பார்த்துச் சொல்லு? அன்று கிரிதர் அத்தான் அப்படியே உன்னை இறுக்கி அணைத்ததும் நீ கிறங்கிப் போக வில்லை? கண்கள் சொருக பரவசத்தில் உன் உடம்பு துவண்டு போகவில்லை?''

தேவி எரிச்சலுடன் திரும்பி, ''அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை...'' என அவள் முகம் பார்த்துச் சொல் லத்தான் முயன்றாள். ஆனால் ரஞ்சனியின் குறுகுறுப் பான ஊடுருவும் கண்களைப் பார்த்தபோது அவளது மைவிழிகள் தானாக கீழிறங்கியது.

ரஞ்சனியோ அவள் தோள்களைப் பிடித்து உலுக்கி னாள்.

''சொல்லு.. உனக்கு... ஒன்றும் ஏற்படவில்லை? ஒன்றுமே தோன்றவில்லை?''

''இல்லை... இல்லை...'' என்றாள் தேவி வேகமாய் குனிந்த நிலையில்.

ரஞ்சனி யோசிப்பது போல் கைகளைக் கட்டிக் கொண்டாள்.

''வேறு வழியில்லை. அடுத்த சந்திப்பை ஏற்படுத்தி விட வேண்டியதுதான்..!'' எனவும் தேவி திடுக்கிடத்தான் செய்தாள்.

''ஆமாம்.. காதல் சந்திப்பு...!''

''ஹேய்... ரஞ்சனி...''

''அட... சும்மா.. குரலை உயர்த்தக் கூடாது தேவி. நீயும் கிரிதரனும் உள்ளுக்குள் ஒருவரையொருவர் விரும்பு கிறீர்கள். ஆனால் அதை யாருக்கும் தெரியாமல் பூட்டி

வைத்திருக்கிறீர்கள். அது என்ன சொல்வார்கள். காதல் தீயா? நெருப்பு மூட்டி அந்த காதல் தீயை ஜோதியை உங்களுக்குள் பற்ற வைப்பதுதான் என்னுடைய வேலை.." சொல்லியபடி ரஞ்சனி கடகடவென சிரிக்க ஆரம்பித்தாள்.

தேவி தலையிலடிக்காத குறையாய் அவளைப் பார்த்தாள்.

"ஜூசத்தனமாய் ஏதாவது உளறாதே... ரஞ்சனி.. அப்படியெல்லாம் ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை..." என்றாள் கோபமாக.

ஆனால் அதையும் ரசித்தாள் ரஞ்சனி.

"அட... உனக்கு கோபம் கூட வருகிறதா? காதல் என்றால் இப்படித்தான்..! கோபம்... தாபம்.. என எல்லாமே பொத்துக் கொண்டு வரும்...!"

பற்களைக் கடித்துக் கொண்டு அங்கிருந்து அகன்று விட்டாள் தேவி.

அப்படி அவள் வேகமாய் அகலுகையில் ரஞ்சனி சொன்ன வார்த்தைகள் காதில் விழாமல் இல்லை.

"தேவி, இம்முறை பார். நான் ஏற்படுத்துகிற சந்திப்பில் உங்கள் காதல் உங்களையறியாமல் வெளி வந்து உங்களை பரவசப்படுத்தப் போகிறது."

தேவிக்கு ரஞ்சனி மீது ஓரளவிற்கு மேல் கோபம் கொள்ளவோ.. வெறுப்பு காட்டவோ முடியவில்லை. என்ன இருந்தாலும் கால் முடமாகிப் போன பெண்! தன் குறை தெரியாது. இப்படிச் சிரித்து பேசி கிண்டலடித்துக் கொண்டிருந்தால் கூட நல்லதே... என விட்டு விடுவாள்.



ஆனால்.. இந்த ரஞ்சனி வரவர எல்லை மீறுவது மாதிரியல்லவா தெரிகிறது. அதுவும் அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும் என்று கிரிதரன் தேவியை பணித்திருக்க அவள் ரஞ்சனியோ தேவிக்கு ஒரு நல்ல வாழ்க்கையை கொடுக்க அல்லவா முனைந்திருக்கிறாள்.

இதை.. இப்படியே விட்டு விடுவது ஆபத்து. எப்படியும் கிரிதரனிடம் இது பற்றியெல்லாம் பேசிவிட வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

அன்று மாலையே அவளுக்கு கிரிதரனுடன் அலுவலகத்தில் தனியே பேசும் சந்தர்ப்பம் அமைய படபடவென விஷயத்தை கொட்டி விட்டாள்.

அவள் சொல்லச் சொல்ல அதிர்ந்துதான் போனான் கிரிதரன்.

"சின்னப் பெண்.. விளையாடுகிறாள்.. என்று நினைத்தால் இவ்வளவு தூரம் பண்ணியிருக்கிறாளா? அதுவும் உன்னிடம் சவால் விட்டு அல்லவா செய்கிறாள்?"

கைகளை பரபரவென தேய்த்தபடி முன்னும் பின்னும் வேகமாய் நடந்தான் கிரிதரன்.

பின் யோசனையாய் நிமிர்ந்து தேவியைப் பார்த்தான்.

"இதில்.. பார்... தேவி... ரஞ்சனி. கால்களை இழந்து நடக்க முடியாமல் பரிதாபப்படும் சூழ்நிலை. அதனால் அவளை அந்த நிலையில் சூழ்நிலையில் போய்.. நான் கண்டிப்பதோ... கடுமையான சொற்களை வீசுவதோ முடியாத காரியம் அதனால்..."

"சொல்லுங்கள்... ஸார்... நீங்கள் நினைப்பது ரொம்பவும் சரி. ரஞ்சனி இப்படி சுட்டித் தனமாய் என்ன செய்தாலும் அதற்காக நாம் கோபப் பட முடியாத சூழ்நிலைதான்! வேறு ஏதாவதுதான் செய்ய வேண்டும்."

"வேறு வழியில்லை. தேவி முள்ளை முள்ளால் எடுப்பது போல் நாம்தான் ரஞ்சனியின் இது போன்ற சூழ்ச்சிகளுக்குப் பலியாகாமல் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அத்தோடு நீ இன்னும் தீவிரமாய் ரஞ்சனி மனதை மாற்றுவதில் இறங்க வேண்டும்."

"கண்டிப்பாக... ஸார்... ஆனால் ரஞ்சனி அந்தப் பேச்சை எடுத்தாலே. விளையாட்டுத் தனமாய் காதல்.. ரோமியோ.. ரொமான்ஸ் என்றெல்லாம் பேச ஆரம்பித்து விடுகிறாள். நான் சொல்ல வருவது எதையும் கூட அவள் முழுசாய் கேட்பது கூட இல்லை..."

தேவி சொல்ல கிரிதரன் பலமாய் தலையசைத்தான்.

"எனக்குப் புரிகிறது தேவி. ஆனால் நாம் எதையாவது செய்தாக வேண்டும். வீணாய் இந்த எண்ணத்தை ரஞ்சனி மனதில் வளர விடக் கூடாது..."

இருவரும் நெடுநேரம் அதையே யோசித்து பேசி எந்தவொரு வழியும் புலப்படாதவர்களாய் அகன்றனர்.

ஆனால்.. அடுத்து என்ன செய்வது என ரஞ்சனிக்கு புலப்பட்டிருந்தது. அது அபாயகரமான வழி என்றாலும் தைரியமாய் அதைச் செய்யத் துணிந்திருந்தாள் ரஞ்சனி.



## 19

தேவி அன்று வீட்டிற்கு வந்தவள் ரொம்பவும் குழம்பிப் போயிருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

வர.. வர.. ரஞ்சனியின் போக்கே சரியில்லை. அவளையும் கிரிதரனையும் இணைத்து வைக்க கங்கணம் கட்டிக் கொண்டு அலைபவள் போல் முயல்கிறாள்?

அதற்காக எத்தகைய கீழ்த்தரமான செயலையும் அவள் செய்ய ஆரம்பித்து விட்டாள்.

முதலில் தியேட்டரில் உரச வைத்தாள்.

பின் பிக்னிக் என்ற பெயரில் கிரிதரனை கட்டிப் பிடிக்க வைத்தாள்.

நீச்சல் குளத்தில் அதற்கு ஒருபடி மேலே போய் முத்தமிடவே வைத்து விட்டாள்!

எவ்வளவு பெரிய தவறு இது!

இனியும் இதையெல்லாம் சும்மாவாக பார்த்துக் கொண்டிருப்பது ஆபத்து! எதையாவது உடனே செய்தாக வேண்டும். எப்படியாவது ரஞ்சனியின் இந்த செயல்களை தடுத்து நிறுத்தி கிரிதரன் அவளுக்குத்தான் என்பதை புரிய வைக்க வேண்டும்.

எப்படிச் செய்வது? ரஞ்சனிக்கு எப்படி புரிய வைப்பது?

அன்று முழுதும் தூங்காதவளாய் ரொம்ப நேரம் சிந்தித்தாள் தேவி.

ஒரு விஷயத்தில் அவள் தெளிவாகவும் இருந்தாள்.

ரஞ்சனி விபத்தினால் கால் முடமாகி போய்விட்ட அபலைப் பெண்!

அவளுக்கு கண்டிப்பாய் கிரிதரன் போன்ற துணை தேவை!

அவளை நன்கு புரிந்த கிரிதரனால்தான் அவளுக்கு சிறந்த கணவனாய் இருந்து. அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை கொடுக்க முடியும்.

ஆக.. என்ன ஆனாலும் சரி.. ரஞ்சனிக்கு பொருத்த மான நபர் கிரிதரன்தான். அவன்தான் அவளுக்கு கணவ னாய் வரவேண்டும் அமைய வேண்டும்!

ஆனால்.. இந்த ரஞ்சனி?

நம்மையல்லவா.. வீணாய் வம்புக்கிழுத்து இந்த கிரிதரனுடன் முடிச்சுப் போடுகிறாள்? இவள் இப்படி திட்டம் போட்டு திட்டம் போட்டு கிரிதரனும் நம்மை சேர்த்து வைக்க முயல்வது பெரும் ஆபத்தாயிற்றே. எதும் விபரீதத்தில் கொண்டு முடித்து விடுமே!

என்ன செய்ய? இந்த ரஞ்சனியை எப்படித் திருத்த?

நாமோ.. கிரிதரனோ சொன்னால் எல்லாம் இந்த ரஞ்சனி கேட்கப் போவதில்லை. திருந்தப் போவதில்லை!

பின் என்னதான் செய்வது?

யோசித்த தேவிக்கு பளிச்சென அந்த எண்ணம்தான் மனதில் வைத்தது.



நினைத்துப் பார்த்தவள், அது ஒன்றுதான் இதற்கு வழி தீர்வு... என்றும் முடிவும் செய்தாள்.

தான் எடுத்த முடிவை மறுநாள் அலுவலகத்தில் கிரிதரனிடம் சொன்னபோது அதிரத்தான் செய்தான் அவன்.

''என்ன சொல்கிறாய்...? வேலையை விட்டு விலகப் போகிறாயா? ராஜினாமா செய்யப் போகிறாயா?'' என்றான் அதிர்வான ஆச்சரியத்துடன்.

''ஆமாம்.. ஸார்.. எனக்கு வேறு வழி தெரியவில்லை. எல்லாம் நம் ரஞ்சனிக்காகத்தான் இப்படியொரு முடிவு எடுத்திருக்கிறேன்...''

''என்ன ரஞ்சனிக்காகவா?''

''ஆமாம்.. ஸார்... வர.. வர.. ரஞ்சனியின் போக்கே சரியில்லை. அவர்கள் என்னையும் உங்களையும் சேர்த்து வைக்க வீணாய் கீழ்த்தரமான திட்டம் எல்லாம் போட ஆரம்பித்து விட்டார்களாம். இது பெரும் விபரீதத்தில் கொண்டு போய் விட்டு விடும் என்ற பயம் எனக்கு வந்து விட்டது. நான் சொல்வதை புரிந்து கொள்ளுங்கள்...'' என்றாள் பவ்யமான குரலில்.

அவளையே ஓரிரு நிமிடம் உற்றுப் பார்த்தபடி யோசித்த கிரிதரன் கண்களை விரித்தபடி தலையசைத் தான்.

''நீ சொல்வது புரிகிறது தேவி. நீ பயப்படுவதும் நியாயம்தான். ரஞ்சனி இப்படி விபரீதமாய் திட்டமிட்டுக் கொண்டே போவதும் ஆபத்து.''

''அதனால்தான் யோசித்தேன் ஸார்.. இதற்கு ஒரே வழி.. நான் உங்கள் இருவரிடமும் இருந்து விலகிச்

செல்வதுதான். நான் விலகிச் சென்றால் பிரச்சினை எல்லாம் தீர்ந்து விடும். ரஞ்சனிக்கும் உங்கள் முடிவுக்கு சம்மதித்து உங்களை மணப்பதைத் தவிர வேறு வழியில்லாது போய்விடும்..."

கடகடவென பேசிவிட்டு கிரிதரனையே உற்றுப் பார்த்தாள் தேவி.

ஒரு கணம் அப்படி முடிவெடுத்தாலும், அந்த முடிவின்படி இனி.. இந்த அலுவலகத்திற்கு அவள் வர முடியாது.. இனி கிரிதரனைப் பார்க்க முடியாது.. என்பதெல்லாம் புத்தியில் உரைத்து அவளைத் தடுமாறத்தான் செய்ய வைத்தது.

ஆனால் எல்லாவற்றுக்கும் மேல் ரஞ்சனி பாவம் என்ற உணர்வு ஓடியது. விபத்து ஒன்றில் கால்களை இழந்து விட்டாள். அதற்காக அவள் ஆசைகள் எல்லாம் நிராசையாகி விடுமா?

கிரிதரனுடன் சிறு வயது முதலே கட்டிக் கொள்ளப் போகிற ஆசையுடன் பழகியவள் எவ்வளவு கனவுகளை வைத்திருப்பாள்? ஆசை ஆசையாய் மனதில் எவ்வளவு கோட்டைகளைக் கட்டியிருப்பாள்?

கால்கள் முடங்கிப் போனதும் கிரிதரனுக்கு தான் சுமையாக இருக்கக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காக.. தனது கனவுக் கோட்டைகளை எல்லாம் தகர்த்து விட்டு, ஒன்றுமே இல்லாதது போல் தன்னை கிரிதரனுக்கு மணமுடித்து வைக்கப் பார்க்கிறாளே!

எவ்வளவு பெரிய மனது அவளுக்கு?

அவளுக்காக, அந்த நல்ல மனதுக்காக நாம் கைமாறு செய்ய வேண்டாம்?



வேலையை விட்டு விடுவது, கிரிதரனை விட்டு விலகிச் செல்வது... எல்லாம் நல்லதுதானே? ரஞ்சனிக்கு நன்மை செய்யும் முயற்சிதானே?

யோசித்த தேவி அதையே கிரிதரனிடம் உறுதியாய் எடுத்துரைக்க ஓரிரு நிமிடங்கள் பதில் சொல்லாமல் சிந்தித்தவன், "இரு தேவி, அதைவிட இன்னொரு யோசனை எனக்குத் தோன்றுகிறது. அதை நீ செய்யலாம்" என்றான்.

"என்ன யோசனை.. ஸார்?"

"உனக்கு யாரோ ஒருவருடன் திருமணம் நடப்பது போல் ஒரு ஏற்பாடு செய்து.. ரஞ்சனியையும் நம்பச் செய்து விட்டால்..."

கிரிதரன் சாதாரணமாய்ச் சொல்ல கண்கள் விரிய திடுக்கிட்டுத்தான் போனாள் தேவி.

"ஸார்.. என்ன சொல்கிறீர்கள்?"

"அட... பதற வேண்டாம். நான் சொல்வது நிஜம் அல்ல. சும்மா ஒரு ஏற்பாடுதான்... நடிப்புதான்..."

"அதற்காக கல்யாண விஷயத்தில் யாராவது இப்படி விளையாடுவார்களா?"

"ம்ஹூம்..! விளையாட மாட்டார்கள் தான். ஆனால் நடக்கப் போவது ஒரு நாடகம் மாதிரி. நான், நீ, ரஞ்சனி மூவருக்கு மட்டும்தான் தெரியப் போகிறது..."

"நீங்கள் சொல்வது புரியவில்லை ஸார்..."

"இரு. புரியும்படி விளக்குகிறேன்..." என்றபடி கிரிதரன் தன் திட்டத்தை விவரித்தான். அதன்படி கிரிதரனின் நெருங்கிய நண்பன் ஒருவனை தேவிக்கு நிச்சயம்

செய்திருக்கும் மாப்பிள்ளை போல் நடிக்க வைத்து ரஞ்சனியை நம்ப வைப்பானாம்..."

அவன் சொல்லச் சொல்ல திட்டத்தைக் கேட்டு மலைத்துத்தான் செய்தாள் தேவி.

## 20

தேவிக்கு கிரிதரன் சொன்னதைக் கேட்டதும் அர்ஜுனன் பாஞ்சாலியை மனைவியாய் கொண்டு வந்தது பின் பாஞ்சாலி பாண்டவர் ஐவருக்கும் மனைவியான கதைதான் ஞாபகம் வந்தது.

பாஞ்சால நாட்டு இளவரசியும் பேரழகுப் பதுமையானவளுமான பாஞ்சாலியின் சுயம்வரம் சுயம்வர மண்டபத்தில் பல நாட்டு அரசர்கள் பங்கேற்க நடக்க ஆரம்பித்தது.

இந்த அழகில் சிறந்த பாஞ்சாலியை யாருக்கு அடைய கொடுத்து வைத்திருக்கிறதோ என அரசர்கள் அனைவரும் வாய் பிளக்கக் காத்திருந்தனர்.

சுயம்வரத்திற்கான போட்டியை பாஞ்சாலியின் தமையன் திருஷ்டத்தும்மன் அறிவித்தான். அதன்படி மண்டபத்தின் நடுவில் கம்பம் ஒன்று உள்ளது. அதன் உச்சியில் தங்க மீன் உள்ளது. அந்த தங்க மீன் விசிறியோடு பொருத்தப்பட்டு சுற்றிக் கொண்டே இருக்கும்.



கம்பத்தின் அடியில் ஓர் நீர் நிலை உள்ளது. அதில் மேலே சுழலும் மீனின் பிம்பம் தெளிவாகத் தெரியும். அதனால் நீர்நிலையைப் பார்த்தபடி மீனுக்கு குறிவைத்து அம்பு எய்ய வேண்டும். அப்படி குறி பார்த்து மீனை வீழ்த்துபவர்க்கு பாஞ்சாலி மாலையிடுவாள். என்றான்.

அரசர்கள் ஒவ்வொருவராய் போட்டியில் கலந்து கொண்டனர். ஆனால் ஒவ்வொருவரும் அம்பை எய்து மீனை குறி பார்த்து வீழ்த்த முடியாமல் தோல்வியே தழுவினர்.

அந்தணர்கள் வரிசையில் இருந்த அர்ச்சுனன் எழுந்தான். வில்லில் அம்பு பூட்டினான். நீர் நிலையில் தெரிந்த பிம்பத்தைக் கவனித்து மீனை வீழ்த்தினான். அவனது அழகில் மயங்கிப் போன பாஞ்சாலியும் அவனுக்கு மாலையிட்டாள்.

இதனால் அர்ச்சுனன் மகிழ்ச்சியாய் அவளை அழைத்துக் கொண்டு தன் இல்லம் வந்தான். அப்போது குந்தி வீட்டிற்குள் இருந்தாள்.

வாயிலில் நின்ற அர்ச்சுனன், "அம்மா அபூர்வமான பரிசொன்று கொண்டு வந்திருக்கிறேன்..." என்றான்.

குந்தியும் அவன் சொல்வது எது என்று புரியாமல், "அர்ச்சுனா, நீ கொண்டு வந்த பரிசை நீங்கள் ஐவரும் பகிர்ந்து கொள்ளுங்கள்" என்றாள் பாஞ்சாலியைப் பார்க்காமலே.

அந்நேரம் பார்த்து மற்ற மகன்களும் அங்கு வந்து விட... தாய்... அர்ச்சுனன் பரிசாய் கொண்டு வந்திருப்பது பெண் என்பதையறியாமல் இப்படி அவசரப்பட்டு சொல்லி விட்டாளே..! என திகைத்து வருந்தினர்.

அதுபோல்தான் தேவியும் கிரிதரன் யாரையோ மாப்பிள்ளை போல் நடிக்க ஏற்பாடு என்றதும் விபரீதம் புரியாமல் சம்மதித்து விட்டாள்.

ரஞ்சனிக்காக.. தான் இப்படியெல்லாம் செய்ய சம்மதிக்கிறோமோ.. அல்லது கிரிதரனுக்காக தான் இப்படியெல்லாம் செய்ய சம்மதித்து விட்டோமா.. எப்பதும் தேவிக்கே புரியவில்லைதான்!

மேலும் கிரிதரன் சொன்ன யோசனை மேலோட்டமாகப் பார்த்தால் முட்டாள்தனமாய்த் தான் தெரிந்தது. ஆனால் நிதானமாய் யோசித்துப் பார்த்தால் அது கூட சரியே என்று தோன்றியது.

வீட்டில் வந்த தேவி அதையே தான் நினைத்தாள். ஏனெனில் இவ்வளவு தூரம் வந்து பிடிவாதம் பிடிக்கும் ரஞ்சனியை வழிக்கு கொண்டு வருவது சிரமமான காரியம்! இப்படித் தடாலடியாப் எதையாவது செய்தால் தான் ரஞ்சனி திருந்துவாள்.

நன்கு அன்று முழுதும் யோசித்த தேவி மறுநாள் கிரிதரனை தேடிப் போய் அவனது யோசனைக்கு சம்மதம் சொன்னாள். முகமலர்ச்சியுடன் அதைக் கேட்ட கிரிதரன் ஒரு கணம் பதில் சொல்லாமல் அவளையே உற்றுப் பார்த்தான்.

''என்ன ஸார் பார்க்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லை...'' என்றபடி மறுபடியும் சிரித்தவன்,

''சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டாயே?'' என்றான்.

''சும்மாச் சொல்லுங்கள்... ஸார்...''

''இப்படி சிரமப்பட்டு நீ நடிப்பதற்கு பேசாமல் நிஜமாகவே நீ யாரையாவது கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதுதானே?''



அவனது கேள்வி அவள் சற்றும் எதிர்பாராதது. அப்படியே அவளை துணுக்குறச் செய்தது. ''என்ன கேட்டீர்கள்? நிஜமாய் யாரையாவது திருமணம் செய்து கொள்ள வேண்டியதென்றா..?'' என்றாள் காதுகளில் சரியாய் விழாதது போல்.

கிரிதரன் மறுபடியும் சொன்னதை அழுத்தந்திருத்தமாய் உச்சரித்துக் காட்டினான்.

அது முன்பைவிட இன்னும் எரிச்சலை அவளுள் அதிகப்படுத்தியது.

ரஞ்சனிக்காக விட்டுக் கொடுக்கலாம்... ஆனால் யாரையாவது கட்டிக் கொள்ள முடியுமா?

பல்லைக் கடித்தபடி அவள் முணுமுணுத்தது அவன் காதில் விழவில்லை.

''என்ன... என்ன.. சொல்கிறாய்?'' என்றான்.

''ஒன்றுமில்லை ஸார்... அதெல்லாம் முடியாத காரியம். நடக்க சாத்தியமில்லாத விஷயம்...''

கிரிதரன் விடுவான் என்று பார்த்தால் விடவில்லை. கொம்பைப் பிடித்து ஆட்டினான்.

''அதுதான் ஏன்.. என்கிறேன்..? உனக்கு இப்போது கல்யாண வயசுதானே? மணப்பெண்ணாய் உட்கார நீ ரெடியாகத்தானே இருக்கிறாய்?''

''நான் ரெடி ஸார். ஆனால்...''

''சொல்லு...''

''மாப்பிள்ளை ரெடியாக இல்லையே! எனக்குப் பிடித்த மாப்பிள்ளையை வலை வீசித் தேட அல்லவா வேண்டும்?''

''ம்ம்.. தேடு நானும் உனக்கு உதவி செய்யத் தேடுகிறேன். எப்படிப்பட்ட மாப்பிள்ளையை நீ எதிர்பார்க்கிறாய்? உன் விருப்பு வெறுப்புகளை பட்டியல் இடு. நான் பார்த்து தேடுகிறேன்...''

கிரிதரன் கேட்டுவிட்டு அவளையே பார்க்க அவளும் பதில் சொல்லாமல் அவனையே உறுத்த பார்வை பார்த்தாள்.

''ஸார்.. நான் விரும்பும் மாப்பிள்ளை எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லட்டுமா?''

''சொல்லு...''

''சாட்சாத்.. உங்களைப் போல உங்களது உருவத்தில் உங்களது குணத்தில் இருக்க வேண்டும். அது தான் நான் விரும்புவது...''

சட்டென படபடப்புடன் அவள் சொல்லி முடிக்க... அவன் அதிரத்தான் செய்தான். ஆனால் மறுகணமே அதை பெரும் ஹாஸ்யமாக எடுத்துக் கொண்டான்.

''சரிதான்.. நேராக ஜெராக்ஸ் கடைக்கு கூட்டிப்போய் ஒரு காப்பி என்னை எடுத்து தந்து விட்டுமா?'' என்றான் சிரிப்புடன்.

தான் சீரியஸாய் கேட்டோமோ இல்லையோ அவன் விளையாட்டாய் நினைத்து விட்டானே என்று எண்ணினாள் அவள்.

கிரிதரனோ மறுபடியும் யோசித்து அவனே பேசினான்.

''புரிகிறது.. தேவி.. ரஞ்சனியின் அவசரத்திற்காக நீ திடுதிப்பென்று மாப்பிள்ளை தேடி கல்யாணம் செய்து கொள்ளவும் முடியாது. அதற்கான அவகாசமும் இல்லை..



அதனால் நான் முன்பு சொன்ன வழிதான்... நடிக்க வேண்டியதுதான்...!'' என்றான்.

''நடிப்பதற்கு நான் ரெடி ஸார். ஆனால் ரஞ்சனி நம்ப வேண்டும்...'' என்றாள் தேவி.

கிரிதரன் நெற்றியைச் சுருக்கி யோசித்தவன், ''அவள் நம்பும்படி சில வேலைகள் செய்'ய வேண்டும். செய்யப் போகிறேன். முதலில் உன் போட்டோக்கள் சிலவற்றை என்னிடம் கொடு...''

''போட்டோக்களா எதற்கு ஸார்?''

''தேவி முதலில் போட்டோக்களை கம்ப்யூட்டர் மூலம் டச் செய்து நீ வேறு ஒரு ஆணுடன் இருப்பது போல மேட்ச்சிங் செய்யப் போகிறேன்.''

''அப்புறம் என்ன செய்வீர்கள்?''

''ரஞ்சனியிடம் கொண்டு போய் காட்டுவேன். நீ ஒருவரை காதலிப்பதாகவும் அவரையே கட்டிக் கொள்ள இருக்கிறதாகவும் விஷயத்தை நம்பும்படி சொல்வேன்...''

''நீங்கள் சொன்னால் நம்பி விடுவாளா ரஞ்சனி?''

''நம்ப மாட்டாள்தான்! அதன் பின் போட்டோவில் இருந்தவரை நேரில் உன்னுடன் ஜோடியாய் கொண்டு போய் காட்டுவேன்..''

''அட... இது என்ன கூத்து?''

''பயப்படாதே.. தேவி அவன் என்னுடைய நெருங்கிய நண்பன் சேகர்தான். சொல்லப் போனால் அவனுக்கு திருமணம் ஆகி குழந்தையும் இருக்கிறது. இந்த விஷயம் ரஞ்சனிக்குத் தெரியாது. அதனால் அவன் உன்னுடன் காபி ஷாப்பில், ரெஸ்ட்டாரண்டுகளில் இருப்பது போல்

நீ போஸ் கொடுத்து ஒரு நடிப்பு நடிக்க வேண்டும். அவ்வளவுதான். ரஞ்சனி நம்பி விடுவாள்."

கிரிதரன் சீரியஸாய் சொல்லியவாறு தேவியைப் பார்க்க.. சிந்தனையான முகத்துடன் உதடுகளைப் பிதுக்கினாள் தேவி.

"என்ன தேவி..?"

"எனக்கு.. என்னவோ.. நம்பிக்கை இல்லை ஸார்."

"நம்பிக்கை இல்லையா?"

"ரஞ்சனி இது போன்ற டிராமாக்களில் ஏமாறுகிற ஆள் இல்லையென நினைக்கிறேன்."

"இல்லை தேவி. நாம் நம்பும்படி நடித்தால் ரஞ்சனி நம்பி விடுவாள்..."

"நம்பும்படி என்றால்...?"

"கொஞ்சம் இயல்பாய்.. உண்மையிலே சேகர் உனது காதலன் கட்டிக் கொள்ளப் போகிறவன் என்பது போல் எண்ணி..."

அவன் சொல்வதன் அர்த்தத்தை உணர்ந்தபோது தேவிக்கு எரிச்சல்தான் வந்தது.

சட்டென நெற்றியில் புரண்டு கண்களை மறைத்த மயிர்கற்றைகளை பின்னுக்குத் தள்ளியவள், "அதற்சாக யாரோ ஒருவரோடு நான் கட்டிப் பிடித்தா நடிக்க முடியும். நீங்களே சொல்லுங்கள் ஸார்?" என்றாள் கோபமாக.

அதற்கு கிரிதரன் கைகளை உயர்த்தி அவளை சாந்தப் படுத்துவது போல் பேசினான்.

"அப்படியில்லை தேவி. நான் சொல்ல வந்தது வேறு..."



"வேறு... என்றால்?"

"ரஞ்சனியை ஏமாற்ற அவ்வளவு தூரம் நாம் செல்ல வேண்டியதில்லை. வேறு.. சின்ன விஷயங்களைச் செய்தாலே போதும்..."

"சின்ன விஷயங்களா?"

அவள் கேட்டதும் நெற்றியைத் தேய்த்த கிரிதரன், "உதாரணத்திற்கு ஒன்று சொல்லட்டுமா?" என்றான்.

"சொல்லுங்கள்..." என்றாள் அவள்.

"அதாவது.. கல்யாண இன்விடேஷன்! உனக்கும் சேக ருக்கும் திருமணம் நடப்பது போல் கல்யாணப் பத் திரிகை..."

"கல்யாணப் பத்திரிகையா?"

"ஆனால்.. நிஜமானது அல்ல... போலியானது. கம்ப் யூட்டர் பிரிண்டிங்கில் சும்மாவாக ஒரு நாலைந்து இன்விடேஷன்களை நிஜம்போல் தயாரித்து முகூர்த்த தேதியெல்லாம் குறிப்பிட்டு ரஞ்சனியிடம் நீட்டுவேன். ரஞ்சனியும் நம்பி விடுவாள்..."

கிரிதரன் தன் திட்டம் முழுவதையும் விளக்கினான்.

தேவிக்கு அதில் உடன்பாடில்லைதான். இருந்தாலும் வழியில்லாமல் அவனுக்காக தலையசைத்தாள்.

மறுநாள் கிரிதரன் கேட்டபடியே அவளது போட்டோக் களை கொண்டு போய் கொடுத்தாள். கிரிதரனும் அதை வாங்கி தனக்குத் தெரிந்த கம்ப்யூட்டர் நிபுணான நண்பன் ஒருவன் மூலம் மேட்சிங் வேலைகளைச் செய்தான்.

அந்த போட்டோக்கள் ரெடியானதும் தேவியிடம் தான் முதலில் வந்து காட்டினான்.

தேவி வாங்கிப் பார்த்தவளின் முகம் கறுக்கத் தான் செய்தது.

யாரோ முன் பின் தெரியாத ஒருவனோடு அவள் சிரித்தபடி, கைகளைப் பிடித்தபடி.. இன்னும் சில புகைப் படங்களில்.. லேசாய் அணைத்தபடி கூட தெரிய.. முகம் சுளித்தாள் தேவி.

''என்ன.. இது கண்றாவி ஸார்..''

அவள் முகம் அருவையாகவும் எரிச்சலாகவும் மாறு வதைக் கவனித்த கிரிதரன் பக்கம் வந்து மெல்ல கைகளைப் பிடித்தான்.

''மன்னித்துக் கொள் தேவி. இது கொஞ்சம் ஓவரான விஷயம்தான். எந்தப் பெண்ணும் இப்படி ஒரு செய் கைக்கு சம்மதிக்க மாட்டாள். ஆனால்.. ஆனால்.. நம் ரஞ்சனிக்காக நீ.. இதைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்...''

மெல்லிய கெஞ்சல் குரலில் கிரிதரன் கேட்டபோது அவளால் கொஞ்சவும் மறுத்துப் பேச முடியவில்லை.

''புரிகிறது... ஸார்..'' என்றாள்.

அதைவிட அவன் தன் கைகளை உரிமையாய் பிடித் துக் கொண்டிருந்தது அவளை ஆச்சரியமும் படுத்தியது.

வெகு அருகில் நேருக்கு நேராய் அவன் நின்று பேசியபோது.. தன்னையறியாமல் அவனை ரசிக்கத்தான் செய்தாள். அந்த நெடுநெடு உயரம், கம்பீரமான உடற்கட்டு, தீர்க்கமான ஆளைத் துளைக்கும் பார்வை,



அந்த வரிசைப் பற்கள் தெரிய சிரிக்கும் வசீகரச் சிரிப்பு.. எல்லாமே அவளைக் கவர்ந்து.. தொடர்ந்து கண்களை விரித்தபடி அவனையே பார்த்துக் கொண்டிருக்க.... சட்டென உணர்வுக்கு வந்தவள்... தனது தடுமாற்றமான நிலையைக் கண்டு திடுக்கிடத்தான் செய்தாள்.

ஆனால் கிரிதரனோ அதைக் கொஞ்சமும் உணர வில்லை. அதே நேரத்தில் அவள் கைவிரல்களை பிடித்த பிடியையும் விடவில்லை. சொல்லப் போனால் முன்பை விட விரல்களோடு விரல்களை நன்றாகக் கோர்த்துக் கொண்டு ஏதோ உரிமையுடன் காதலியுடன் பேசுவது போல் பேசிக் கொண்டிருந்தான்.

அவளுக்கு அவனது பிடியிலிருந்து விரல்களை விடுவிக்கவும் மனமில்லை. அதே நேரத்தில் இப்படி தொடர்ந்து கொண்டிருக்கும் ஸ்பரிசம் அவள் மனதில் என்னென்ன கனவுகளையோ தட்டி எழுப்பிக் கொண் டிருந்தது.

அவளும் முன்பு ஒரு கட்டத்தில், ஒரு சூழ்நிலையில் கிரிதரனை விரும்பினவள்தானே?

மனதில் அவனைப் பற்றிய கதாநாயகக் கனவுகளோடு தூங்காமல் கொள்ளாமல் வலம் வந்தவள்தானே?

என்ன.. ரஞ்சனி விஷயம் தெரியாத வரை கனவுகளை வளர்த்தாள். கிரிதரனை ஆசையாய் உள்ளூர ரசித் தாள். ஆனால்.. என்று ரஞ்சனியைப் பார்த்தாலோ.. கிரிதரன் ரஞ்சனி பற்றி விளக்கினானோ.. அன்றே.. லேசாக அரும்பி மொட்டவிழப் போன காதலை அவளே குழி தோண்டி புதைக்க வேண்டியதாயிற்று!

ஆனாலும் கிரிதரனை அவளால் முற்றிலும் மறக்க முடியவில்லை. அவள் மனதோரத்தில் அவன் அவ்வப் போது எட்டிப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான். அது.. எப்போதாவது.. அவள் மட்டும் யாருக்கும் தெரியாமல் நினைத்துப் பார்க்கும் மென்மையான உணர்வு.. இனிமை யான கனவு...

அப்படியே யோசித்துக் கொண்டிருந்தவள் மெல்ல உணர்வுக்கு வந்தாள். தான் இருந்த சூழ்நிலையைப் பார்த்து பயங்கரமாய் திடுக்கிடத்தான் செய்தாள்.

கண்களை மூடியபடி கிறக்கமாய் கிரிதரனின் நெஞ்சில் அவள் சாய்ந்து கொண்டிருக்க, அவளை ஏறக்குறைய அணைத்துப் பிடித்தபடி கிரிதரன்!

## 21

தேவி ஒரு கணம் திடுக்கிட்டுத்தான் போனாள்.

காதலி போல் அவள் கிரிதரனின் நெஞ்சில் கிறக்கமாய் சாய்ந்து கொண்டிருக்க.. அவனும் காதலன் போல் உரிமையுடன் அவளை நெஞ்சில் சாய்த்து அணைத்துப் பிடித்தபடி.

அவள்தான் அப்படி மயக்கத்தில் ஏதோ நினைவில் இருந்து விட்டாள்.



ஆனால் அவன்..?

நன்கு கண்களை விரித்துக் கொண்டு சுயநினை வோடுதானே இருக்கிறான்?

அவனுக்கு என்ன வந்தது?

அவள்தான் உணர்ச்சி வேகத்தில் புத்தி இழந்தாள் என்றால்.... அவனாவது தடுத்திருக்கலாம் அல்லவா? அவன் பாட்டுக்கு காதலன் போல் பிடித்துக் கொண்டு அல்லவா இருக்கிறான்?

"ஸார்.. என்ன.. இது..? விடுங்கள்..!"

சட்டென சுதாரித்து திமிறி அவன் பிடியிலிருந்து விலகி வெளிவந்தாள் அவள்.

குங்குமமாய் சிவந்த முகத்துடன் உதடு துடிக்க.. அவனை நிமிர்ந்து பார்க்கும் திராணியின்றி குனியத்தான் செய்தாள் அவள்.

மெல்ல.. குனிந்தவளின் முகம் நிமிர்த்தினான் கிரிதரன்.

"ஸார்.. என்ன.. என்ன.. இது.. நீங்கள்.. இப்படி அணைத்துப் பிடித்துக் கொண்டு...?"

திக்கித் திணறி கோபமாய் கேட்டாள் அவள்.

அவன் குறும்புப் புன்னகையாய் அவளைப் பார்த்தான்.

"நடந்தது... என்ன தெரியுமா?" என்றான்.

"என்ன நடந்தது?"

"நீ.. பாட்டுக்கு பேசிக் கொண்டு வந்தவள் அப்படியே மயங்கி கிறக்கமானது போல் என் நெஞ்சில் விழிகள் தாழ சாய்ந்து கொண்டாய்.. நானும் சரி.. திடீரென மயக்கமாகி விட்டாயோ... என நெஞ்சோடு சாய்த்துப் பிடித்துக் கொண்டேன்.."

அவன் சொல்லச் சொல்ல.. கன்னக் கதுப்புகள் சூடேற.. அவளால் குனியத்தான் முடிந்தது.

அவன் சொல்வது உண்மைதானே!

அவள் தானே... வலியப் போய் அவன் நெஞ்சில் சாய்ந்திருக்கிறாள்!

இப்படி புத்தி தடுமாறியது ஏன்? உணர்வுகளை நிலைத்தும் தன்னை, சுயநினைவை இழக்கும் அளவுக்கு பலஹீனமானவளா.. அவள்..?

அவள் தன்னைத் தானே கேட்டுக் கொண்டு அதிர அவளை அடுத்த கேள்வியில் மேலும் தடுமாற வைத்தான் கிரிதரன்.

''உன்னிடம் இன்னொரு முக்கியமான விஷயத்தைக் கண்டு பிடித்து விட்டேன் தேவி...'' என்றான் பீடிகையாய்.

''என்னிடமா..? என்ன விஷயம் அப்படி ஸார்?'' என துணிந்து கேட்டவள், உள்ளூர இவன் என்ன சொல்லி விடப் போகிறானோ.. என பயப்படத்தான் செய்தாள்.

''அதாவது கண்களை விரித்து விழித்துக் கொண்டே தூங்குகிற பழக்கம் உனக்கு உண்டு என்பதை...'' சொல்லியபடி கிரிதரன் சிரிக்கவும், அவளுக்கு நிம்மதி ஏற்பட்டது.

''ஆனால் தேவி.. ஒன்று நான் கேள்விப்பட்டிருக் கிறேன். இந்தப் பொல்லாத காதல் வசப்பட்டவர்கள் தான் இப்படி அடிக்கடி பிரமை பிடித்தாற் போல் தங்களை மறந்து எதையோ வெறித்துக் கொண்டு அடிக்கடி கனவுல கிற்கு சென்று விடுவார்கள். என்று அப்படி எதுவும் உனக்கு உண்டா தேவி?''



அவன் சொல்லும் போதே வேகமாய் அதை மறுத்து விட வேண்டும் என பிரயாசைப்பட்டவள் அதே அவசரத் துடன், ''ஐயோ, பொல்லாத காதல் எல்லாம் எனக்குக் கிடையாது ஸார்...'' என்றாள் வார்த்தைகளின் விபரம் புரியாமலே.

''அப்படியானால் பொல்லாத இல்லாமல் நல்லவித காதல் உனக்கு உண்டா?'' சிரிப்பாய் அவளை மடக்கி னான் கிரிதரன்.

''சே... சே.. அப்படியெல்லாம் இல்லை.. ஸார்...''

சொன்னவள் உள்ளுக்குள் பேச்சு வேறு விதமாகச் செல்வதை உணர்ந்தாள். இப்படித் தொடர்வது ஆபத்து என்பதை அறிந்தவளாய் டக்கென ரஞ்சனி விஷயத்திற்கு பேச்சைத் திருப்பினாள்.

''ஸார்... இந்த ரஞ்சனி விஷயம்.. ரஞ்சனியிடம் இன்றே இந்த போட்டோக்களை காண்பித்து சொல்லப் போகிறீர்களா?''

மறுகணமே கிரிதரனும் சுவாரசிப்புடன் சுவாரஸ்யமாய் ரஞ்சனி பற்றி பேச ஆரம்பித்து விட்டான்.

''ஆமாம் தேவி. இன்றே ரஞ்சனியிடம் போட்டோக்கள் காட்டி விடுகிறேன். அவள் நம்புகிறாளோ.. இல்லையோ நேராய் முதலில் உன்னிடம் தான் வந்து விஷயத்தைக் கேட்பாள்.. நீ என்ன சொல்வாய்?''

''நான்.. என்ன சொல்ல வேண்டும் ஸார்?''

''நீ.. அந்த.. போட்டோவில் இருக்கும் சேகர் உன் னுடைய காதலன் என்றும் விரைவில் கட்டிக் கொள்ள இருப்பதாக மட்டும் சொல்லி விட்டு அகன்று விடு. மற்றதை எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்...''

தேவியும் பலமாய் தலையாட்டினாள்.

ஆனால் அவர்கள் போட்ட திட்டம் மறுநாளே சாயம் வெளுப்பது போல் வெளுத்து விட்டது.

போட்டோக்களை கிரிதரன் ரஞ்சனியிடம் ஆவலாய் கொண்டு போய் காட்ட -

அவள் ரஞ்சனி சிரித்தபடி தன் பேக்கில் இருந்த இன்னொரு புகைப்படத்தை எடுத்து நீட்டினாள். அது அந்த சேகரின் குடும்ப புகைப்படம்! இது எப்படி இவளது கைகளில்?

கிரிதரன் திகைக்க சிரித்தாள் ரஞ்சனி, "நீங்கள் உங்கள் நண்பரை வைத்து என்னை பயமுறுத்த திட்டம் போடுவது எனக்கு முன்பே தெரியும். அதான் உங்களது குட்டை உடைக்க கல்யாணமான சேகரின் குடும்ப புகைப்படம். இவரா தேவியின் காதலர்? சொல்லுங்கள்... கிரிதர்... கிரிதர் டியர்?"

ரஞ்சனி வினவ தலையை தொங்கப் போட்டுக் கொண்டு அசடு வழிய நடந்தான் கிரிதரன்.




ரஞ்சனி தனது திட்டத்திற்காகவோ என்னவோ அடுத்து வந்த ஒரு வாரமும் நல்ல பிள்ளையாய் நடந்து கொண்டாள்.



மாலையில் தன்னை தினம் பார்க்க வரும் தேவியிடம் எவ்வித குறும்பும் பண்ணவில்லை. கிரிதரன் பேச்சை எடுத்து காதல் கதல் என சீண்டவில்லை. வழக்கம்போல் கலகலப்பாய் பேசினாள். சிரித்தாள்.

தேவிக்கே அவள் கிரிதரனைப் பற்றி தன்னிடம் சீண்டிப் பேசாதது ஆச்சரியப்படுத்தியது. அதனாலே மெல்ல அவள் கிரிதரன் பேச்சை எடுத்து அவனை ரஞ்சனி திருமணம் செய்து தனக்கென்று ஒரு வாழ்க்கை ஏற்படுத்துவது பற்றி சொல்லிப் பார்த்தாள்.

மற்ற நேரமாய் என்றால் ரஞ்சனி அதை பிடிவாதமாய் மறுத்து விடுவாள் அல்லது முகத்திலடித்தாற்போல் ஏதாவது சொல்லி விடுவாள். ஆனால் இம்முறை தேவி சொன்னதற்கு, "அது பற்றி யோசிக்கிறேன். கொஞ்சம் அவகாசம் கொடு..." என்று சொல்லி அவளை ஆச்சரியப்பட வைத்தாள்.

தேவிக்கும் ரஞ்சனி மனதை மாற்றி விடலாம் என்ற நம்பிக்கை மெல்ல துளிர்விட ஆரம்பித்தது. அதை அன்றே கிரிதரனிடமும் சொல்ல.. அவன் மிகவும் சந்தோஷம் கொண்டவனாய், "தேவி.. இதுதான்... சமயம் தொடர்ந்து பேசி எப்படியாவது அவளை திருமணத்திற்கு சம்மதிக்க வைத்து விடு..." என்றான் ஆவலோடு.

தேவியும் மும்முரமாய் கிரிதரனை பற்றி தினம் பேசக் கொடுத்துக் கொண்டிருக்க... புலி பதுங்கிப்பது பாயத்தான்.. என்பது போல் ரஞ்சனி அப்படி நடந்து கொண்டது.. ஒரு விபரீதமான காரணத்திற்காகத்தான் என்பது மறுவாரம் புரிந்தது.

மறுவாரம் வழக்கம் போல் தேவி கிரிதரன் பங்களாவிற்கு ரஞ்சனியைத் தேடிச் சென்ற போது அந்த விபரீதம் நடந்தது.

ரஞ்சனி வழக்கமாய் தோட்டத்துப் பக்கம் இருப்பவள் அங்கு இல்லாமல் போகவே தேவி தேடினாள். பணியாள், ரஞ்சனி பின்னால் ஸ்விம்மிங் பூல் பக்கம் இருப்பதாய் சொல்ல.. பங்களாவின் பின்புறம் தேடிப் போனாள்.

பங்களாவின் பின்புறம் விஸ்தாரமான கிரவுண்ட் பகுதியில் நீச்சல் குளம் ஒன்று இருந்ததை கிரிதரன் வீட்டைச் சுற்றி காண்பிக்கும்போது அவள் பார்த்திருந்தாள். அதற்குப் பின் அங்கு போக சந்தர்ப்பம் இல்லாததால் அவள் போகவில்லை. மேலும் கிரிதரன் தான் காலை மாலை என இரு வேளைகளிலும் அங்கு நீந்திக் குளிப்பதாகவும் அது அவனுக்குப் பிடித்தமான பொழுது போக்கு எனவும் கேள்விப்பட்டிருக்கிறாள்.

ரஞ்சனியும் உடன் சென்று பேசிக் கொண்டிருக் கிறாளா.. என்ற நினைப்புடன் அங்கு சென்றாள்.

தேவி நீச்சல் குளப் பகுதியை நெருங்க அவள் நீச்சல் குளப் பகுதியை நோக்கி வருவதை ரஞ்சனி முன்பே கவனித்து விட்டாள்.

மறுகணம் படபடவென வீல் சேரை சுற்றிக் கொண்டு பதட்டமாகவே அவள் பக்கம் வந்தாள்.

''தேவி.. தேவி.. தேவி...'' என பதறியபடி வரும் அவளைக் கண்டு தேவியே திடுக்கிட்டு விட்டாள்.

''என்ன.. என்ன.. ரஞ்சனி..?'' என அவளும் பதற.. ரஞ்சனி திரும்பிப் பின்னோக்கி கை காட்டினாள்.

ரஞ்சனி காட்டிய இடத்தைப் பார்த்த தேவி மேலும் அதிர்ச்சியானாள்.

அங்கு நீச்சல் குள விளிம்பு திண்டுப் பகுதியில் கிரிதரன் எவ்வித சலனமுமில்லாமல் நீளமாய் கை கால்களை பரப்பி படுத்தபடி கிடந்தான்.



"என்ன.. என்ன.. ரஞ்சனி.. கிரிதரனுக்கு என்ன ஆயிற்று?"

''தேவி... என்னவென்று தெரியவில்லை. வழக்கம் போல் நீச்சல் அடிக்கப் போனவர். ரொம்ப நேரம் அமிழ்ந்த தாலோ... என்னவோ வெளியே வந்ததும் அப்படியே பேச்சு மூச்சில்லாமல் மூர்ச்சையாகி விட்டார். எனக்கு ரொம்ப பயமாய் இருக்கிறது. நான் டாக்டரிடம் போன் செய்கிறேன் நீ.. நீ.. ஒன்று செய்கிறாயா.

''என்ன கிரிதரன்.. பேச்சு.. மூச்சில்லாமல்.. மூர்ச்சை யாகி விட்டாரா?''

தேவி.. அதிர்ச்சியாய் கேட்க... ரஞ்சனி பரபரவென அவள் தோள்களைத் தட்டினாள்.

''யோசிக்கவெல்லாம் நேரமில்லை.. தேவி. நான் டாக்டருக்கு போன் செய்கிறேன். நீ கிரிதருக்கு செயற்கை சுவாசம் கொடுத்து மூச்சு வர வை..''

- ரஞ்சனி சொல்லியபடி அகலப்போக தேவி புரியாமல் ஒரு கணம் விழித்தாள்.

"செயற்கை சுவாசமா?"

''அதான்.. உன் வாய் வழியாக காற்றை அவர் வாயில் வைத்து ஊத வேண்டும். சீக்கிரமாகச் செய். நான் டாக்டருக்கு போன் செய்கிறேன். இல்லாவிட்டால் கிரிதரனின் உயிருக்கே ஆபத்தா...''

சொல்லிவிட்டு ரஞ்சனி அதே வேகத்தில் வீல் சேரை சுழற்றிக் கொண்டு டெலிபோனை நோக்கி படபடப்பாய் செல்ல ஆரம்பித்தாள்.

தேவியும் பதட்டமாகவே வேறு வழி தெரியாதவளாய் கிரிதரன் கிடக்கும் இடம் நோக்கி ஓடினாள்.

நீச்சல் குள மார்பின் பரப்பில் கிரிதரன் அசைவுகளற்று அப்படியே கால் நீட்டி கிடந்தான்.

பதட்டம் கூடியவளாய் குனிந்தாள்.

ரஞ்சனி சொன்னதைத் தவிர வேறு எதுவும் அவள் ஞாபகத்திற்கு வரவில்லை.

அப்படியே குனிந்து அவனுக்கு செயற்கை சுவாசம் அளிக்க.. தன் உதடுகளை வேகமாய் அவன் வாய்ப் பக்கம் கொண்டு போய் பொருத்தினாள். காற்றை அவள் ஊத ஆரம்பிக்கவும்.. படுத்துக் கிடந்த கிரிதரன் திடீரென ஏற்பட்ட ஸ்பரிச அதிர்ச்சியில் அவளை அப்படியே கட்டியணைக்கவும் சரியாயிருந்தது.




தேவி அப்படியே திடுக்கிட்டு விட்டாள்.

அவள் செயற்கை சுவாசம் அளிக்க குனிந்து உதடுகளை வைத்து காற்றை ஊத முயற்சிக்க.. அதுவரை படுத்து உணர்ச்சியில்லாமல் கிடந்தவன் சட்டென கரங்களால் அவளை இறுகக் கட்டியணைத்தான்.

சுவாசத்திற்காக அவள் உதடுகளில் படர்ந்த அவனது ரோஜா இதழ்களை வேகமாய் அவனது முரட்டு உதடுகள் சிறைப்பிடித்தது.

சுவாசத்திற்காக.. காப்பாற்றச் சென்றவளின் நிலை இனிமையாய் முத்தம் கொடுப்பது போல் ஆனது.



சட்டென அவளை இறுகக் கட்டியணைத்த அவனும் அதைத்தான் செய்து கொண்டிருந்தான்.

அவளும் பதட்டத்தில் புத்தி பேதலித்துக் கொண்டிருந் தவள் சட்டென கிடைத்த இதமான அணைப்பில் மென்மையான முத்தத்தில் அப்படியே கிறக்கமாய் மயங்கித்தான் போனாள்.

ஓரிரு நிமிடங்கள் தன்னிலை மறந்தபடி இறுக்கமான அணைப்பில் முத்த கிறக்கத்தில் கிடக்க... படபடவென கேட்ட அதீத கைத்தட்டலும்... அடக்க முடியாத சிரிப்பும் அவர்கள் காதில் விழுந்து நினைவுக்குக் கொண்டு வந்தது.

முதலில் சுதாரித்தது தேவிதான்!

மூர்ச்சையாகி விட்டான் என பதறி சுவாசம் கொடுக்க வந்தால்... இங்கு... இவன் இறுக கட்டிக் கொண்டு.. உதடுகளில் முத்தம் கொடுத்துக் கொண்டு.. இங்கு என்னதான் நடக்கிறது?

புத்தியில் எல்லாம் விநோதமாய் உரைக்க சரேலென அவன் பிடிகளில் இருந்து துள்ளி விலகினாள் அவள்!

அவன் கிரிதரனும் அப்போதுதான் முழு உணர்வுக்கு வந்திருந்தான் என சொல்ல வேண்டும். கண் திறந்து பார்த்தவன் தேவி தன் பிடியில் இருப்பதையும் தான் உணர்ச்சி வசத்தில் முத்தமிட்டுக் கொண்டிருப்பதையும் உணர்ந்து அதிர்ந்தான் செய்தான்.

தேவி சட்டென விலகியதும் தன் நிலை உணர்ந்து மெல்ல எழுந்தான்.

தேவியை அவன் பார்க்க.. சிவந்து போன முகத்துடன் அவனை நிமிர்ந்து பார்க்க திராணியற்றவளாய் அவள் நாணி மருகிக் கொண்டிருப்பது தெரிந்தது.

ரஞ்சனியோ கைதட்டலுடன் அடக்க முடியாத வெடிச் சிரிப்பை இன்னமும் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

அவர்கள் இருவருக்கும் மெல்லப் புரிந்தது.

இம்முறையும் ரஞ்சனி விளையாட்டுத் தனமாய் ஏமாற்றியிருக்கிறாள். அவளது நடிப்பை உண்மையென நினைத்து இருவரும் ஏமாந்திருக்கின்றனர்!

ரஞ்சனியே தான் போட்ட திட்டத்தை விளக்கினாள்.

தேவி கிரிதரனை தேடி வருவதைக் கவனித்தவள் குறும்பாய் பிளான் செய்திருக்கிறாள். அதாவது குளித்து முடித்து வெளிவந்த கிரிதரனிடம் முதலில் போட்டி போல் பெட் கட்டி இருக்கிறாள். அதாவது கிரிதரன் ஐந்து நிமிடம் எவ்வித சலனமுமில்லாது கட்டை போல் அப்படியே கிடக்க வேண்டும். என்ன பேச்சு பேசினாலும் சிரிக்கவோ.. எழுந்துவிடவோ கூடாது.. என்பதுதான் போட்டி.

அவனிடம் அப்படி பெட் கட்டி ரஞ்சனி இருக்கச் செய்து விட்டு தேடி வந்த தேவியிடம் பதட்டம் காட்டி அவன் மூர்ச்சையாகி விட்டது போல்.. உடனே செயற்கை சுவாசம் கொடு.. என்றெல்லாம் பதறி நடிப்பு நடித்திருக்கிறாள்.

அவளது பதட்டமான நடிப்பை உண்மையென்று நம்பிய தேவியும் அப்படியே முன்பின் யோசியாது செயற்கை சுவாசம் செய்ய முயல... திடீரென தன் உதடுகளில் மென்மையான ரோஜா இதழ்கள் ஒற்றிய இனிமையான ஸ்பரிசத்தில் தன் நிலை இழந்து உணர்ச்சி வசப்பட்டவனாய் கிரிதரனும் அவளை இறுக கட்டிப் பிடித்து முத்தமழை பொழிய ஆரம்பித்து விட்டான்.

ஆக... அவர்கள் 'முத்தமிட' பிளான் போட்ட ரஞ்சனி அவள் நினைத்தபடியே சாதித்து விட்டாள்!



தேவியால் அதற்கு மேல் ஒரு நிமிடம் கூட அங்கு நிற்க முடியவில்லை. நிமிர்ந்து இருவர் முகத்தையும் பார்க்க முடியவில்லை. குங்குமமாய் சிவந்த முகத்துடன் அப்படியே குனிந்து படபடவென அங்கிருந்து ஓடி விட்டாள்.

கிரிதரனுக்கு கொஞ்ச நிமிடங்கள் ஒன்றும் ஓடவில்லை..

பக்கத்தில் வந்து சிரித்துக் கொண்டிருந்த ரஞ்சனியை முறைத்துக் கோபமாய் முறைத்தான்.

''ரஞ்சனி.. என்ன இது விளையாட்டு..? இப்படியா செய்வது..? உன் புத்தி ஒழுங்காய் இருக்கிறதா.. இல்லை பேதலித்து விட்டதா?''

அவன் கடுமையான குரலில் வினவவும் சட்டென சிரிப்பை நிறுத்திய ரஞ்சனி அவனையே உற்றுப் பார்த்தாள்.

''ஹலோ.. கிரிதரன்... ஸார்... என்ன கேட்டீர்கள்.. புத்தி பேதலித்து விட்டதா. என்று தானே..? அது.. எனக்கா இல்லை.. உங்களுக்கா?''

''என்ன சொல்கிறாய் நீ?''

''தேவி வந்து செயற்கை சுவாசம் செய்ய முயன்றதும் நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும்? உடனே அவளை விலக்கி தள்ளி விட்டிருக்க வேண்டியது தானே? அதை விட்டு விட்டு அவளை இறுகப்பிடித்து முத்தமிட்டது... எதற்கு? யார்.. உங்களை அப்படிச் செய்யச் சொன்னது? கொஞ்சம் சொல்லுங்களேன். என் அருமை.. கிரிதரன் டியர்?''

ரஞ்சனி இப்படிக் கேட்டதும் கிரிதரனுக்கு சுருக்கென்றது.

ஆமாம்.. ரஞ்சனி.. கேட்பது சரிதானே? தேவி சட்டென அப்படி செய்வது தெரிந்ததும் சுதாரித்து அவளைத் தள்ளி விட்டிருக்கலாமே?

அப்படிச் செய்யாமல் உணர்ச்சி வசப்பட்டு கட்டிப் பிடித்து விட்டோமே! ஒரு கணம் தன் நிலை கண்டு கிரிதரனுக்கு ஆச்சரியமாகவும், நம்ப முடியாததாகவும் இருந்தது.

ஒரு போதும் இது போன்ற தடுமாற்றம் அவனுக்கு நிகழ்ந்ததில்லை.

எந்த ஒரு விஷயத்திலும் நேர்மையாய் மிகத் தெளிவாய் முடிவெடுக்கக் கூடியவன். இதில் சறுக்கி விட்டானே!

அவனே.. அவனது செய்கையை எண்ணி அவமானப் படும்படி ஆயிற்றே!

அவன் அப்படி திகைத்து கற்சிலை போல் ஓரிரு நிமிடங்கள் அப்படியே இருக்க.. ரஞ்சனி சட்டென அவன் பக்கம் வந்தவள் அவன் தோள்களைத் தட்டினாள்.

''என்ன.. என்ன.. யோசிக்கிறீர்கள்? எதனால் இப்படி நிகழ்ந்தது என்றுதானே?''

கிரிதரன் பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான்.

''நான் சொல்லட்டுமா?''

கேட்டுவிட்டு ரஞ்சனியும் ஒன்றும் சொல்லாமல் அவனையே புருவம் உயரப் பார்க்க, ''என்ன சொல்லப் போகிறாய்..? சொல்..!'' என்றான்.

''வேறென்ன? காதல்தான்!'' என்றபடி ரஞ்சனி கைகளால் இதயம் போல் அபிநயத்தும் காட்டினாள்.

''காதலா?''



''ஆமாம்.. கணம் உங்களுக்கும்... உலக மகா ரதியாய் வீற்றிருக்கும் ஏற்பட்டிருக்கும் கண்ணுக்குப் புரியாத காதல் தான் காரணம்...''

''சே..! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.. உளறாதே!''

''உளறவில்லை. அப்படி ஒன்றுமில்லாமல் இருந்து துளிர் விடுவதுதான் காதல்... அதுதான் உங்கள் இருவருக்குமிடையே தீ போல் படர்ந்து பற்றிக் கொண்டு இருக்கிறது. எல்லாம் அந்தப் பொல்லாத மன்மதன் செய்யும் விளையாட்டு...''

அவள் சொல்லச் சொல்ல.. கிரிதரன் முகம் சிவக்க கோபம் கொண்டவன் அதே எரிச்சலில் அவசரமாய் கைகளை உயர்த்தினான்.

''ரஞ்சனி.. நிறுத்து..! வாயை மூடு.. முதலில்!'' கோபமாய் கத்தியபடி விடுவிடுவென அங்கிருந்து அகன்றான் அவன்.

ரஞ்சனி அவன் வீராப்பாய் செல்வதை அடக்க முடியாத சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதற்குப் பின் வந்த நாட்களில் கிரிதரன் தீவிர சிந்தனையில் இருந்தான். ரஞ்சனி விஷயத்தை இனியும் இப்படியே விடுவது ஆபத்து. உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும் என ரொம்பவும் ஆராய்ந்தான்.

கடைசியில், 'ரஞ்சனியை உடனடியாக திருமணம் செய்து கொள்ள வேண்டும்' என்ற உறுதியான முடிவிற்கு வந்தான் கிரிதரன்.

## 24

கிரிதரன் தான் எடுத்த முடிவை முதலில் தேவியிடம்தான் சொன்னான். தேவி காது மடல்கள் அதிர கேட்டவள் அப்படியே அதிரத்தான் செய்தாள்.

"என்ன.. கட்டாயத் திருமணமா?'' என்றாள்.

கிரிதரன் இறுக்கத்தோடுதான் தலையசைத்தான்.

''கிட்டத்தட்ட அது மாதிரித்தான். வேறு வழியில்லை தேவி...''

''ஆனால் ரஞ்சனி இதற்கு ஒப்புக் கொள்ள வேண்டுமே ஸார்?''

''வேறு வழியில்லை. அவள் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் மணவறையில் அவளை உட்கார வைத்து கட்டாய தாலி கட்டி விட வேண்டியதுதான்...''

''இதெல்லாம்... சொல்ல நன்றாக இருக்கும். ஆனால் நிஜத்தில் நடக்குமா ஸார்? ஒரு பெண்ணை அப்படி விருப்பமில்லாமல் பலவந்தப்படுத்தி தாலி கட்ட மற்றவர்கள்தான் விட்டு விடுவார்களா?'' தேவியின் கேள்வி நன்கு புரிந்தாலும் இறுக்கம் குறையாமலே தலையசைத்தான் அவன்.

''மற்றவர்களைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. எனக்கு ரஞ்சனிதான் முக்கியம்...''



''எனக்கு நீங்கள் நினைப்பது புரிகிறது ஸார். ஆனால்.''

''சொல் தேவி...''

''எதற்கும் இது பற்றி ரஞ்சனியிடம் கடுமையாகப் பேசிப் பார்க்கலாமே ஸார்...''

''ஹூம்...!'' என்றபடி அசால்ட்டாய் தோள்களைக் குலுக்கியபடி கிரிதரன் சிரிக்க ஆரம்பித்தான்.

''ரஞ்சனியைப் பற்றி உனக்குத் தெரியாது. அவள் வீணான இந்த மிரட்டல் பூச்சாண்டிகளுக்கெல்லாம் பயப்படவே மாட்டாள். மேலும் நாமெல்லாம் வெறும் மிரட்டல்தான் செய்வோம். அவள் நிஜமாகவே மிரட்டாமல் விபரீதமான காரியங்களை செய்து விடுவாள்...''

''நீங்கள் சொல்வதும் சரிதான். அப்படிப்பட்ட பெண்தான் ரஞ்சனி...''

''அதனால்தான். இந்த திடீர் கல்யாண ஏற்பாடு பற்றி முடிவு செய்தேன் தேவி.''

''உங்கள் திட்டம்தான் என்ன ஸார்...?''

தேவி கேட்க நீளமாய் மூச்சிழுத்தபடி சொல்ல ஆரம்பித்தான் கிரிதரன்.

''அதாவது தேவி இனியும் ரஞ்சனியைக் கெஞ்சிக் கொண்டிருந்தால், மயிலிடம் இறகு கேட்ட கதையாகி விடும். அதனால் அவளிடம் விஷயத்தை மட்டும் சொல்லி விட்டு அவள் பதிலைக் கேட்காமல் மடமடவென்று கல்யாண ஏற்பாடுகளை ஆரம்பித்து விட வேண்டும். அப்படிச் செய்து விட்டால் அவளால் ஒன்றும் செய்ய முடியாது. கல்யாணத்திற்கு ஒத்துக் கொண்டு மணமேடையில் உட்கார்ந்துதான் ஆக வேண்டும்... நானும் பலவந்தம் காட்டி தாலியும் கட்டி விடுவேன். என்ன சொல்கிறாய்?''

படபடவென சொல்லி முடித்து விட்டு கிரிதரனையே அவனையே பார்க்க.. பதிலுக்கு அவனும் அவளையே பார்த்தான்.

''என்ன பார்க்கிறாய் தேவி?''

''நீங்கள் சொல்வதெல்லாம் சரி. கட்டாயக் கல்யாணம் செய்து தாலியெல்லாம் கட்டி விடலாம். ஆனால்...''

''ஆனால் என்ன?''

''குடும்பம் நடத்துவது எப்படி ஸார்? தாலி கட்டினால் மட்டும் புருஷனாகி விட முடியுமா? சேர்ந்து குடும்பம் நடத்த இருவருக்கும் அன்பு தேவையல்லவா? இம்முறை தலையை மேலும் கீழும் ஆட்டினான் கிரிதரன்.

''அது.. எனக்குப் புரிகிறது தேவி. ஆனால் அதைப் பற்றியெல்லாம் இப்போது யோசித்துக் கொண்டிருக்க அவகாசம் இல்லை. என்னைப் பொறுத்த வரையில் முதலில் ரஞ்சனியின் கழுத்தில் தாலியைக் கட்ட வேண்டும். மற்றவைகளை எல்லாம் பின்னால் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். ஏனெனில்...''

''சொல்லுங்கள்.. ஸார்...''

''நாளுக்கு நாள் ரஞ்சனியின் போக்கு அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. விபரீதமாய் திட்டம் போடு கிறாள். உன்னையும் என்னையும் சேர்த்து வைப்பேன் என அடம் பிடிக்கிறாள்.''

அவன் சொல்வதையெல்லாம் அப்படியே ஆமோதித் தாள் தேவி.

''உண்மை ஸார். போகிற போக்கைப் பார்த்தால் ரஞ்சனி இந்த கட்டாய கல்யாண ஏற்பாட்டைத் தவிர வேறு எதற்கும் அடங்க மாட்டாள் என்றே தோன்று கிறது.''



''அதையேதான் நானும் நினைக்கிறேன். அவளுக்கு எப்படியாவது அவள் விரும்பிய முன்பு கனவு கண்ட வாழ்க்கையை கொடுக்க வேண்டும் என நினைக்கிறேன்.''

கிரிதரன் இப்படிச் சொன்னதும் அவள் மனதில் வேறொரு கேள்வி ஓடியது. அதற்கும் பதில் தெரிந்து கொள்ள விரும்பினாள் தேவி.

''ஸார்.. இன்னொரு சந்தேகம்.. ஒரு கேள்வி.. உங்களிடம் கேட்கலாமா?''

''தாராளமாகக் கேள்... தேவி...''

இரண்டு கைகளையும் விரித்தான் கிரிதரன்.

''அதாவது ரஞ்சனியை உண்மையிலே நீங்கள் விரும்பித்தான் மண முடிக்க விரும்புகிறீர்களா... அல்லது அவளது கால் முடமான நிலையைக் கண்டு இரக்கப்பட்டு கல்யாணம் பண்ணச் சம்மதிக்கிறீர்களா?''

தேவி இப்படிக் கேட்டதும் ஒரு கணம் பதில் சொல்லாமல் நெற்றியில் கை வைத்தபடி யோசித்தான் கிரிதரன்.

''அதாவது ரஞ்சனியை உண்மையிலே விரும்பி கல்யாணம் செய்து கொள்கிறேனா.. இல்லை பரிதாபப் பட்டு கல்யாணம் செய்கிறேனா? இதைத்தானே கேட்க வருகிறாய்?''

''ஆமாம் ஸார்..''

தேவி படபடவென தலையாட்டினாள்.

ஆனால் கிரிதரன் அடுத்த நொடி சொல்லிய பதில் அவளை அப்படியே திடுக்கிடச் செய்தது.

''எனக்கே தெரியவில்லை...'' என்றான் கிரிதரன் விட்டேற்றியாக.

''என்ன உங்களுக்கே தெரியவில்லையா? என்ன சொல்கிறீர்கள் ஸார்?''

தேவி அதிர்ந்து போய்தான் கேட்டாள்.

கிரிதரனோ வெறுமையாய் அருமையுடன் உதடுகளைப் பிதுக்கினான்.

''ஒரு உண்மையை, இதுவரை யாரிடமும் சொல்லாத ஒரு விஷயத்தை உன்னிடம் சொல்லட்டுமா தேவி?''

''சொல்லுங்கள் ஸார்...''

''ஆரம்பம் முதல் சிறு வயது முதலே எனக்கு ரஞ்சனி மீது நல்ல ஈடுபாடு உண்டு. இனிக்க இனிக்க பேசும் அவள் குணம் பிடிக்கும். ஆனால் நிச்சயம் ஒரு போதும் அந்தக் காதல் மட்டும் எனக்கு அவள் மீது கிடையாது. அது எனக்கு வந்ததுமில்லை. நான் சொல்வது உண்மை தேவி...''

கிரிதரன் தீர்க்கமாய் திட்டவட்டமாய்ச் சொன்னான்.

அதைக் கேட்டு தேவி அதிர்ந்தான் செய்தாள். உள்ளூர மனதில் அவளையறியாமல் ஒருவித சந்தோஷம் அமைதி பரவுவதை அவளுள் உணர முடிந்தது.




கிரிதரன் விளையாட்டுக்குச் சொல்லவில்லை. நிஜமாகத்தான் சொல்லியிருந்தான். அதே போல் சும்மாவும் இருக்கவில்லை. அவன் சொன்னது போல் நிஜமாகவே கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான்.



முதலில்.... வெளிநாட்டில் வசிக்கும் தன் பெற்றோர்களிடம் பேசி சம்மதம் வாங்கியதோடு மட்டுமில்லாமல் அவர்களை வரவழைக்கவும் செய்தான்.

திருமண ஐயரை அழைத்து நாள் குறித்தான். அடுத்த பதினைந்து நாட்களில் அவனுக்கும் ரஞ்சனிக்கும் நகரின் பிரபலமான மண்டபத்தில் வைத்து திருமணம்!

ரஞ்சனி மறுத்தும் பிடிவாதமாய் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டான்.

தேவிக்கு உள்ளுக்குள் இதையெல்லாம் கண்டு திக்கென்று தான் இருந்தது.

நிஜமாகவே கிரிதரன் ரஞ்சனியை திருமணம் செய்து கொள்ளப் போகிறான். கிரிதரனுக்கு ரஞ்சனி மனைவியாகப் போகிறாள் என்பதையெல்லாம் உணரும் போது இதயத்தில் அவளையறியாமல் ஒரு நூலிழை அறுந்து தொங்குவதைப் போல் உணர்ந்தாள். எதையோ ஒன்றை இழந்து விட்டாற் போல் அடிக்கடி தவித்தாள்.

ஆனாலும் ரஞ்சனி ஊனமான அந்த நிலையையும் கள்ளங் கபடமற்ற அவள் சிரிப்பையும் பார்க்கும்போது, என்ன இருந்தாலும் அவளும் ஒரு பெண்தானே? அவளுக்கென ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்வது நியாயம்தானே? எனவும் தோன்றியது.

மேலும் ரஞ்சனிக்கு இந்த நிலையில் கிரிதரனைத் தவிர வேறு யாராலும் இப்படி ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியாது என்பதும் புரிந்தது.

இவ்விஷயத்தில் உறுதியாய் இருக்கும் கிரிதரனை நினைத்து உள்ளூர பெருமிதமும் கொண்டாள். பணபலமும், கம்பீர ஆளுமையும் கொண்ட அவனுக்கு, நல்ல மனிதனாய் இரக்க சுபாவம் உள்ளவனாய் கொண்ட குணமும் இருப்பது ஆச்சரியமே என வியந்தாள்.

என்னதான் உறவுக்கார பெண் என்றாலும், இப்படி யொரு நிலையில் எந்தவொரு சங்கோஜமுமில்லாமல் முழு மனதுடன் ரஞ்சனியைக் கட்டிக் கொள்ள அவன் முன் வந்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது என நினைத்தாள். அத்தோடு நில்லாமல் ஒரு நாள் அலுவல கத்தில் மாலையில் தனியாய் இருந்த அவனிடம் தனது மனமுவந்த பாராட்டையும் மகிழ்ச்சியையும் வெளிப் படுத்தினாள்.

தேவி தான் இப்படி என்றால் ரஞ்சனி முதலில் திரு மணத்திற்கு எதிர்ப்பு காட்டியவள் பின் தேவியைப் பார்த்து விநோதமாய்ச் சிரித்தாள்.

''எனக்கும் கிரிதருக்கும் ஒரு நாளும் திருமணம் நடக்கப் போவதில்லை...'' என்றாள்.

''ஐயோ... ரஞ்சனி... நீ.. இப்படியெல்லாம் சொல்லக் கூடாது... இன்னமும் பிடிவாதம் பிடிக்காமல் உனக்கான வாழ்க்கையை அமைத்துக் கொள்.''

''திருமணம் நடக்கப் போவது உனக்குத்தான். கிரிதருடன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப் போவது நீதான்..!'' சுட்டு விரலை தன்னை நோக்கி காட்டியபடி ரஞ்சனி சிரிப்பதை உணர்ந்து தேவி நிஜமாகவே பயப் படத்தான் செய்தாள்.

இந்த ரஞ்சனி மறுபடியும் ஓரகத்தனமாய் பிளான் செய்து கல்யாணத்தை நிறுத்தி விடுவாளோ? என்ற அச்சமே அவளுக்கு ஏற்பட்டது.

தனது நினைப்பையும் ரஞ்சனியின் மனநிலையையும் உடனே கிரிதரனிடம் சொல்லவும் செய்தாள்.

கிரிதரன் தன் முடிவில் உறுதியாய் இருந்தான்.

''நீ.. ஒன்றும் பயப்பட வேண்டாம் தேவி. அவள் கோமாளித்தனமாய் இது போல் ஏதாவது உளறிக்



கொண்டுதான் இருப்பாள். இன்னும் பத்து நாள் தான். பத்து நாளில் வலுக்கட்டாயமாய் அவள் கழுத்தில் தாலி என்ற மூக்கணாங்கயிறு போட்டு விடுவேன். அதற்குப் பின் அவள் என்ன செய்கிறாள்... என்று பார்ப்போம்...''

கிரிதரன் தைரியம் சொல்லி விட மனம் நிம்மதி யடைந்தவளாய் தன்னை அமைதிப் படுத்திக் கொண் டாள் தேவி.

ஆனாலும் நாள் நெருங்க நெருங்க ரஞ்சனி கல்யாணம் பற்றி கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் இருந்தது அவளை கலவரப்படவே செய்தது. அது போதாதென்று கல்யாணத்திற்கு ஒரு வாரம் முன்பு, ''தேவி, உனக்கு ஒரு பரிசு...'' என்றபடி ரஞ்சனி ஒரு கவரை நீட்டினாள்.

புரியாமல் வியப்பாய் கவரை வாங்கி உள்ளே பார்த்த தேவி அப்படியே அதிர்ந்தாள்!

உள்ளே... புகைப்படங்கள்! நீச்சல் குள விளிம்பில் கிரிதரனைக் கட்டிக் கொண்டு தேவி முத்தமிட்ட மாதிரி இருக்கும் போட்டோக்கள்!

தேவி திடுக்கிட்டுப் பார்த்தாள்.

ரஞ்சனி சிரிக்க ஆரம்பித்தாள்.

''அன்று உனக்குத் தெரியாது. தேவி. கையில் காமிரா வேறு வைத்திருந்தேன். அதான் சட்டென க்ளிக் பண்ணி விட்டேன். ஆனாலும்.. பார்.. போஸ் எவ்வளவு அழகாய் இருக்கிறது? ரதியும் மன்மதனும் நேரில் வந்தாற்போல் காதல் ரசத்துடன்...''

''ஐயோ, நிறுத்து ரஞ்சனி!'' என்ற தேவி கோபமாய் அந்த போட்டோக்களை கிழித்துப் போட்டாள்.

அதையும் கிரிதரனிடம் சொன்னபோது அவனும் அவளை ஆறுதல் படுத்தி, ''பயப்பட வேண்டாம்..

இன்னும் ஒரு வாரம் தான். அதன் பின் ரஞ்சனியின் கழுத்தில் தாலி கட்டி விடுவேன்..." என்றான்.

அவன் சொன்னது அச்சமயத்தில் அவளை அமைதியடையச் செய்தாலும் இன்னொரு புறம் கிரிதரனும் ரஞ்சனியும் திருமணக் கோலத்தில் நிற்பது போன்ற காட்சி மனத்திரையில் தோன்றி அவளைத் தடுமாறவும் செய்தது.

அதிலும் அடிக்கடி கிரிதரன் தழுவியது. சட்டென மயக்கத்தோடு அவன் முத்தமிட்டதை உணர்ந்தது எல்லாம் இரவில் அவள் ஞாபகத்திற்கு வந்து இம்சித்தது.

கூடவே இன்னொன்றையும் யோசித்தாள் அவள். உணர்ச்சி என்பது இருவருக்கும் பொதுவான ஒன்று தானே! தனக்கு தன் மனதில் இப்படியெல்லாம் உணர்ச்சிகள் தோன்றும்போது... அவன் கிரிதரனுக்கு மனதில் சலனம் இல்லாமலா இருக்கும்? என நினைத்தாள்.

அவள் நினைத்தது போலவே இரவு கிரிதரனை குற்ற உணர்வொன்று எழுந்து வாட்டிற்று. என்னதான் இருந்தாலும் தேவியிடம் அன்று தன்னிலை மறந்து உணர்ச்சி வசப்பட்டு நடந்து கொண்டோமே.. என அடிக்கடி நினைத்தான். அந்த நினைப்பை விட தேவியை, மென்மையாய் பூக்குவியலாய் அணைத்த அந்த ஸ்பரிசத்தில் தனக்கு ஏற்பட்ட அந்த தவிப்பு, ஸ்பரிசங்களின் இனிமையான தடுமாற்றம் அவனை நினைக்க வைத்து இம்சித்தது.

தான் அப்படியெல்லாம் தன்னை மறந்து நடந்து கொண்டதால்தான்.. ரஞ்சனி.. இப்படி திருமணத்திற்கு மறுக்கிறாளா? எனக் கூட நினைத்தான்.

ஆனால் ஒரு விஷயம் அவனுக்கு தெளிவாய்ப் புரிந்தது. தனக்கு ஏற்பட்ட கால் ஊனத்தை பெரிதாய் ரஞ்சனி எடுத்துக் கொண்டு.. இனி தன்னை கிரிதரனோடு



மனைவியாய் இணைத்து அவனை சங்கடப்படுத்தக் கூடாது என அவளே.. அப்படி ஒரு முடிவை எடுத்துக் கொண்டாள். அதற்கேற்றாற்போல் அழகான தேவி வரவும்.. அவளே.. கிரிதரனுக்கு பொருத்தமானவள் என முடிவு செய்து காய்களை நகர்த்துகிறாள்.

தனது ஊனத்திற்காக தன்னுடைய மன உணர்வுகளை எல்லாம் கொன்று.. பெரிதாய் தியாகம் செய்யப் பார்க்கிறாள்!

ஆனால்.. இதை விடக்கூடாது...

ரஞ்சனி.. முக்கியம்! அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துத் தருவது நமது கடமை! அதில் எக்காரணம் கொண்டும் நாம் பின் வாங்கக் கூடாது!

கிரிதரன் பெரிதாய் மனதில் உறுதியெடுத்து நடமாடிக் கொண்டிருக்க.. கல்யாணத்திற்கு முந்தைய நாளான திங்கட்கிழமை அதிகாலையில் ரஞ்சனியை வீட்டில் காணவில்லை!

## 26

ரஞ்சனியை வீட்டில் காணவில்லை.

ஆனால் சரியாக பத்து மணிக்கு அவளிடமிருந்து போன் மட்டும் வந்தது.

"ரிஜிஸ்தர் ஆபீஸில் இருக்கிறேன். உடனே வாருங்கள்..!"

விஷயம் கேட்டு தேவி படபடப்பாகி விட்டாள்.

அதைவிட கிரிதரன் பெரும் பதட்டத்தில் இருந்தான்.

''யோசிக்க நேரமில்லை..! வா.. ஏறு..!'' என்றபடி கிளம்பி காரை எடுக்க தேவி அவசரமாய் ஏறிக் கொண்டாள்.

நகரின் மையப் பகுதியில் இருந்த ரிஜிஸ்தர் ஆபீஸ் நோக்கி புயல் வேகத்தில் காரைச் செலுத்தினான்.

அடுத்த பத்து நிமிடங்களில்.. டயர்கள் கிறீச்சிட அவனது கார் நின்றது.

இறங்கி தேவியும் கிரிதரனும் ரிஜிஸ்தர் அலுவலகத்தினுள் ஓடினார்கள்.

உள்ளே.. தயாராய் மாலைகளை கையில் பிடித்தபடி ரஞ்சனியும் கூடவே... ஒரு தாடி இளைஞனும்!

அப்போதுதான் இருவரும் கவனித்தனர்.

அந்தத் தாடி இளைஞனும்.. ரஞ்சனியைப் போலவே கால்கள் முடமாகி வீல் சேரில் அமர்ந்தபடி.

அதிர்ச்சியாய் பார்த்து இருவரும் திகைக்க...

அவர்களைப் புன்னகையுடன் பக்கத்தில் வரும்படி சைகை செய்தாள் ரஞ்சனி.

''ர..ஞ்..ச..னி.. என்ன இது?''

பதறிக் கேட்ட கிரிதரனை நோக்கி அமைதியாய் கைகளை உயர்த்தினாள் ரஞ்சனி.

''பதறாதீர்கள்... கிரி.. டியர்.. முதலில் இவரை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். இவர் பெயர் முரளி. என்னுடன் கல்லூரியில் படித்தவர். எனது உற்ற நண்பர்...''

ரஞ்சனி சொல்ல அந்தத் தாடி இளைஞன் இருவரையும் பார்த்து ஸ்னேகமாய் சிரித்தான். பவ்யமாய் நமஸ்கரித்தான்.



ஆனால், அடுத்து ரஞ்சனி சொன்ன வார்த்தைகள்தான் இருவரையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

''நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கிறோம். மனதார விரும்புகிறோம்...!''

கிரிதரன் அதிர்ந்தவனாய், ''என்ன... உளறுகிறாய்.. காதலா..?'' என கோபமாய் கத்த... அவனை கை உயர்த்தி திரும்பவும் சாந்தப்படுத்தினாள் ரஞ்சனி.

''கோபப்படாமல்... அமைதியாய் கேளுங்கள்.. கிரி.. டியர்..! அப்போதுதான் உங்களால் நடந்த எல்லாவற்றையும் சரியாக புரிந்து கொள்ள முடியும்...''

''ம்ஹூம்... அப்படி... என்ன.. கதையை சொல்லிவிடப் போகிறாய்..?''

அலுப்பாய் கிரிதரன் முகத்தை திருப்பிக் கொள்ள,

''முதலில் பொறுமையாய் கேளுங்கள் கிரி டியர்...'' என்றபடி கதைபோல் சொல்ல ஆரம்பித்தாள் ரஞ்சனி.

''கிரி டியர்.. இவர் முரளியும் என்னைப் போல்தான் கால்கள் வலுவிழந்து நடக்க முடியாமல் போனவர்தான். ஆனால்... என்னைப் போல் விபத்தில் ஏற்பட்ட இழப்பு இல்லை. பிறவிலேயே பிறந்தது முதலே அவருக்கு இப்படித்தான். தனக்கு ஏற்பட்டிருந்த குறையை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் துணிச்சலாய் வாழ்க்கையில் முன்னேறியவர்.

அவரது தன்னம்பிக்கையைக் கண்டு வியந்து கல்லூரியில் அவருடன் படிக்கும்போதே நல்ல நட்பை வளர்த்துக் கொண்டேன். நாங்கள் இருவருமே புத்தகப் பிரியர்கள் ஆனதால் லைப்ரரியே கதி என பாதி நேரம் அங்கேயே கிடப்போம். அங்கு சந்தித்து பல விஷயங்கள் சார்க்கதைகள் பேசிக்கொள்வோம்.

இந்த லைப்ரரி பழக்கத்தினால் கல்லூரி வாழ்க்கை முடிந்த பிறகும் எங்களது நட்பு பொது நூலகங்களில் தொடர்ந்தது. தினம் நூலகத்தில் இருவரும் சந்தித்து பேசுவோம்.

அப்போதுதான்.. ஒருநாள் அந்த மோசமான ஆக்ஸி டெண்ட் எனக்கு நிகழ்ந்தது. அந்த விபத்தில் கால்கள் நொறுங்கி... நடக்க முடியாமல் போன நான் அப்படியே நொந்து போனேன்.

இனி.. என் வாழ்க்கையே அவ்வளவுதான்.. என விரக்தியாய் நான் முடிவுக்கு வந்த நிலையில்தான் முரளி விஷயம் அறிந்து என்னைத் தேடி வந்தார். அவர் அப்படி வீல் சேரை சுழற்றியபடி என்னைத் தேடி வந்ததைப் பார்த்ததும் தான் எனக்கு சடாரென பொறி தட்டியது.

ஒரு விபத்தில் ஏற்பட்டு இப்படி ஆகிப்போனதற்கே குமைகிறோமே.. இவர் முரளி.. தன் வாழ்நாள் முழுவதும் இந்த இழப்பை எதிர்கொண்டு துணிச்சலாய் நீச்சலடித்து வாழ்க்கையை சந்தித்திருக்கிறாரே...? என வியந்தேன்.

அந்த வியப்பும் முரளி ஆறுதலாய் சொன்ன வார்த்தை களும் என்னை அடியோடு மாற்றி என்னுள் தன்னம்பிக் கையை வளர்க்க ஆரம்பித்தது. தினம் தினம்.... போனில்.. நேரில் எங்களது பேச்சு தொடர்ந்தது நல்ல நட்பாகி.. மெல்ல... மெல்ல... இனிய காதலாகவும் மலர்ந்தது..."

சொல்லிவிட்டு ரஞ்சனி நிறுத்தி கிரிதரைப் பார்க்க.. கிரிதரன் மறுப்பாய் தலையசைத்தான்.

"நான் நம்ப மாட்டேன். நீ.. எனக்காக.. நான் உன்னை கட்டிக் கொண்டு மனம் கோணிவிடக்கூடாது என்பதற் காக.. இப்படியொரு முடிவை எடுத்திருக்கிறாய்... என நினைக்கிறேன்."

அவன் சொல்ல ரஞ்சனி வேகமாய் அவனும் மறுத்தாள்.



"அதுதான்.. இல்லை.. கிரி டியர்... நான் சொல்வது உண்மை. நான் தினமும் மதியம் லைப்ரரி செல்வதாய் கூறி கிளம்பிச் சென்றதெல்லாம் முரளியை சந்திக்கத் தான். நாங்கள் இருவரும் காதல் மட்டும் செய்யவில்லை. நாங்கள் இருவரும் சேர்ந்து நல்ல புத்தகங்களை வெளியிடும் புத்தக நிறுவனம் ஒன்றும் பெரிய அளவி லான லைப்ரரி ஒன்றும் தொடங்கும் முயற்சியில் இப்போது ஈடுபட்டு வருகிறோம்."

ரஞ்சனி நிறுத்த கிரிதரன் நம்பாதவனாய் புருவங்களை மேலும் உயர்த்தினான்.

"சரி... நீ.. சொல்வது போலவே உங்களுக்குள் காதல் இருக்கட்டும். ஆனால்.. அதை.. ஏன்.. நீ.. என்னிடம் இவ்வளவு நாளும் மறைக்க வேண்டும்? முன்பே சொல்லி இருக்கலாம் அல்லவா?"

ரஞ்சனி அதற்கும் தலையசைப்புடன் சிரித்தாள்.

"சொல்லியிருக்கலாம்தான்... ஆனால்.. நீங்க நம்ப மாட்டீர்கள்... கிரி.. டியர்..! எனக்கு கால் இப்படி ஆகிவிட்டதால் குற்ற உணர்ச்சியில் உங்களைத் தவிர்த்து இப்படி நாடகமாடுவதாய் அல்லவா நினைப்பீர்கள். அதனாலே... நான் உங்களிடம் சொல்லாமல்.. உங் களுக்கு ஒரு ஜோடியைத் தேட ஆரம்பித்தேன். அந்நேரம் பார்த்து தேவி வர... அவளே உங்களுக்கு ஏற்றவள் என முடிவு செய்தேன். அதனாலே.. உங்கள் இருவரையும் காதல் அது இதுவென சீண்டி விளையாட ஆரம்பித்தேன். ஆனால் ஒன்று. உங்களுக்கு அப்படி காதல் கீதல் என்று உருவானதோ... இல்லையோ... எனக்கும் முரளிக்கும் அது அந்தக் காதல் நன்றாக உருவாகி இருந்தது. அதனாலேதான்.. நாங்கள்... பொறுமையாய்... ரகசியமாய் காத்திருந்து... இன்று.. இதோ.. பதிவுத் திருமணம்

செய்யுமளவுக்கு வந்துவிட்டோம்.. இனியாவது.. என்னை.. எங்களை... நம்புகிறீயா.. கிரி.. டியர்...?''

ரஞ்சனி தலை சாய்த்து சிரிப்புடன் கேட்டபடி அவனது முகத்தையே பார்க்கவும் அதற்கு மேலும் இறுக்கமாய் கிரிதரனால் இருக்க முடியவில்லை. கோபம் தணிந்தவனாய்... மெல்ல புன்னகைத்தபடி அவள் பக்கம் போனவன், அவள் கைகளில் தன் கையை வைத்து அழுத்தினான்.

''எனக்குப் புரிகிறது.. ரஞ்சனி. நீ சொல்லும் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்கிறேன். மனப்பூர்வமாய் சம்மதிக்கிறேன். ஆனாலும்.. ஏன்.. இப்படி ரிஜிஸ்தர் திருமணம் செய்ய வேண்டும்? ஊரறிய உன் திருமணத்தை பிரும்மாண்டமாய் நடத்தலாமே?''

''எனக்கும்... அப்படி ஆசைதான்! ஆனால்.. அது... அது.. அவருக்குப் பிடிக்காதே.. எளிமையைத்தான் அவர் ரொம்பவும் விரும்புகிறார்...''

ரஞ்சனி சிரிப்புடன் முரளியை நோக்கி கை காட்டினாள். அதுவரை நடப்பதையெல்லாம் அமைதியாய் பார்த்துக் கொண்டிருந்த முரளி பேச ஆரம்பித்தான்.

''ரஞ்சனி சொல்வதெல்லாம் உண்மை. நாங்கள் இருவரும் மனப்பூர்வமாய் காதலித்துதான் திருமணம் செய்கிறோம். இந்த விஷயத்தை உங்களிடம் சொல்லி புரிய வைப்பதை விட செயலில் இறங்கி காதலை தெரிவிப்போம் என்பதற்காகத்தான் ரிஜிஸ்தர் ஆபீஸ் வரை மாலையும் கையுமாய் வந்து விட்டோம். இப்போது எங்களை புரிந்து கொண்டீர்கள் தானே? உங்களுக்கு நான் ரஞ்சனியை மணந்து கொள்வதில் சம்மதம் தானே?''

முரளி கேட்க பெரிதாய் தலையாட்டினான் கிரிதரன்.

''பூரண சம்மதம். ரஞ்சனியின் விருப்பம்தான் என்னுடைய விருப்பமும்...''



கிரிதரன் உற்சாகமாய் கையசைத்தான்.

கூடியிருந்தோர் வாழ்த்த இருவரும் மாலைகளை மாற்றினர். முறைப்படி ரிஜிஸ்தரில் கையெழுத்திட்டு கல்யாணத்தை பதிவு செய்தனர்.

நடப்பதெல்லாம் நிஜம்தானா.. இல்லை கனவா..? என அதிசயித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் தேவி.

அவள் தோள்களை மெல்ல தட்டிய கிரிதரன் அவளை தனியே வரும்படி சைகை செய்தான்.

மணமக்களாகிவிட்ட ரஞ்சனியையும் முரளியையும் வாழ்த்திவிட்டு ரிஜிஸ்தர் அலுவலகத்தின் பின்பும் இருந்த விஸ்தாரமான தோட்டப்பகுதிக்கு தேவி வந்தாள்.

அங்கு தயாராய் அவளுக்காக கைகளைக் கட்டியபடி காத்திருந்தான் கிரிதரன்.

தேவி வந்ததும் இதழ்களில் குறுநகை ஓட அவள் பக்கம் வந்தான். நிதானமாய் மேலிருந்து கீழ் வரை பார்வையால் ஊடுருவினான்.

தேவியும் மைவிழிக் கண்களை முழுமையாய் விரித்து அவனையே பார்த்தாள்.

இருவரும் ஓரிரு நிமிடம் அசையாமல் ஒருவரையொருவர் பார்த்தபடி அப்படியே நின்று கொண்டிருந்தனர்.

கிரிதரன் அப்படியே பார்த்தவன் கொஞ்ச நிமிடங்களில் பொறுமையிழந்தவன் போல, ''ஹும்...! நீயாக வருவாய் என்று பார்த்தால்... அவ்வளவு லேசில் வரமாட்டாய் போல...'' என்றபடி வேகமாய் அவளை இழுத்து நெஞ்சோடு அணைத்தான்.

''ஐயோ... விடுங்கள்...! விடுங்கள்...!'' என அவன் பிடியிலிருந்து திமிறினாள் தேவி.

''எனக்கு ஒரே குழப்பமாய் இருக்கிறது. இங்கு நடப்பதெல்லாம் கனவா... இல்லை நிஜமா? முதலில் அதைக் கூறுங்கள்...!'' என்றாள் பரிதவிப்புக் குரலில்.

கிரிதரனோ அவளை விடாது இறுக்கிப் பிடித்தவன்,

''எல்லாவற்றையும் உனக்குச் சொல்கிறேன்.. தேவி... ஆனால் அதற்கு முன் நடப்பது நிஜம்தான் என்பதை உனக்குப் புரிய வைக்க இதோ... ஒரு முயற்சி...'' என்றபடி அவளது பட்டான கன்னங்களில் தனது உதடுகளைப் பதித்தான்.

உதட்டு ஸ்பரிசத்தில் கன்னம் சிவக்க வெட்கமாய் குனிந்தவளிடம், ''முத்தம்.. ஞாபகம் வருகிறதா..? நமது காதலே.. இப்படியொரு இனிய முத்தத்தில் ஆரம்பித்து தானே...?'' எனவும் அவள் திடுக்கிட்டுத்தான் அவனைப் பார்த்தாள்.

''என்ன சொல்கிறீர்கள்...? கா..த..லா? நமக்குள்ளா?'' என்றாள் அதிர்வாய்.

''ஓ.. அதற்குள் மறந்துவிட்டாயா..? உனக்கு ஞாபகப் படுத்துகிறேன்... இப்போது..'' என்றபடி சட்டென அவளை மறுபடியும் இழுத்து நெஞ்சார அணைத்துக் காட்டி விடுவித்தான்.

''இப்போது புரிந்துவிட்டதா..?'' என்றான் குறும்பாய்.

அவள் விழிகளை படபடவென அசைத்து ஒன்றும் புரியாத அப்பாவி போல் பார்த்தாள்.

''பு..ரி..ய..வி..ல்லை..'' என்று சொல்லப் போனவள் அவன் மறுபடியும் வேகமாய் அணைக்க வரவே,

''புரிகிறது...'' என்றாள் அவசரமாய்.

''என்ன புரிகிறது?''



''நீங்களே.. சொல்லுங்கள்.. வெட்கமாக இருக்கிறது...'' என்றபடி நிஜமாகவே அவள் வெட்கப்பட்டாள்.

குங்குமமாய்ச் சிவந்த அவள் முகத்தை ஆசையாய் நிமிர்த்தி அவளது மருண்ட விழிகளை தனது காந்த விழிகளால் நேருக்கு நேர் சந்தித்தான்.

''சொல்லட்டுமா..? நானே சொல்கிறேன்...'' என்று ஆரம்பித்தவன், ''தேவி, சிறு வயது முதல் ரஞ்சனிக்கும் எனக்கும் திருமணம் செய்வது என பேசியே வளர்த்து விட்டதால்.. அது நெஞ்சில் பசுமரத்தாணி போல் கடமை யாய் படர்ந்து கொண்டது. அதனாலே... ரஞ்சனியுடன் தான் நமது திருமணம் நமது வாழ்க்கை என முடிவும் பண்ணியிருந்தேன். ஆனால்..''

''ம்ம்.. சொல்லுங்கள்...''

''ஆனால்..எப்போது.. உன் ஸ்பரிசம் பட்டு பூக் குவியலை அணைப்பது போன்றான உனது மென்மை யான அணைப்பு கிடைத்ததோ... அப்போதே... அது துளிர்விட்டு விட்டது... அதுவும்.. என்னையறியாமல்...''

''அது... என்ன 'அது?' அதுவும் உங்களையறியாமல்...?''

அவள் புரியாதவள் போல் கேட்க அவன் இனிமையாய் சிரித்தான்.

''வேறென்ன...? அந்த மன்மதனின் பொல்லாத விளையாட்டுத்தான்... காதல்தான்..!''

''ஓஹோ... இப்போது.. புரிகிறது...!'' என்றாள் அவளும் பலத்த தலையசைப்புடன்.

''என்ன...?'' என்பது போல் புருவங்களை உயர்த்தினான் அவன்.

''எனக்கும் அப்படித்தான் நீங்கள் சொன்ன 'அது' வந்திருக்கிறது. அதனால்தான் நானும் உங்களைப்போல் என்னையறியாமலே... 'அது...' வசப்பட்டிருக்கிறேன்...''

அவள் சீரியஸான குரலில் சொல்ல அவன் அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்தான்.

''சரிதான்.. ஈயடிச்சான் காப்பி கதைதான்..''

அவன் கேலி செய்வதை உணர்ந்தவள், ''ஐயோ.. நிஜம்! நம்புங்கள்..!'' என்றாள்.

அவனோ... ''நம்பும்படி ஏதாவது செய்...'' என்றான் திரும்பவும் குறும்பாய் முகத்தை வைத்துக் கொண்டு.

அவளுக்கு அவன் விரும்புவது நன்றாகப் புரிந்தது. அதனாலே வெட்கத்தை அடக்கிக் கொண்டு தனது ரோஜா இதழ்களை மென்மையாய் அவன் கன்னங்களில் ஒற்றியெடுத்தாள்.

''இனி... நம்புவீர்களே...?'' எனவும் அவன் திருப்தியாய் தலையசைத்து, ''தேவி, இது போன்ற இனிமையான முத்தத்தில் தான் நம் காதல் விதை செடியாய் உருவெடுத்து மரமாய் வளர்ந்து.. அசைக்க முடியாத ஆணிவேர் போலாயிற்று. தெரியுமா?'' என்றான்.

தேவி தன் உதட்டை அழுந்தக் கடித்தபடி சிவந்தவள்,

''தெரியும்.. தெரியும்.. அன்று சுவாசத்திற்காக... என் இதழ்கள் உங்கள் மேல் பட்டபோது.. நீங்கள் வந்த வாந்து.. யப்பா... கட்டவிழ்ந்த காளை போல் பாய்ந்து...'' என்றவள் சட்டென நிறுத்தி, ''என்மீது அவ்வளவு ஆசையா?'' என்றாள்.

அவன் குனிந்து அவள் வெட்கப்படும் அழகை ரொம்பவும் ரசித்தவன், ''இருக்காதா பின்னே..? நீ கொடுத்த அந்த ஒரு முத்தத்தில் என் சுயநினைவே இழந்து போயிற்று. ஆனால் அந்த ஒரு நிமிடத்தில் இன்னொன்றும் என்



புத்தியில் உரைக்கவே செய்தது... அது என்ன தெரியுமா?'' எனவும், அவளும், ''சொல்லுங்கள்...'' என்றாள் ஆவலாய்.

அவன் சிரிப்பு மாறாமல் விளக்கினான்.

''உள்ளுக்குள்.. நீ.. விரும்புவது.. ரகசியமாய் காதலிப்பது இவளைத்தான்... சந்தர்ப்பத்தை விட்டுவிடாதேடா... மடையா.. என ஒரு குரல் கத்திற்று..''

அவள் மறுபடியும், ஓஹோ...! அவன் சொல்வதை ரொம்பவும் ரசித்து, என அழகாய் புருவம் உயர்த்தியவள், ''அதனால்தான் ஐயா கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டு விடாமல் அப்படி செய்தீர்களாக்கும்..?'' என கேலியாய் வினவவும் அவன் அவள் மூக்கைப் பிடித்துக் கிள்ளினான்.

''அங்கு மட்டும் என்னவாம்? நீயும் அந்த முத்தம் தந்த பரவசத்தில் கிறக்கமாய்.. உன் அழகுத் திருமேனி என் அணைப்பில் கட்டுண்டு கிடக்க.. அப்படியே என்னை...''

அதற்கு மேல் அவனை பேச விடாமல் அவள் உதட்டில் விரல் வைத்து தடுத்தாள்.

''நம்.. காதல் விஷயம் போதும்.. ரஞ்சனி.. ரஞ்சனி... பற்றி பேசுவோம்..''

அவனும் முகம் மாறினான்.

''என்ன.. ரஞ்சனிக்கு.. என்ன..?'' என்றான்.

''அவள் சொன்னது... செய்தது.. நிஜம்தானே..? நமக்காக செய்த தியாகம் இல்லையே...?''

''எனக்கும் அந்த பயம்தான் முதலில் இருந்தது. ஆனால் ரஞ்சனி விளக்கியதும் முரளியின் உண்மையான பேச்சும் அவள் சொல்வது உண்மை என புரிய வைத்து விட்டது...''

"ரஞ்சனி.. முரளி.. நல்ல ஜோடிதான்..! ஹப்பா..! இப் போது.. தான்.. உண்மை என உணர முடிந்து நிம்மதி யாகவும் இருக்கிறது..!"

தேவி பெருமூச்சு விட... அவளை பிடித்திருந்த பிடியை இறுக்கி.. அவளது வாகான சிறு இடையை மேலும் வளைத்தான்.

"சரி... தேவி.. நம் விஷயத்திற்கு வருவோம்.. மண்டபம் மணப்பந்தல் எல்லாம் நாளை தயாராய் இருக்கிறது. அதனால்..."

அவள் புரியாதது போலவே நிமிர்ந்தாள். மைவிழிக் கண்கள் படபடப்புடனே அவனைப் பார்த்தாள்.

"அதனால்..?"

"அட... இன்னும் புரியாதது போல் நடிக்கும் நடிப்பை நீ விடவில்லையா..? உன்னை என்ன செய்கிறேன்.. பார்..!"

பொய்க் கோபத்துடன் மீண்டும் அவளை அணைத்து அவளின் செவ்விதழ்களை நோக்கி முன்னேற ஆரம்பித் தான் அவன்.

அவனது அணைப்பில் கண்டுண்டு கிறக்கமாய் விழிகளை மலர்த்தியவள் அப்படியே வெட்கம் படர அவன் நெஞ்சோடு ஒட்டிக் கொண்டாள். அவர்கள் கட்டிப்பிடித்தபடி கிடப்பதை தூரமாய் நின்று பார்த்த ரஞ்சனியும் முரளியும் சிரிப்புடன் ஓசையில்லாமல் நழுவிக் கொண்டிருந்தனர்.

ஓம்

CONNEMARA PUBLIC LIBRARY
1 0 FEB 2009
29 JUL 2010
26 FEB 2011